விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
**Valampurii**

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 தை 23 செவ்வாய்க்கிழமை (05.02.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 048

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## இலங்கைக்கெதிரான குற்றச்சாட்டுகளிற்கு அபிவிருத்தியும் நல்லிணக்கமுமே நல்ல பதில்

### 65ஆவது சுதந்திரதினத்தில் ஜனாதிபதி உரை

(திருகோணமலை)

நாடு பயங்கரவாதிகளிடமிருந்து மீட்கப்பட்டதன் பின்னர் இறைமை, ஒருமைப்பாட்டிற்காக பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. பல்வேறு குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. இவ்வாறான குற்றச்சாட்டுகளுக்கு அபிவிருத்தி மற்றும் நல்லிணக்கமே சிறந்த பதிலாகும் என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

நாட்டின் 65-வது சுதந்திர தினத்தின் தேசிய வைபவம் நேற்று திருகோணமலையில் முப்படைகளின் தளபதியும் ஜனாதிபதியுமான மகிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்றது. அங்கு தேசியக் கொடியை ஏற்றி வைத்து படைகளின் தளபதிகளுக்கு முன்பாக நின்று நாட்டு மக்களுக்கு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், திருகோணமலை துறைமுகத்தை கைப்பற்றும் நோக்கமே வெளிநாட்டுபடைகளுக்கு இருந்தது. நாடு 1948-ம் ஆண்டு சுதந்திரமடைந்த போதிலும் திருகோணமலையில் பிரித்தானியப் படைகள் முகாம்களை அமைத்து தங்கியிருந்தனர். அவர்களின் முகாம்கள் 1956 ஆம் ஆண்டே அங்கிருந்து அகற்றப்பட்டன.

இந்தப் பகுதியில் புத்தர் சிலையை சுற்றி முட்கம்பிகள் அடிக்கப்பட்டிருந்தன. புத்த பெருமானுக்கும் சுதந்திரம் இல்லாத நிலைமை ஏற்பட்டிருந்தது. அந்த நிலைமைக்கு எல்லாம் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு மக்கள் சுதந்திரமாக வாழக்கூடிய வகையில் பயங்கரவாதிகளிடமிருந்து நாடு மீட்கப்பட்டது.

சுதந்திரத்திற்கு மட்டுமல்லாது இறைமை, ஒருமைப்பாட்டிற்காக பல சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இலங்கைக்கு எதிராக வெளிநாடுகளில் விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன. அவர்களுக்கு பதிலளிக்க வேண்டுமாயின் நாட்டில் அபிவிருத்தி முன்னெடுக்கப்படல் வேண்டும். நல்லிணக்கம் இருத்தல் வேண்டும்.

1948ஆம் ஆண்டு நாடு சுதந்திரம் அடைந்ததன் பின்னர் ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்புரிமை கிடைத்தது. ஐக்கிய நாடுகளில் அங்கம் வகிக்கின்ற எந்தவொரு நாடும் ஏனைய நாடுகளின் உள் விவகாரங்களில் தலையிடக் கூடாது என்று ஐக்கிய நாடுகள் சபையின் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்தப் பிரகடனத்திற்கு நாம் கௌரவமளிக்கின்றோம்.

நாட்டில் இன, மத பேதங்கள் இருக்க முடியாது. பயங்கரவாதிகள் தலை தூக்குவதற்கு இடமில்லை. நாட்டில் சகலருக்கும் சமவுரிமை வழங்கப்பட்டுள்ளது. இன, மத வேறுபாடுகள் நாட்டில் அழிவையே

(20ஆம் பக்கம் பார்க்க)

## மகிந்தவின் இந்திய விஜயத்திற்கு தமிழக கட்சிகள் கடும் எதிர்ப்பு!

### கறுப்புக்கொடி போராட்டத்திற்கு தி.மு.க., ம.தி.மு.க. அழைப்பு





(டில்லி)

இந்தியாவுக்கு விஜயம் செய்யும் இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக சென்னையில் பெப்ரவரி 8ஆம் திகதி கறுப்புக்கொடி போராட்டம் நடத்தவுள்ளதாக தமிழகத்தின் தி.மு.க. மற்றும் ம.தி.மு.க. அரசியல் கட்சிகள் நேற்று அறிவித்துள்ளன.

(19ஆம் பக்கம் பார்க்க)

### ரயிலில் மோதி ஒருவர் பலி

(வவுனியா)

வவுனியாவிலிருந்து கொழும்பு நோக்கி புறப்பட்டுக் கொண்டிருந்த கடுகதி ரயிலில் மோதி ஆணொருவர் உயிரிழந்துள்ளார். 55 வயது மதிக்கத்தக்க ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் வவுனியா, ஆலடிப்பகுதியில் நேற்றுத்

(02ஆம் பக்கம் பார்க்க)

## அரசுக்கு எதிராக கொழும்பில் பேரணி

(கொழும்பு)

ஏகாதிபத்திய நாடுகளின் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்றவாறு செயற்படும் மகிந்த அரசின் நடவடிக்கைகள் தொடர்பில் மக்களை தெளிவுபடுத்தி அவற்றுக்கு எதிராக மாபெரும் மக்கள் பேரெழுச்சியொன்றை நாட்டில் உருவாக்கும் நோக்கில் நாளை புதன்கிழமை இரு மக்கள் பேரணிகள் நடத்தப்படும் என்று ஏகாதிபத்திய எதிர்ப்பு மக்கள் இயக்கம் தெரிவித்துள்ளது.

மக்களை அணிதிரட்டுவதனூடாக மட்டுமே சர்வதேச சூழ்ச்சிகளை நாம் முறியடிக்க முடியும். எனவே நாடு முழுவதிலும் உள்ள மக்களை ஒன்று திரட்டும் இந்தப் பேரணியில் ஆளும், எதிர்க்கட்சி அரசியல் பிரமுகர்கள் உட்பட அனைத்து மக்களும் பங்கு கொள்ள வேண்டும் என்றும் அந்த இயக்கம் அழைப்பு விடுத்தது.

கொழும்பிலுள்ள தேசிய நூலகத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஏகாதிபத்திய எதிர்ப்பு மக்கள் இயக்கத்தின் ஊடகவியலாளர்கள் சந்திப்பின்போதே அதன் ஏற்பாட்டாளர் தம்பர அமிலதேரர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையின் உள்விவகாரங்களில் சர்வதேச நாடுகளின் தலையீடுகள் அதிகரித்து வருகின்றன. இதற்கு அரசுதான் வழிவகுத்துகொடுக்கிறது.

இந்நிலை தொடர்வதற்கு இடமளிக்கப்படுமானால் நாடு பாரிய ஆபத்தை எதிர்

(02ஆம் பக்கம் பார்க்க)

### சுதந்திர தினத்தை முன்னிட்டு 1270 கைதிகள் விடுதலை

(கொழும்பு)

இலங்கையின் 65-வது சுதந்திரதினத்தை முன்னிட்டு கடற்படை நேற்று துப்பாக்கி வேட்டுக்களை தீர்த்து மரியாதை செலுத்தியது.

கொழும்பு துறைமுக லைட்ஹவுஸ்பகுதியில் இடம்பெற்ற இந் நிகழ்வில் கடற்படையினரால் 25 துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

(20ஆம் பக்கம் பார்க்க)

## 15 நாடுகளின் தூதுவர்கள் புதுடில்லியிலிருந்து அழைப்பு

(கொழும்பு)

இலங்கையின் 65ஆவது சுதந்திரதின நிகழ்வுகளில் பங்கேற்பதற்காக புதுடில்லியைத்தளமாகக் கொண்டு செயற்படும் 15 நாடுகளின் தூதுவர்கள் கொழும்புக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

திருகோணமலையில் நேற்று நடைபெற்ற சுதந்திர தின நிகழ்வுகளுக்காக இவர்கள் அரசின் விருந்தினர்களாக அழைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் 11 நாடுகளின் தூதுவர்களும், மூன்று நாடுகளின் உயர் ஆணையர்களும், ஒரு நாட்டின் இராஜதந்திர விவகாரங்களுக்கான பொறுப்பதிகாரியும் உள்ளடங்கியுள்ளனர்.

ஆப்கானிஸ்தான், அசர்பைஜான் கசகஸ்தான், பெரு, சுலோவேனியா, ஸ்வீடன், புர்கினா பாசோ, அல்ஜீரியா, டொமினிக்கன் குடியரசு, வெனிசுவேலா, உக்

(20ஆம் பக்கம் பார்க்க)

## வெளிநாட்டுக்கு அனுப்புவதாக கூறி 2 கோடி ரூபாய் பணம் மோசடி

### போலிப் பாதிரியார் கைது

(யாழ்ப்பாணம்)

பாதிரியார் என தன்னை அடையாளப்படுத்திக் கொண்ட நபரொருவர் யாழ். இளைஞர்களிடம் வெளிநாட்டுக்கு அனுப்புவதாகக் கூறி சுமார் இரண்டு கோடி ரூபாய் பணத்தினை மோசடி செய்துள்ளார்.

மோசடி நபரினை யாழ். விசேட குற்றத்தடுப்புப் பொலிஸார் கைது செய்துள்ளதாக யாழ். பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சமன் சிகேரா தெரிவித்தார்.

இருபாலையைச் சேர்ந்த குறித்த மோசடி நபர் தன்னை யொருபாதிரியாராக இனங்காட்டிக் கொண்டு, தனக்கு வெளிநாடுகளுடன் நெருங்கிய தொடர்பு இருப்பதாகவும் கூறி யாழ்ப்பாணத்தினைச்

(20ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்ணிடம் வாய்ச் சேஷ்டை இளைஞன் விளக்கமறியலில்

(மிருசுவில்)

கிழக்கு அராலியில் வீதியால் சென்ற யுவதி ஒருவருடன் வாய்ச் சேஷ்டையில் ஈடுபட்டதாகக் கூறப்படும் இளைஞர் ஒருவர் வட்டுக் கோட்டைப் பொலிஸாரினால் கைது செய்யப் பட்டுள்ளார்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை வேளை கிழக்கு அராலியில் உள்ள விளையாட்டுக்கழக மைதானத்தில் நின்ற இளைஞர் ஒருவர் அவ்வீதியால் சென்று கொண்டிருந்த யுவதி ஒருவருடன் வாய்ச் சேஷ்டையில் ஈடுபட்டுள்ளார்.

மேற்படி யுவதி தனது சதோரர்களிடம் இது தொடர்பாக தெரிவித்ததையடுத்து, அவ்விடத் திற்கு வந்த அவர்கள் குறித்த இளைஞருடன் தகராற்றில் ஈடுபட்டதுடன் வட்டுக்கோட்டை பொலிஸாருக்கும் தெரியப்படுத்தினர்.

சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார் குறித்த இளைஞனை அவ்விடத்தில் வைத்து கைது செய்துள்ளனர்.

இதேவேளை கைது செய்யப்பட்ட மேற்படி இளைஞனை பிணையில் மீட்க அவரது 10 சகாக்கள் பொலிஸ் நிலையம் சென்றுள்ளனர்.

பொலிஸ் நிலையத்தில் பொலிஸாருடன் ஏற்பட்ட முரண்பாட்டை அடுத்து அதில் 6 இளைஞர்கள் கைது செய்யப்பட்டு தடுப்பில் வைக்கப்பட்டு நேற்று அதிகாலை விடுவிக்கப் பட்டனர்.

சேஷ்டையில் ஈடுபட்டதாக கைது செய்யப் பட்ட இளைஞர் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (செ-3-85)

# மீண்டும் பாஸ் கெடுபிடி!

## மாதகல் மீனவர்கள் கவலை

(யாழ்ப்பாணம்)

மாதகல் கடற்பரப்பில் மீண்டும் கடற்படை யினரின் பாஸ் கெடுபிடிகள் நடைமுறைப் படுத்தப்பட்டு உள்ளதாக இப்பகுதி மீனவர் தெரிவிக்கின்றனர்.

மாதகல் கடற்படை முகாமிற்கு புதிய கப்டன் ஒருவர் வந்ததன் பிற்பாடே இப் பாஸ் நடைமுறை கொண்டுவரப்பட்டுள்ளது.

குறிப்பாக இக்கடற்பரப்பில் தொழிலில் ஈடுபடும் வன்னி மாவட்டத்தினைச் சேர்ந்த கடற் தொழிலாளர்களின் முழு விபரங்களும் கடற்படையினரால் திரட்டப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

அங்கு தொழிலில் ஈடுபடும் மீனவர்கள், வள்ளங்கள் என்பவற்றின் எண்ணிக்கையும் அவர்களால் சேகரிக்கப்படுகின்றது. மாதகல் கடற்பரப்பில் ஏற்கெனவே சுதந்திரமாக தொழில் செய்ய முடியாத நிலை காணப் படுகின்ற அதே நிலையில் தற்போது பாஸ் நடைமுறையும் கொண்டுவரப்பட்டுள்ளமையால் அப்பகுதி மீனவர்கள் மேலும் தொழில் கஷ்டங்களினை எதிர்நோக்கி வருவதாக கவலை தெரிவித்துள்ளனர். (செ-4)

# ரிசானாவின் பிறந்த தினம் நேற்று நினைவு கூரப்பட்டது

(திருகோணமலை)

திருகோணமலை மூதூரைச் சேர்ந்த, சவுதி அரேபியாவில் மரணதண்டனை நிறைவேற்றப்பட்ட இலங்கை பணிப்பெண் ரிசானா நபீக்கின் 25ஆவது பிறந்ததினம் நேற்று நினைவு கூரப்பட்டுள்ளது.

இதன்பொருட்டு நேற்று மாலை சமய நிகழ்வுகள் இடம்பெற்றதாக அவரது தாயார் பரீனா தெரிவித்தார்.

சவுதி அரேபியாவில் மரண தண்டனை விதிக்கப்பட்ட நிகழ்வை அடுத்து அவருக்கு ஆசிவேண்டி இந்த நிகழ்வுகள் இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதனிடையே, ரிசானா நபீக்கின் சகோதரிக்கு வேலைவாய்ப்பொன்றை பெற்றுத் தருவதாக ஜனாதிபதியின் பாரியார் ஷிராந்தி ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மூதூரில் அமைந்துள்ள ரிசானாவின் வீட்டிற்கு நேற்று முன்தினம் அவர் விஜயம் செய்தபோதே இந்த உறுதிமொழியை வழங்கியுள்ளார்.

ரிசானாவின் குடும்பத்தினருக்கு அரசாங்கத்தினால் வீடொன்றை அமைத்துக் கொடுக்கும் பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வீடமைக்கும் பணிகளை துரித கதியில் மேற்கொள்ளுமாறு ஷிராந்தி ராஜபக்ஷ குறிப் பிட்டுள்ளார். (செ-11)

# 138 பேருக்கும் விளக்கமறியல்

(திருகோணமலை)

அக்கரைப்பற்று கடற்படையினரால் மீட்கப்பட்ட வெளிநாட்டு பிரஜைகள் 138 பேரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் நடுக்கடலில் வழிதவறிச் சென்று தத்தளித்துக் கொண்டிருந்த நிலையில் கடற் படையினரால் மீட்கப்பட்டனர்.

அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டபோது அவர்களை எதிர்வரும் 22-ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதன் பின்னர் மிரிகானையிலுள்ள வெளிநாட்டு பிரஜைகளை தடுத்து வைக்கும் இடத்தில் அவர்களை ஒப்படைக்குமாறு நீதிமன்றம் தெரிவித்துள்ளது. (செ -11)

# வாகன விபத்தில் அலன்ரின் எம்.பி காயம்

யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலன்ரின் வாகனம் தடம்புரண்டதில் அவர் உட்பட இருவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சிக்கும் மாங்குளத்துக்கும் இடையில் ஏ 9 வீதியில் நேற்று மாலை 6.30 மணியளவில் இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றது.

இதனால் இந்த வாகனத்தில் பயணம் செய்துகொண்டிருந்த சிலவெஸ்திரி அலன்ரின் எம்.பி காயத்துக்கு உள்ளாகியுள்ளார்.

அவருடைய பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவர் கடுமையான காயங்களுக்கு உள்ளாகியுள்ளார்.

காயமடைந்த இருவரும் உடனடியாக மாங்குளம் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப் பட்டு ;பின்னர் கிளிநொச்சி மருத்துவமனைக்கு மேலதிக சிகிச்சைக்காக மாற்றப்பட்டனர்.

# மின்னல் தாக்கியதில் விவசாயி பலி!

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று அதிகாலை மின்னல் தாக்குதலுக்கு இலக்காகி விவசாயி ஒருவர் பலியாகியுள்ளார்.

இச்சம்பவத்தில் ஓட்டமாவடி மீராவோடையைச் சேர்ந்த எம்.எம்.சீனிமுகமது என்ற விவசாயியே உயிரிழந்துள்ளார்.

வாகரை பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள மீயான்குளப் பகுதியில் வைத்தே மின்னல் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவரின் சடலம் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்டு, விசாரணைகளின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படுள்ளது. (செ -11)

# அரசுக்கு எதிராக...

நோக்கவேண்டியேற்படும்.

இதேவேளை நாட்டின் மனித உரிமை மீறல்கள் நடைபெற்று வருகின்றன. ஜனநாயக விரோத, நல்லாட்சிக்கு எதிரான அரசின் நடவடிக்கைகள் தொடர்கின்றன. இது தொடர்பில் மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும்.

இது இவ்வாறிருக்க நாட்டின் பெறுமதியான நிலங்களை சிறிதளவும் வெட்கமும், தேசாபிமானமும் இன்றி சர்வதேச நாடுகளுக்கு அரசு விற்கிறது.

இதுவரையில் 10 ஆயிரம் ஹெக்டெயருக்கு மேற்பட்ட நிலப்பரப்பு வெளிநாடுகளுக்கு விற்கப்பட்டுள்ளன. இந்தக் காணிகள் யாவும் நீண்டகால குத்தகை அடிப்படையில் வெளிநாடுகளுக்கு விற்கப்பட்டுள்ளன. இந்த நிலை தொடருமாயின், அது நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு பாதகமாக அமையும்.

எனவே ஆளும், எதிர்க் கட்சி அரசியல் வாதிகள் உட்பட நாட்டு மக்கள் அனைவரும் இன, மத பேதமின்றி இந்தப் பேரணியில் கலந்து கொண்டு, ஏகாதிபத்திய எதிர்ப்புக்கான மாபெரும் மக்கள் சக்தியை உருவாக்க ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என அவர் கேட்டுள்ளார்.(செ-11)

# ரயில் மோதி...

திங்கட்கிழமை பகல் 1.30 மணியளவில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் இவரது தலை துண்டிக்கப் பட்டுள்ளதாக வவுனியாப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவரிடம் எந்தவித ஆவணங்களும் காணப்படாததால் இவரை அடையாளம் காணமுடியாதுள்ளதாக வவுனியா ரயில் நிலைய அதிகாரி தெரிவித்தார். (செ-11)


பிள்ளையார் இன்

25% கழிவு

இன்றுமுதல் அதி விசேட 25% விலைக்கழிவுடன் தரமான சைவ உணவுகள் எமது உணவகத்தில் நிறைவான சேவையுடன் மாலையில் வழங்கப்படும்.

இன்றைய விசேட உணவு :-

பூரி உருளைக்கிழங்கு கறியுடன் ரூ100/-

சப்பாத்தி உருளைக்கிழங்கு கறியுடன் ரூ100/-

இலவசமாக இஞ்சி சோடா வழங்கப்படும். (இங்கு உணவருந்துபவர்களுக்கு மட்டும்)

(C-1660) தொடர்புகளுக்கு : இல. 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 021 222 2829

- தபால் மூலம் -

ஆறு மாத கால டிப்ளோமா

Course Length - Six Month

2013 February- 2013 July

24

தமிழ் மொழி மூலம்

Dip. in Psychology - உளவியல் டிப்ளோமா
Dip. in Office Administration - காரியாலய நிர்வாக டிப்ளோமா
Dip. in Human Resources Management - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Civil Engineering - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா
Dip. in Business Management - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Banking Management - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Sales & Marketing Management - விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் மு. டி.
Dip. in Health & Hospital Management - சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை மு. டி.
Dip. in Nursing Administration - தாதியர் நிர்வாக டிப்ளோமா
Dip. in Educational Management - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Montessori - மொண்டிசூரி டிப்ளோமா

கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்

• கல்முனை • மட்டக்களப்பு • திருகோணமலை • புத்தளம் • வவுனியா • மன்னார் • யாழ்ப்பாணம் • கண்டி • கொழும்பு • ஹட்டன் • அனுராதபுரம் • நுவரெலியா

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர், முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.

Mobile: 0777 140 844, 071 803 48 48

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி

Country Co-ordinator

MARUTHUR . A. HASSEN

(B.Sc. Psychology, M.Sc. Psychology)

ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES

24, 1ST FLOOR, SUPERMARKET COMPLEX, MAIN STREET, SAINTHAMARUTHU-07.

Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org

Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

(சி/2331) விண்ணப்ப முடிவுத் திகதி : 28.02.2013



திறப்பு விழா



மணிக்ஸ் ஹோட்டல்

எனும் ஸ்தாபனத்தினை 11.02.2013 காலை 8 மணி 02 நிமிட சுப வேளையில் ஆரம்பிக்கவுள்ளோம்.

தரமானதும் மலிவானதுமான எண்ணமே எங்கள் சேவை.

திருமண வைபவங்கள் பூப்புனித நீராட்டு விழாக்கள் மற்றும் இதர வைபவங்களுக்கு சைவ, அசைவ உணவுப் புரியாணி வகைகள், சிற்றுண்டிகள், குளிர்பான வகைகள் (சோடா), ஐஸ்கிறீம் 35 வகையான உணவுப் பண்டங்கள், உங்கள் இருப்பிடங்களுக்கு கொண்டு வந்து தரப்படும்.

வாகனச் செலவு அறவிடப்படமாட்டாது.

குறிப்பு: ஓடர்களை முற்கூட்டியே செய்து கொள்ளவேண்டும்.

325, கே.கே.எஸ்.வீதி, தாவடிச் சந்தி, கொக்குவில்.

பா.மணிவண்ணன் (உரிமையாளர்)

தொடர்புகளுக்கு: 0779790899, 0717511959

(1653)



'ENGLISH in ACTION'

(i) Basic Level (ii) Higher Level

ஆசிரியர்: சண்முகம் முத்துலிங்கம்

773 212 711

(1637)








ஆயுர்வேத வைத்தியர்கள், மக்களின் கவனத்திற்கு!



- நீங்கள் இளநரை, முடி உதிர்வு, வாதம், கை, கால் விறைப்பு, மூட்டுவலி, முதுகு வலி, இடுப்பு வலி என்பவற்றால் அவதிப் படுகின்றீர்களா?
- இந்நோய்களுக்குப் பலவழிமுறைகளிலும் தீர்வு தேடிச் சலித்து விட்டீர்களா?
- இந்நோய்களுக்கான தீர்வாக ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட தைலங்கள் எம்மிடம் உண்டு

ஆயுர்வேத வைத்தியர்களின் கவனத்திற்கு



- எம்மிடம் நீரிழிவு, கொலஸ்ரோல், இரத்த அழுத்தம், நரம்புத் தளர்ச்சி, சுளி, வறட்டு இருமல் போன்ற பல வகை நோய்களுக்குரிய அரிஷ்ட ஆசவங்கள், குவாதங்கள், சூரணங்கள், சிரப் வகைகளை மிகக் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

நீங்கள் நாட வேண்டிய இடம்

சிவா நறுமணப் பூங்கா
இல - 288, ஆஸ்பத்திரி வீதி.
யாழ்ப்பாணம்.
தொ.பேசி - 021 222 2567

(சி/2345)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## நன்னயம்...!

நம்மிடம் ஒருவன் பிழையாக நடந்து கொண்டால், உடனே நாம் என்ன செய்வோம்?

கையை ஓங்கிக் கொண்டு, அவனை அடிக்கப் போவோம். நாமும் அவனிடம் ஒருபடி மேலாகப் பிழையாக நடந்து கொள்வோம்.

ஆனால், பண்பாடு தெரிந்தவர்கள் அப்படி நடந்து கொள்வதில்லை.

"இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்து விடல்" என்று வள்ளுவர் கூறியுள்ளார். அதற்குத் தகுந்த மாதிரி நடந்து கொள்வார்கள்.

பாயஸீத் பிஸ்தாமிங் என்பவர் ஒரு பெரிய ஞானி. அவர் ஒருநாள் இரவு நீண்ட நேரம் பள்ளிவாசலிலே இருந்து விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்தார்.

வழியிலே ஒரு குடிகாரன். அவன் கையிலே ஒரு இசைக் கருவி. அதை அவன் கன்னா பின்னாவென்று மீட்டுக் கொண்டு வாய்க்கு வந்த மாதிரி எதையோ பாடிக் கொண்டு நடந்து சென்று கொண்டிருந்தான்.

பாட்டுப்பாடியதோடு நிறுத்தவில்லை. தெருவில் சென்று கொண்டிருந்தவர்களையும் திட்டித் தீர்த்துக் கொண்டிருந்தான்.

பாயஸீத் அவனைப் பார்த்து பரிதாபப்பட்டு; "ஏன் இவ்வாறு நடந்து கொள்கிறாய்" என்று கேட்டு விட்டு புத்திமதி கூற ஆரம்பித்தார்.

அவனுக்கு கோபம் வந்து விட்டது. கையிலே வைத்திருந்த அந்த இசைக்கருவியால் பாயஸீத்தின் தலையில் ஓங்கி அடித்தான்.

இரத்தம் ஆறாகப் பெருக்கெடுத்தது. அத்தோடு அவனது இசைக்கருவியும் இரண்டாக உடைந்து விட்டது.

இவ்வளவு நடந்தும்கூட அந்தப் பெரியவர் வாயைத் திறந்து ஒரு வார்த்தை கூட பேசவில்லை. அமைதியாகத் தலையைப் பொத்தியபடி போய் விட்டார்.

மறுநாள் காலையில் அந்தப் பெரியவர் ஒரு பையினுள் இனிப்புப் பண்டங்கள், ஒரு தொகை பணம் ஆகிய இரண்டையும் ஒரு நபர் மூலம் குடிகாரனுக்கு அனுப்பி வைத்தார்.

குடிகாரனுக்கோ ஒன்றுமே புரியவில்லை. என்ன விபரம் என்று விசாரித்தான். வந்த நபர் கடதாசியை நீட்டினார். அதிலே விபரம் எழுதியிருந்தது.

"உங்களுடைய இசைக் கருவி உடைவதற்கு என்னுடைய தலைதான் காரணம். அதற்காக நான் மிகவும் மனவேதனை அடைகிறேன். பணம் அனுப்பியுள்ளேன். புதிய இசைக்கருவி ஒன்றை வாங்கிக் கொள்ளுங்கள்.

அதன்பின் இன்னொரு விடயம். நேற்றிரவு என்னிடம் அதிகளவான கசப்பான வார்த்தைகளை நீங்கள் பேசியதாக நினைக்கிறேன். இத்துடன் அனுப்பியுள்ள இனிப்புப் பண்டங்கள் உங்கள் நாவில் உள்ள கசப்பை மாற்றியமைக்கும்" என்று அக்கடிதத்தில் எழுதியிருந்தது.

இப்போது அவன் குடி மயக்கத்திலே இல்லை. தெளிவடைந்து இருந்தான். இதைப் படித்தவுடனேயே அவன் வெட்கிப் போய் தலையைக் குனிந்தான். சற்று நேரம் யோசனை செய்தான்.

உடனே தனது நண்பர்களை அழைத்து அந்த ஞானி இருக்கும் இடத்திற்குச் சென்றான்.

அவரிடம் சென்று மன்னிப்புக் கேட்டான்.

"பெரியவரே! தெரியாமல் நான் இந்தப் பாவத்தைச் செய்து விட்டேன். என்னை மன்னித்து விடுங்கள். உங்களுடைய பொறுமையும் போதனையும் என்னுடைய கண்களைத் திறந்து விட்டன. இனிமேல் நானும் திருந்தி வாழ்வதற்கு உங்களது போதனை வழி சமைத்துள்ளது" என்று கூறினான்.

ஞானி செய்த "நன்னயம்" குடிகாரனை எப்படித் திருத்தியிருக்கிறது பார்த்தீர்களா?...

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# காலாவதியான பொருட்கள் விற்பனை; வ.நிலையங்கள் மீது சட்ட நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

நுகர்வோருக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் காலாவதியான பொருட்களை விற்பனை செய்யும் வர்த்தக நிலையங்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் காலாவதியான பொருட்களை விற்பனை செய்வதையும் பொருட்களின் விலையை அதிகரித்து விற்பனை செய்வதனையும் வர்த்தகர்கள் தவிர்த்துக் கொள்ள வேண்டுமென யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

காலாவதியான பொருட்களை விற்பனை செய்த 7 வர்த்தகர்களுக்கு எதிராக யாழ்.நீதவான் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு கடந்த முதலாம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டதோடு ஒவ்வொருவருக்கும் தலா 10 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து நீதவான் தீர்ப்பளித்தார்.

அத்தோடு விலைப்பட்டியலைக் காட்சிப்படுத்தாமல் வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட்டு வந்த 6 வர்த்தகர்களுக்கு தலா ஆயிரம் ரூபா அபர்ாதம் விதித்து நீதவான் தீர்ப்பளித்தார்.

இதேவேளை, யாழ்.மாவட்ட பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகார சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீடீர் சோதனை நடவடிக்கையின் போது காலாவதியான பொருட்களை விற்பனை செய்த 23 வர்த்தகர்களும் விலைப்பட்டியல் இன்றி வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட்டு வந்த 2 வர்த்தகர்களுக்கு எதிராகவும் மல்லாகம் நீதவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை, அங்கீகரிக்கப்பட்ட தராசுகளையும் படிகளையும் பயன்படுத்தாது விற்பனை நடவடிக்கையில் ஈடுபடும் வர்த்தகர்களுக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தெரிவித்த அவர் நுகர்வோருக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகார சபை சட்டதிட்டங்களை மீறி தொழில் நடவடிக்கையில் ஈடுபடும் வர்த்தகர்களுக்கு எதிராக தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார். (அ-6)

# சிலாவத்தையில் இடைவிலகும் மாணவர் தொகை அதிகரிப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் உள்ள சிலாவத்தை கிராம சேவையாளர் பிரிவில் அதிகளவான பாடசாலை மாணவர்கள் பாடசாலைக்கு சென்று கல்வி கற்காது இடை விலகி வீடுகளில் இருப்பதாக சுட்டிக் காட்டப்படுகிறது. இவ்வாறு கற்க வேண்டிய வயதில் பாடசாலைக்கு சென்று கல்வி கற்காது வீடுகளில் இருப்பது கவலைக்குரிய விடயமாகும்.

பெற்றோர் வேலைக்கு செல்வதால் வீடுகளில் பாடசாலைக்கு செல்லாமல் இருக்கும் மாணவர்கள் பல சமூக சீர்கேடுகளுக்கு உள்ளாவர் என சுட்டிக்காட்டப்படுகிறது. அத்துடன் அக்கிராமத்தில் கல்வி வளர்ச்சி ஸ்தம்பிதம் அடைந்த நிலையிலேயே காணப்படும். இவ்வாறான மாணவர்கள் மீது எவரும் இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் சுட்டிக்காட்டப்படுகிறது. எனவே, இவ்விடயத்தை கருத்திற்கொண்டு உரியவர்கள் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பகுதி புத்திஜீவிகள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (அ-3-267)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 110 | 100 | 100 | 80 |
| உருளைக்கிழங்கு | 60 | 80 | 80 | 70 |
| பச்சைமிளகாய் | 30 | 180 | 300 | 350 |
| தக்காளி | 120 | 100 | 100 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 30 | 40 | 40 |
| கோவா | 70 | 50 | 80 | 100 |
| கரட் | 180 | 120 | 160 | 160 |
| பூசணி | 40 | 30 | 40 | 50 |
| புடோல் | 40 | 90 | 70 | 80 |
| வாழைக்காய் | 50-60 | 60 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 50-100 | 70 | 100-120 | 100-150 |
| பெரிய வெங்காயம் | 90 | 60 | 100 | 120 |
| பாகற்காய் | 70-90 | 100 | 140 | 200 |
| வெண்டிக்காய் | 50-80 | 60 | 100 | 100 |
| கருணைக் கிழங்கு | 60-75 | 60 | 80 | 70 |
| பயற்றங்காய் | 60-75 | 110 | 120 | 120 |
| லீக்ஸ் | 120 | 120 | 140 | 140 |
| பீற்றூட் | 80-100 | 80 | 100 | 120 |
| கறிமிளகாய் | 200 | 240 | 200 | 200 |
| முருங்கைக்காய் | 450 | 800 | 600 | -- |
| போஞ்சி | 80-120 | 100 | 90 | 100 |
| கத்தரிதம்புள்ள | 60 | 70 | 100 | -- |
| கீரை - 1 பிடி | 20-35 | 210 | 30 | 30 |
| தேசிக்காய் | 25-60 | 60 | 80 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 25-60 | 40 | 35-40 | 40-45 |
| இராசவள்ளி | 80-100 | 100 | 120 | 130 |
| வெங்காயப்பூ | 130-200 | 200 | -- | 100 |

# இராசி பலன்

05.02.2013
(தை 23, செவ்வாய்க்கிழமை)
சூரிய உதயம் காலை 6.[illegible] மணிக்கு
தசமி முன்னிரவு 11.53 மணிவரை
அனுசம் பிற்பகல் 1.10 மணிவரை
இராகுகாலம் 3.35-5.05 மணிவரை
சுபநேரம் 11.05-12.35 மணிவரை

**மேடம்** அம்பிகை வழிபாட்டால் அமைதி காண வேண்டிய நாள், மற்றவர்களுக்காக பொறுப்புச் சொல்வதைத் தவிர்ப்பது நல்லது, வேலைச்சுமை கூடும், உடல் நலனில் அதிக கவனம் தேவை.

**இடபம்** பெண்களால் பெருமை சேரும் நாள், புதிய திட்டங்கள் கைகூடும், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, பொருளாதார நிலையில் முன்னேற்றமுண்டு.

**மிதுனம்** உற்சாகத்துடன் பணி புரிவீர்கள், பழைய கடனை தீர்க்கும் நோக்கம் உருவாகும், மற்றவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், பயணங்களால் பலனுண்டு, செய்தொழிலில் முன்னேற்றம் ஏற்படும்.

**கடகம்** தன்னம்பிக்கை துளிர் விடும் நாள், பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், நீண்ட நாளைய ஆசையொன்று நிறைவேறும், பிள்ளைகளின் தேவைகளை நிறைவு செய்து மகிழ்வீர்கள்.

**சிங்கம்** இனிய செய்திகள் இல்லம் வந்து சேரலாம், தாய்வழி உறவினர்களால் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம், வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், மறக்க முடியாத சம்பவங்கள் இடம்பெறலாம்.

**கன்னி** மறக்க முடியாத சம்பவங்கள் நடைபெறும் நாள், எப்படி நடக்கலாம் என நினைத்த காரியமொன்று இன்று நல்ல முடிவுக்கு வரலாம், உயர்வான சிந்தனைகள் மனதில் குடிகொள்ளும், சகோதர ஒற்றுமை பலப்படும்.

**துலாம்** புத்தி சாதுரியமாக நடந்து பாராட்டுப் பெறுவீர்கள், பெரிய மனிதர்கள் வீடு தேடி வரலாம், வீட்டை அழகுபடுத்துவதில் ஆர்வம் காட்டுவீர்கள், தொலைபேசி வழித் தகவலால் தொழில் வளர்ச்சி அதிகரிக்கும்.

**விருச்சிகம்** கற்பனைகள் அதிகரிக்கும், வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், உறவினர் பகை அகலும், வருமானம் திருப்தி தரும், தெய்வீக சிந்தனை மேலோங்கும், அரசியல் செல்வாக்கு மேலோங்கும்.

**தனுசு** காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும், கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, தொழில் வளர்ச்சிக்கு அனுபவம் மிக்கவர்களிடம் ஆலோசனை கேட்பீர்கள், வழிபாடு வளர்ச்சியைக் கூட்டும்.

**மகரம்** முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், வங்கியில் சேமிப்பை அதிகரிக்கும் எண்ணம் உருவாகும், பயணங்கள் கைகூடுவதற்கான வாய்ப்புண்டு, வியக்கும் செய்திகள் வீடு வந்து சேரலாம்.

**கும்பம்** அருமையான நாள், அன்பு நண்பர்கள் ஆதரவு தர முன்வருவர், எதிலும் அதிக பிரயாசை காட்டுவீர்கள், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், போசன நன்மையுண்டு, உற்சாகமான நாள்.

**மீனம்** மறதியால் விட்டுப்போன காரியங்களை இன்று செய்து முடிப்பீர்கள், விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து சேரலாம், மனக்குழப்பம் தீர்ந்து மகிழ்ச்சி கூடும் நாள், திடீர் பயணங்கள் ஏற்படலாம்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொப்பிலாவழை மயானத்தை புனரமைக்க கோரிக்கை

(தெல்லிப்பழை)

வித்தகபுரம் கொப்பிலாவழை மயானம் புனரமைக்கப்படாமையால் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.


வலி.வடக்கு பிரதேச சபைக்கு உட்பட்ட மேற்படி மயானம் புனரமைக்கப்படாமையால் பற்றைக்காடாக காட்சியளிக்கின்றது.

இப்பகுதியில் மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட நிலையிலும் இம்மயானம் புனரமைக்கப்படவில்லை.

மயான பகுதியில் உள்ள கிணறும் புனரமைக்கப்படாமலும் சுத்திகரிக்கப்படாமலும் காணப்படுவதுடன் அங்கு கொட்டகையும் அமைக்கப்படவில்லை. இப்பகுதி மக்களில் ஒரு பகுதியினர் போர்க்காலத்திற்கு முன்னர் கீரிமலை மயானத்திற்கு சென்றனர். ஆனால், தற்போது அங்கு செல்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளமையால் கீரிமலை கிராமத்திலுள்ளவர்களும் இந்த மயானத்திற்கே வருகின்றனர்.

அதுமட்டுமன்றி மேற்குறித்த மயானத்திற்கு செல்லும் பாதையும் சீரின்றி காணப்படுவதால் இம்மயானத்திற்கு செல்வோர் பெரும் சிரமங்களை எதிர்கொண்டே போக்குவரத்து செய்கின்றனர்.

எனவே, உரிய தரப்பினர் இதனைக் கருத்திற் கொண்டு இம்மயான சூழலை புனரமைத்து தருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-28)



நன்றி:- ஐலண்ட்

# நாட்டின் முன்னேற்றத்துக்காக மூவின மக்களும் இணைவோம்

## யாழ்.அரச அதிபர் உரை

(யாழ்ப்பாணம்)

அந்நியர்களின் ஆதிக்கத்திற்குட்பட்டிருந்த எமது நாட்டை மீட்பதற்கு மூவின மக்களும் இணைந்து செயற்பட்டனர். நாட்டு மக்களின் ஒற்றுமையினூடாகவே நிரந்தர சமாதானத்தையும் அபிவிருத்தியையும் கட்டியெழுப்ப முடியும் என யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

இலங்கையின் 65 ஆவது சுதந்திர தின நிகழ்வின்போது யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்று தேசியக் கொடியேற்றப்பட்டது.

தேசியக் கொடியை ஏற்றி வைத்து உரையாற்றும்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாடு சுதந்திரம் பெற்றதை கொண்டாடும் முகமாக தேசிய சுதந்திர தினம் பிரகடனப்படுத்தப்பட்டது. அரச உத்தியோகத்தர்களுக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

இந்த நாட்டில் வாழும் சகல மக்களும் இன்று சுதந்திர தினத்தை கொண்டாடுகின்றனர்.

போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயரின் ஆட்சிக்காலத்தில் அடிமைப்பட்டுக் கிடந்த எமது நாட்டினை மீட்பதற்காக இந்த நாட்டிலுள்ள மூவினத்தையும் சார்ந்த தலைவர்கள் பல வழிகளிலும் போராட்டங்களையும் அழுத்தங்களையும் கொடுத்து வந்தனர்.

அனைத்து சமூகத்தினரின் ஒத்துழைப்பின் மூலம் பெறப்பட்ட சுதந்திர தினத்தை நாம் அனைவரும் உணர்வுபூர்வமாக கொண்டாடுகிறோம்.

65 ஆவது தேசிய சுதந்திர தினம் திருகோணமலை மாவட்டத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் இன்று (நேற்று) நடைபெறுகின்றது.

சுதந்திரமும் நிரந்தர சமாதானமும் கிடைக்கப் பெற்ற எமது நாட்டில் அபிவிருத்திப் பணிகள் விரைவாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அபிவிருத்திப் பணிகளுக்கு மத்திய வங்கி அதிகளவான நிதியினை வழங்கி நாட்டை முன்னேற்றமடைய செய்து வருகிறது.

குறிப்பாக வடக்கு மாகாணத்தில் யுத்தத்திற்கும் பின்னரான காலப்பகுதியில் பல ஆயிரம் மில்லியன் ரூபாவினை அரசாங்கம் ஒதுக்கீடு செய்துள்ளது. அதற்காக இப்பகுதி மக்கள் சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு அனைத்து மக்களும் சுதந்திரமாக வாழக்கூடிய சமாதானச் சூழல் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மூவின மக்களும் ஒன்றுபட்டு நாட்டின் முன்னேற்றத்திற்காகவும் அபிவிருத்திக்காகவும் ஒத்துழைக்க வேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)




## எரிகாயத்துக்குள்ளான யுவதி மரணமானார்

(யாழ்ப்பாணம்)

எரிகாயங்களுடன் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட யுவதியொருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இதில் கடந்த 2010 ஆம் ஆண்டு மீள்குடியமர்த்தப்பட்ட இடமான வலி.வடக்கு வித்தகபுரத்தைச் சேர்ந்த கருணாநிதி கம்சிகா (வயது - 19) என்ற யுவதியே உயிரிழந்துள்ளார்.

வீட்டில் யாரும் இல்லாத வேளையிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வெள்ளிக்கிழமை மாலை 3 மணியளவில் குறித்த சம்பவம் இடம்பெற்று அதில் எரிகாயத்திற்குள்ளான யுவதி சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில் நேற்று முன்தினம் நள்ளிரவுவேளை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். (அ-4)

# கருத்து பரிமாற்ற களநிகழ்வு இன்று

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது அழகியல் கல்லூரியின் ஏற்பாட்டில் மாதந்தோறும் ஆங்கிலத்தில் நடத்தப்பட்டு வருகின்ற போறம் எனப்படும் கருத்துப் பரிமாற்ற களநிகழ்வின் இம்மாதத்திற்கான நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை மாலை 5 மணிக்கு இல.286, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் நடைபெறவுள்ளது.

அருள் கலாநிதி எ.எப்.ஜெயசேகரம் அடிகள் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் தமிழ்த்தூது தனிநாயகம் அடிகள் வாழ்வும் பணியும் என்னும் பொருளில் கவிஞர் சோ.பத்மநாதன் ஆங்கில மொழியில் உரையாற்றவுள்ளார்.

தனிநாயகம் அடிகளாரின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு திருமறைக் கலாமன்றம் இவ் ஆண்டில் முன்னெடுக்கவுள்ள ஆய்வரங்க தொடர் நிகழ்வின் ஆரம்ப நிகழ்வாக இது அமையவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஆங்கிலமொழி புலமையாளர்கள் கலந்து கொள்ளும் இவ்வமர்வில் ஆர்வமுள்ள அனைவரும் கலந்து கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-9)

# சிறைக்கைதிகளுக்கு இம்மாதம் மட்டும் விசேட சலுகைகள்

(யாழ்ப்பாணம்)

சுதந்திர தினத்தில் யாழ். சிறைச்சாலையிலிருந்து 9 கைதிகள் பொது மன்னிப்பில் விடுதலை செய்யப்பட்டனர்.

இவ்விடுதலை வைபவம் நேற்று முற்பகல் 10 மணியளவில் யாழ்.சிறைச்சாலை அத்தியட்சகர் எச்.ஏ.சி.பெரேரா தலைமையில் நடைபெற்றது.

ஒரு பெண் கைதி உட்பட 9 சிறைக்கைதிகள் ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் அடிப்படையில் விடுவிக்கப்பட்டனர்.

நாட்டின் சுதந்திர தினத்திலே சிறைச்சாலை கைதிகளுக்கு பல்வேறு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளதாகவும் யாழ். சிறைச்சாலை அத்தியட்சகர் தெரிவித்தார்.

கைதிகளை பார்வையிட வருவோர் எந்நேரமும் வந்து பார்வையிட முடியும் எனவும் எத்தனைபேர் வேண்டுமானாலும் வர முடியும் எனவும் அவர் கூறினார்.

இந்த சலுகை இம்மாதம் முழுவதும் நடைமுறையில் இருக்கும். அதேவேளை கைதிகளுக்கு புரியாணி உணவும் நேற்றைய தினம் வழங்கப்பட்டது.

நேற்றைய தினம் விடுதலை செய்யப்பட்ட கைதிகள் சிறு குற்றங்கள் புரிந்து நீதிமன்றங்களினால் அபராதப் பணம் விதிக்கப்பட்டதன் பின்னர் அந்த அபராதத்தினை செலுத்த முடியாமல் குறுகிய கால தண்டனை அனுபவித்துக் கொண்டிருக்கும் கைதிகளே பொதுமன்னிப்பின் அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டனர்.

மேலும் வெலிக்கடை சிறைச்சாலையில் இருந்து 130 சிறைக்கைதிகளும் போகம்பறை சிறைச்சாலையிலிருந்து 114 சிறைக் கைதிகளும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். (அ-4)

## சிறுகதை போட்டியில் இரண்டாமிடம்



(யாழ்ப்பாணம்)

மட்டுவிலைச் சேர்ந்த எஸ்.பி.கிருஷ்ணன் கொழும்பு தமிழ்ச் சங்கம் நடத்திய இலங்கையர் கோன் நினைவுச்சிறுகதைப் போட்டியில் 2 ஆம் இடத்தைப் பெற்றுள்ளார்.

இவருக்கான வெள்ளிப்பதக்கம், சான்றிதழ் மற்றும் பணப்பரிசு ஆகியன கடந்த 26 ஆம் திகதி வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-9)

# பிரதேச செயலகங்களுக்கான எல்லை நிர்ணய கூட்டம்

(தும்பளை)

பருத்தித்துறை கரவெட்டி பிரதேசங்களுக்கான எல்லைநிர்ணயக்கூட்டம் எதிர்வரும் 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா தலைமையில் அமைச்சரின் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

வடமராட்சி பிரதேச செயலர் பிரிவில் உள்ள பொலிகண்டி தெற்கு பிரிவிற்கும் கரவெட்டி பிரதேச செயலக பிரிவில் உள்ள சமரபாகு பிரிவிற்கும் இடையேயான எல்லையை நிர்ணயிக்கும் பிரச்சினை பல ஆண்டுகளாக இடம்பெற்று வருகிறது.

இப்பிரச்சினையை தீர்ப்பதற்கு பல நிர்வாகத்தினரும் முயற்சிகள் மேற்கொண்டு எந்தப் பயனும் கிடைக்கவில்லை.

இப்பிரச்சினையை தீர்க்கும் முகமாகவே மேற்படி கூட்டம் இடம்பெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு யாழ்.அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், கரவெட்டி பிரதேச செயலர் சிவஸ்ரீ, பருத்தித்துறை பிரதேச செயலர் இ.த.ஜெயசீலன் மற்றும் பருத்தித்துறை கரவெட்டி முன்னாள் பிரதேச செயலர்களும் பொலிகண்டி தெற்கு சமரபாகு ஆகிய பகுதி கிராம அலுவலர்களும் அப்பகுதி பொது அமைப்புகளின் பிரதிநிதிகளும் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-3-19)

## மணவாளக்கோல விழா

(தும்பளை)

பருத்தித்துறை மாதனை ஸ்ரீகாளியம்மன் கோவில் மணவாளக்கோல விழாவும்1008 சங்காபிஷேகமும் இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாகி நண்பகல் 12 மணிக்கு நிறைவடையவுள்ளது.

அத்துடன் பிற்பகல் 6 மணிக்கு விஜயகுமார் சதீஸ்குமாரின் இன்னிசை வாத்தியங்களுடன் சுவாமி வீதியுலா வரவுள்ளது. (அ-3-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு:
T.P : 021 321 0815, 021 567 1540
E-mail : valampuriijaffna@gmail.com

# பொலிஸாரினால் பாதுகாப்பு விதிமுறைகள் குறித்து அறிவிப்பு

(கரணவாய்)

வடமராட்சி பகுதியில் நெல்லியடி வீதிப் போக்குவரத்து பொலிஸாரினால் பாதுகாப்பு விதிமுறைகள் அறிவிக்கப்பட்டு செயற்படுத்தப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது. இதன்படி இரவு வேளைகளில் வெளிச்சம் இன்றி செல்லும் துவிச்சக்கர வண்டிகள் மற்றும் வேகத் தடுப்புக் கட்டை (பிறேக்), துவிச்சக்கர வண்டி மணி ஆகியவை பொருத்தப்படாமல் துவிச்சக்கரவண்டியில் பயணிப்போரிற்கு 500 ரூபா தண்டப் பணமும் கையடக்க தொலைபேசி மற்றும் திரைத் தொழில்நுட்ப கருவிகளில் ஆபாசப்படம் வைத்திருப்பவர்களுக்கு 50 ஆயிரம் ரூபா தண்டப் பணமாகவும் சட்டவிரோத மதுசாரம், கசிப்பு ஆகியவற்றை வைத்திருப்பவர்களுக்கு 50 ஆயிரம்ரூபாதண்டப் பணமாகவும்அறவிடப்படும் எனவும் வீதிப் போக்குவரத்து பொலிஸார் தெரியப்படுத்தியுள்ளனர். (அ-5-74)

## 138 பேருக்கும் விளக்கமறியல்

கடலில் தத்தளித்துக் கொண்டிருந்த வேளை அக்கரைப்பற்று கடற்படையினரால் காப்பாற்றப்பட்ட வெளிநாட்டு பிரஜைகள் 138 பேரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட வேளை இவர்களை எதிர்வரும் 22 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதன்பின்னர்மிரிகானையிலுள்ளவெளிநாட்டு பிரஜைகளை தடுத்து வைக்கும் இடத்தில்ஒப்படைக்குமாறு நீதிமன்றம் தெரிவித்துள்ளது. (அ-2)


உ



ஸ்ரீ அம்மா பகவான் சரணம்

## பக்தி யக்ஞா
BAKTHI YAGNA



ஓம் சச்சிதானந்த பரப்ரம்மா புருஷோத்தம பரமாத்மா
ஸ்ரீ பகவதி சமேத ஸ்ரீ பகவதே நமஹ

அன்பர்களே! ஸ்ரீ அம்மா பகவான் பூவுலகில் அவதரித்து உலக மக்களுக்கு சம்பூர்ண ஜீவன முக்தி அளித்துக் கொண்டிருக்கும் வேளையில் ஜீவன் முக்தியடைய மக்களின் நிலையை உணர்த்தி விழிப்புணர்வு பெறும் வண்ணம் வரதபாளையத்தில் அமைந்துள்ள ஸ்ரீ கல்கி பகவானின் ஆலயத்திலிருந்து Web Cast மூலம் நிகழவிருக்கும் ஒருநாள் ஆன்மீக பயிற்சி வகுப்பில் பங்குபற்றி வாழ்வினில் பெறக்கூடிய பொக்கிஷத்தை பெறும் வண்ணம் அழைக்கப்படுகின்றீர்.

**இடம்:**
**நடராஜா பரமேஸ்வரி மணிமண்டபம்**
**நல்லூர் வீதி,**
**காலம்:**
**10.02.2013 ஞாயிற்றுக்கிழமை**
**காலை 8.30 - மாலை 4 மணிவரை**

இந்த வகுப்பில் கலந்துகொள்வதன் மூலம் எம்மை நாமே உணர்ந்துகொள்ளும் திறன் மிளிர்ந்து மன அமைதி, ஞாபக சக்தி, கல்வியில், தொழிலில் ஆர்வம், குடும்பத்தில் உறவுகளில் ஆனந்தம், உடல் உள ரீதியில் ஆரோக்கியம், ஐஸ்வர்யம் போன்றவற்றைப் பெற்று இதயம் மலர்ந்து தெய்வீக தொடர்பு மூலம் உயர் சைதன்ய நிலையைப் பெறமுடியும்.

**எந்த வயதினருக்கும் இந்நிகழ்வு பொருத்தமானதே**
நன்றியுடனும் பந்தத்துடனும் செய்யும் எளிய பிரார்த்தனை எம்மை வழிப்படுத்துகின்றது.
சமஸ்தா லோகா சுகினோ பவந்து

(1567) **ஸ்ரீ அம்மா பகவான் சற்சங்க ஒன்றியம், யாழ்.மாவட்டம்**



இலவச கண்புரை (Cataract) பரிசோதனை
**அனுசரணை: மனிதநேயம் நம்பிக்கை நிதியம்**

## கூட்டுறவு வைத்தியசாலை
மூளாய்

மனிதநேயம் நம்பிக்கை நிதியத்தின் அனுசரணையுடன் வறுமைக்கோட்டிற்கு கீழுள்ள கண்புரையால் பாதிக்கப்பட்டவர்களுக்கான இலவச கண்புரை பரிசோதனையானது எதிர்வரும் 07.02.2013 வியாழக்கிழமையன்று காலை 8 மணி தொடக்கம் மதியம் வரையில் கண் வைத்திய நிபுணர் Dr.எஸ்.குகதாசன் அவர்களின் தலைமையின் கீழ் கூட்டுறவு வைத்தியசாலை மூளாயில் இடம்பெறவுள்ளது. எனவே கண்புரை நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் இவ் இலவச கண்புரை சிகிச்சை நிலையத்திற்கு வருகை தந்து பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**தலைவர், கூட்டுறவு வைத்தியசாலை, மூளாய்.**
**021 225 0474**



## காணி, வீடு விற்பனைக்கு

காணி — புத்தூர். நிலாவரைச் சந்தியில் 20 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. ஹோட்டல், கடைத் தொகுதி, கட்டுவதற்கு பொருத்தமான காணி.

காணி — திருநெல்வேலி கேணியடி வைரவர் கோயிலுக்கு அண்மையில் 4பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

வீடு — சுழிபுரம் மேற்கு, பெரியதம்பிரான் கோயிலுக்கு அண்மையில் 7 ½ பரப்புக் காணியுடன் சகல வசதிகளும் கொண்ட வீடு விற்பனைக்குண்டு

வீடு — ஆனைக்கோட்டைச் சந்திக்கும் மானிப்பாய் மகளிர் கல்லூரிக்கும் இடையில் 2 ¼ பரப்புக் காணியுடன் சகல வசதிகளும் கொண்ட புதிய வீடு விற்பனைக்குண்டு.

**தொடர்புகளுக்கு:**
**ராஜலக்ஷ்மி என்ரபிறைஸ்**
Rajaluxmy Enterprise
Real Estate
காணி, வீடு வாங்கித் தருவதற்கும் விற்றுக்கொடுப்பதற்குமான நிறுவனம்
26D, பிறவுண் வீதி, கொக்குவில், யாழ்ப்பாணம்.
(தொழில்நுட்பக் கல்லூரிக்கு முன்பாக)
E-mail:nrluxmy@gmail.com
தொ.பே: 0779994603, 0215684810



இவர்களுக்கு மணமகள் தேவை — கல்யாண மாலை — இவர்களுக்கு மணமகள் தேவை

| | |
|---|---|
| பிறப்பு: 1978 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: பூராடம் 4<br>உயரம்: 5'5''<br>கி.பா: 24.75<br>தொழில்/ தகைமை: B.EA, MBA (UK PR)<br>தொ. இல: B -1110 | பிறப்பு: 1983 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: பூரம் 1<br>உயரம்: 5'<br>கி.பா. 38, 8 இல் செவ்.<br>தொழில்/ தகைமை:BSc, Computer Science<br>தொ. இல: B -1118 |
| பிறப்பு: 1984 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: சதயம் 4<br>உயரம்: 5'11'<br>கி.பா: 45.75,4 இல் செவ்.<br>தொழில்/ தகைமை: B.Sc (Hons) வங்கி அதிகாரி<br>தொ. இல: B -1113 | பிறப்பு: 1977 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: மூலம் 2<br>உயரம்: 5'7''<br>கி.பா. 48,8 இல் செவ்.<br>தகைமை/ தொழில்: BSc Teacher<br>தொ. இல: B -1120 |
| பிறப்பு: 1976 RC வேளாளர்<br>நட்சத்திரம்: மகம் 2<br>உயரம்: 5'6''<br>கி.பா: 4 இல் செவ்<br>தொழில்/ தகைமை: A/L, இலங்கை போக்குவரத்து சபை<br>தொ. இல: B -1115 | பிறப்பு: 1986 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: பூரட்டாதி 3<br>உயரம்: 6'<br>கி.பா.:- 2 இல் செவ்<br>தொழில்/ தகைமை: A/L வியாபாரம்.<br>தொ. இல: B-1121 |
| பிறப்பு: 1967 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: ரோகினி 1<br>உயரம்: 5'8''<br>தொழில்/ தகைமை: Doctor (கனடா PR)<br>தொ. இல: B -1117 | பிறப்பு: 1983 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- பூசம் 3<br>உயரம்: 5'8''<br>கி.பா: 1 இல் செவ்.<br>தொழில்/ தகைமை: A/L, தனியார் நிறுவனம்<br>தொ. இல: B -1122 |

சகல தொடர்புகளுக்கும்:-
**கல்யாண மாலை**
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி



## உடனடி வேலைவாய்ப்பு
## COMPANY VACANCIES

சவுதி அரேபியா கட்டார்

| விபரம் | கட்டார் றியால் | ரூபா |
|---|---|---|
| Mason மேசன் | 1200-1400 | 44400-51800 |
| Carpenter தச்சு வேலை | 1200-1400 | 44400-51800 |
| Pipe Fabricator குழாய் ஒட்டுநர் | 1300-1500 | 48100-55500 |
| Steel Fixer கம்பி கட்டுவோர் | 1200-1300 | 44400-48100 |
| Electrician மின் இணைப்பாளர் | 1300-1500 | 48100-55500 |
| Aluminium Fabricator அலுமினியம் ஒட்டுநர் | 1300-1500 | 48100-55500 |
| Tinker டின்கர் | 1400-1500 | 51800-55500 |
| Mechanic (Diesel/ Petrol) மெக்கானிக் (டீசல் / பெற்றோல்) | 1500-1700 | 55500-62900 |
| Mechanical Engineers மெக்கானிக்கல் இன்ஜினியர் | 3000-5000 | 111000-185000 |
| Helpers/Labours உதவியாளர்கள்/ சுத்திகரிப்பாளர்கள் (அனுபவம் தேவையில்லை) | 700 + 200 | 25200 + 7200 |

நிபந்தனைகள்: - இலவச தங்குமிட வசதி, வைத்திய வசதி, மேலதிக வேலை நேர கொடுப்பனவுகள், இரண்டு வருட ஒப்பந்தகாலம்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :- சுதாகரன் 0779580588

Mantek Enterpries No:- 535/2/1, Galle Road, Wellawatte, Colombo-06
Labow Lic No: 1449
T.P. [illegible], Fax:- 0114510549, E.Mail mantek.enterprises@yahoo.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்து தொழிற்பேட்டைகள் வடக்கில் அமைக்கப்படும்

(கொழும்பு)

அதிக எண்ணிக்கையிலான இளைஞர், யுவதிகளுக்கு தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்தி கொடுக்கும் 5 தொழிற்பேட்டைகளும் விரிவான சுற்றுலா வலயம் ஒன்றும் வடக்கில் ஏற்படுத்தப்படும் எனவும் இதற்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக்வும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

வடக்கில் மேற்கொள்ளப்படும் பிரதான அபிவிருத்தி வேலைத்திட்டமாக இது சர்வதேசத்தின் கவனத்தை ஈர்த்துள்ளது எனவும் அவர் கூறியுள்ளார். 30 வருடமாக பயங்கரவாத செயற்பாடுகள் காரணமாக இலங்கையில் புறந்தள்ளப்பட்ட பிரதேசமாக இருந்த வடக்கிற்கு தற்போது தொடர்ந்தும் அபிவிருத்தி யோசனைத் திட்டங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

தலா 25 ஏக்கர் என்ற கணக்கில் 125 ஏக்கர் நிலப்பரப்பில் 5 தொழிற்பேட்டைகள் மாவட்ட மட்டத்தில் ஏற்படுத்தப்படவுள்ளன. மண்டைதீவு, பருத்தித்துறை, காரைதீவு பிரதேசங்கள் சுற்றுலா வலயங்களாக அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

வடக்கின் வசந்தம் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் வடக்கில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் அபிவிருத்தி திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் ஆலோசனைக்கு அமைய பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்சவின் வழிகாட்டலில் இந்த அபிவிருத்தித்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

பழங்கள் சார்ந்த உற்பத்திகள், கூரைத் தகடு தயாரிப்பு ஆகிய தொழிற்சாலைகளை நிறுவதற்கான முதலீடுகளை ஏற்கனவே மேற்கொள்ள முதலீட்டாளர்கள் முன்வந்துள்ளனர் என வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

வவுனியா,கிளிநொச்சி, மன்னார் பிரதேசங்களில் தொழிற்சாலைகளை நிறுவ ஏற்கனவே காணிகள் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். (அ-2)

# உமையாள்புரத்தில் விபத்து; குழந்தை உட்பட இருவர் காயம்



உமையாள்புரம்,ஆனையிறவிற்கு இடைப்பட்ட ஏ- 9 வீதியில் அமைந்துள்ள பாலத்தில் இடம்பெற்ற உழவு இயந்திர ஹயஸ் விபத்தில் 2 வயது குழந்தை உட்பட இருவர் காயமடைந்துள்ளனர்.

நேற்று அதிகாலை 6 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் வெளிநாட்டிலிருந்து தமது சொந்த ஊரான வல்வெட்டித்துறைக்கு ஹயஸ் வாகனத்தில் பயணித்தவர்களே மேற்படி விபத்திற்குள்ளாகியுள்ளனர். இவ்விபத்தில் சதீஸ் கண்ணன் (வயது40), றெசி(வயது 2) ஆகியவர்களே காயமடைந்தவர்களாவர். மேற்படி விபத்து இடம்பெற்ற பாலத்தின் ஒருபகுதி பாதிக்கப்பட்டுள்ளமையினால் தற்போது ஒரு பக்கத்தினாலேயே வாகன போக்குவரத்து இடம்பெற்றுவருகின்றது.

இந்நிலையில் நேற்று அதிகாலையில் பரந்தனில் இருந்து ஆனையிறவு நோக்கி வந்து கொண்டிருந்த உழவு இயந்திரம் குறித்த சேதமடைந்த பாலத்தை அடைந்த போது பாலத்தினால் எதிரே வந்த வாகனத்திற்கு இடம்கொடுத்து அதில் தரித்து நின்றது.

இந்நிலையில் தரித்து நின்ற உழவு இயந்திரத்தின் பின்னால் வந்த குறித்த ஹயஸ் வாகனம் இவ்வுழவு இயந்திரத்துடன் மோதி சேதமடைந்தது. இதில் ஹயஸ் வாகனத்தில் பலர் இருந்தபோதும் குறித்த இருவரும் காயமடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர். விபத்து இடம் பெற்றதையடுத்து சம்பவ இடத்திற்கு வந்த அரசபடையினர்,பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர்.

அத்துடன் பாலம் சேதமடைந்துள்ளமையினாலேயே இவ்விபத்து சம்பவம் இடம்பெற்றதாக சுட்டிக்காட்டப்படுகிறது. குறித்த பாலத்தின் ஒருபகுதி ஒருவாரத்திற்கும் மேலாக சேதமடைந்துள்ள நிலையில் ஏ-9 வீதியில் பல வாகனங்கள் பயணிக்கின்ற போதும் அப்பாலம் புனரமைக்கப்படாமல் காணப்படுகின்றமைஅனைவரதும் விசனத்தை சம்பாதித்துள்ளது. (அ-5)

# தனியார் பல்கலைகளை ஊக்குவிக்கும் நோக்கில் உயர்தரப் பரீட்சை முடிவுகள்

## கா.எதிரான மக்கள் இயக்கம்

(கொழும்பு)

தனியார் பல்கலைக்கழகங்களை ஊக்குவிக்கும் நோக்கில் உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் காணப்படுவதாக காலனித்துவத்திற்கு எதிரான மக்கள் இயக்கம் தெரிவித்துள்ளது.

உலக வங்கியும் சர்வதேச நாணய நிதியமும் தனியார் பல்கலைக்கழகங்களை நிறுவுமாறு வலியுறுத்தி வருவதாகக் குறிப்பிட்டுள்ளது.

தனியார் பல்கலைக்கழகங்களின் இருப்பை உறுதி செய்யும் வகையில் இம்முறை உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் அமைந்துள்ளதாகத் தெரிவித்துள்ளது.

இம்முறை பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் ஒரு இலட்சத்து 30 ஆயிரம் மாணவ மாணவியர் பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெற்றுக் கொண்டுள்ளனர் எனக் குறிப்பிட்டுள்ளது. எனினும் இவர்களில் 2 ஆயிரம் பேர் மட்டுமே அரச பல்கலைக் கழகங்களில் அனுமதிக்கப்படுவர் என தெரிவித்துள்ளது.

அரசாங்கத்தின் இந்தத் திட்டத்திற்கு எதிராக இரண்டு போராட்டங்கள் நடத்தப்படவுள்ளதாக காலனித்துவத்திற்கு எதிரான மக்கள் இயக்கம் அறிவித்துள்ளது. (அ-2)

# நாட்டில் உள்ள கஃபீர் இனத்தில் ஆண்களின் எண்ணிக்கை குறைவு

இலங்கையில் மிகக் குறைந்த அளவில் வாழ்ந்து வரும் கஃபீர் சமூகத்தில் ஆண்கள் மிகக்குறைந்த அளவிலேயே இருப்பது அச்சமூகத்தின் எதிர்காலம் குறித்த கேள்விகளை எழுப்பியுள்ளது.

இம் மக்கள் பிறப்பால் இலங்கையர்களாகவும் உதிரத்தால் ஆபிரிக்கர்களாகவும் இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் இங்கும் இல்லை, அங்கும் இல்லைஎன்பதேயதார்த்தமாக உள்ளது.

இலங்கையில் ஏனைய சமூகங்களின் ஆண், பெண் விகிதாசாரத்தை ஒப்பிடும் போது கஃபீர் இனத்தில் அந்த ஏற்றத்தாழ்வு மிகவும் அதிகமாக உள்ளது. அவர்களிடையே பெண்கள் அதிகமாகவும் ஆண்கள் மிகவும் குறைவாகவும் உள்ளனர். தமது சமூகத்தில் ஏன் ஆடவர்கள் குறைவாக உள்ளார்கள் என்பதை அம்மக்களால் குறிப்பிட்டுதுல்லியமாக சொல்ல முடியாதுள்ளது.

ஆனால் தமது இனத்து ஆடவர் மற்றும் பெண்கள் தொடர்ச்சியாக தமிழ், சிங்கள, பறங்கியர் ஆகியோரையே திருமணம் செய்து வந்துள்ளதும் இதற்கு ஒரு காரணமாக இருக்கலாம் என்று இலங்கை வாழ் கஃபீர் நல்வாழ்வு சங்கத்தின் தலைவர் கோவிலகே லவுண்டி கிறிஸ்ட்டி கூறுகிறார்.

தலைமுறைகளை கடந்த ஒரு பிரச்சினையாக இது இருந்தாலும் இதற்கான தீர்வு என்ன என்பதை யாராலும் சுட்டிக்காட்ட முடியவில்லை. இன்னும் சில ஆண்டுகளில் இந்த இனமக்களே இலங்கையில் இல்லாமல் போகும் ஒரு அபாயம் உள்ளது என்றும் அவர்கள் கவலைப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

# காணி பிணக்கு காரணமாக பௌத்த பிக்கு கொலை

## சந்தேக நபர்கள் இருவர் சுட்டுக்கொலை

காணிப் பிரச்சினை காரணமாக பௌத்த பிக்கு ஒருவர் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

மொரட்டுவ எகடஉயன சுனந்தோபுராமய விகாரையின் விகாராதிபதி மிடிகஹாதென்ன விமலவன்ச தேரரே நேற்று முன்தினம் இரவு இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

46 வயதான குறித்த பௌத்த பிக்கு மீது காணிப் பிரச்சினை காரணமாக கூரிய ஆயுதமொன்றினால் கொடூரமான முறையில் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

கொலைச் சம்பவத்தின் பின்னர் மொரட்டுவை பிரதேசத்தில் பெரும் பதற்ற நிலைமை காணப்பட்டது.

இக்கொலைச்சம்பவம் இடம்பெற்றதன் பின்னர் பிரதேசவாசிகள் குறித்த சந்தேக நபரின் வீட்டுக்கு தீ மூட்டி கொளுத்தியுள்ளனர்.

சம்பவத்தையடுத்து தப்பியோடிய பிரதான சந்தேகநபர்கள் இருவரும் பொரலஸ்கமுவ பகுதியில் வைத்து நேற்றுக்காலை சுட்டுக் கொல்லப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ-2)

# ஐக்கிய நாடுகள் அமைப்பும் இனவாதத்தை தூண்டுகிறது

## தம்பரஅமிலதேரர் தெரிவிப்பு

ஐக்கிய நாடுகள் அமைப்பு, பொதுநலவாய நாடுகள் அமைப்பு போன்றனவே இனவாதத்தைத் தூண்டுவதாக ஜே.வி.பி. ஆதரவு காலனித்துவத்திற்கு எதிரான மக்கள் இயக்கத்தின் இணை அழைப்பாளர் தம்பர அமிலதேரர் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு கிழக்கை மீள இணைத்து அதிகாரப் பகிர்வினை வழங்குவது தொடர்பில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்துவதற்கு முனைப்பு காட்டுகின்றனர். திடீரென முஸ்லிம் எதிர்ப்பு இயக்கங்கள் தலைதூக்கியுள்ளன. இதன் பின்னணியில் சர்வதேச சக்திகள் செயற்பட்டு வருகின்றன.

சிங்கள மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்கும் இடையில் பிளவினை ஏற்படுத்தும் நோக்கிலேயே இவ்வாறான பிரசாரங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட்டால் வடக்கு கிழக்கு மாகாணங்களை மீள இணைப்பதற்கு முஸ்லிம்களின் ஆதரவை பெற்றுக் கொள்ளும் நோக்கில் இந்த சூழ்ச்சித் திட்டம் மேற்கொள்ளப்படுகின்றன.

தமிழ், முஸ்லிம் கூட்டுறவின் மூலம் சர்வஜன வாக்கெடுப்பில் சாதக பலன்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என்ற காரணத்தினால் இவ்வாறு சிங்கள மக்களிடமிருந்து முஸ்லிம்கள் பிரிக்கப்படுகின்றனர். கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் தமிழ்மக்கள் தலா 33 வீதம் வாழ்ந்து வருகின்றனர் என்றார். (அ-2)

# பழைய மாணவர் சங்கம் அமைத்தல்

(கிளிநொச்சி)

கிளி/வேம்பொடுகேணி சி.சி.த.க. பாடசாலையின் அபிவிருத்திச்சங்க பொதுக் கூட்டமும் பழைய மாணவர்சங்க அங்குரார்ப்பண நிகழ்வும் நாளை மறுதினம் வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பாடசாலை மண்டபத்தில் பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பாடசாலை அபிவிருத்தி தொடர்பாகவும் கலந்துரையாடவுள்ளதால் பாடசாலையின் பழைய மாண்வர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் மற்றும் பாடசாலையின் முன்னேற்றத்தில் அக்கறையுடைய பிரமுகர்கள் யாவரையும் கலந்து கொண்டு செயற்திறன் மிக்க பழைய மாணவர்சங்கத்தை ஸ்தாபித்து ஒத்துழைப்பு வழங்குமாறு பாடசாலையின் அதிபர் க.சண்முகதாஸ் கேட்டுள்ளார். (அ-9)




நாட்டின் 65 ஆவது சுதந்திரதின விழாவான நேற்றைய தினம் யாழ்.சிறைச்சாலையில் கைதிகளினை விடுதலை செய்யும் நிகழ்வு நடைபெற்றது. இந்நிகழ்வில் யாழ்.சிறைச்சாலையில் அத்தியட்சகர் எச்.எ.சி.பெரேரா மற்றும் சிறைச்சாலையின் பிரதானஅதிகாரி எஸ். இந்திரகுமார் உட்பட அதிகாரிகள் நிற்பதையும் விடுதலை செய்யப்பட்ட கைதிகள் விடைபெற்றுச் செல்வதையும் படத்தில் காணலாம். (படம் :-உ.சாளீன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெனீவாவை எதிர்கொள்ளும் உபாயங்கள் அரசிடம் இல்லை

## ஐ.தே.க.பொதுச் செயலாளர் தெரிவிப்பு

ஜெனீவா மனித உரிமைகள் பேரவையில் எதிர்வரும் மார்ச் மாதத்தில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் அமெரிக்காவினால் கொண்டு வரப்படும் போது அதனை எதிர்கொள்வதற்கான உபாயங்கள் எதுவும் அரசாங்கத்திடம் இருப்பதாகத் தெரியவில்லை எனத் தெரிவித்திருக்கும் ஐ.தே.க.வின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க மீண்டும் ஒரு கால அவகாசத்தையே அரசாங்கம் கோரும் எனவும் எதிர்வு கூறியுள்ளார்.

இது தொடர்பாக கொழும்பில் உள்ள சிங்கள ஊடகம் ஒன்றிடம் கருத்து தெரிவித்துள்ள அவர்,

இவ்விடயத்தில் சர்வதேசமும் பக்கச்சார்பாகவே நடந்து கொள்வதற்கான வாய்ப்பு உள்ளது எனக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கு எதிரான தீர்மானம் ஒன்றைக் கொண்டுவர வேண்டிய அவசியம் அமெரிக்காவுக்கு இருக்கின்றதா என்பதற்கான பதிலை எம்மால் கூறமுடியாது. ஆனால் தற்போதுள்ள நிலவரத்தின்படி ஜனநாயகத்துக்கு விரோதமான செயற்பாடுகளே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

கடந்த வருடத்தில் அமெரிக்கா தீர்மானம் ஒன்றைக் கொண்டு வராமல் இருந்திருந்தால் வடக்கில் அபிவிருத்தி நடவடிக்கைகள் எதுவும் ஏற்பட்டிருக்காது. அதற்காக இன்று வடக்கில் முன்னெடுக்கப்படும் எல்லா நடவடிக்கைகளையும் அபிவிருத்தி என்று கூறிவிட முடியாது.

அதற்காக அமெரிக்க தீர்மானத்தில் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தவும் மனித உரிமைகள் மற்றும் போர்க் குற்ற விசாரணைகளை முன்னெடுப்பதைப் பொறுத்தவரையும் அரசாங்கம் எதனையும் செய்யவில்லை. போர்க்குற்ற விசாரணை, மனித உரிமை மீறல்கள் என்பவற்றுக்கு இந்த அரசாங்கம் எப்போது பதில் கூறும் என்பது தெரியவில்லை.

கடந்த வருடத்தில் இந்தியாவுக்குச் சென்ற எமது நாட்டுத் தலைவர்கள் அதன் ஆதரவைப் பெற்றுக் கொள்வதற்கான முயற்சிகளை முன்னெடுத்தார்கள். ஆனால், இந்த முறை எந்தவொரு நாட்டுக்கும் எமது தலைவர்கள் ஆதரவைத் திரட்டுவதற்காகச் செல்லவில்லை.

அதனால் இந்த வருடத் தீர்மானத்தைப் பொறுத்தவரையில் கால அவகாசத்தைத் தாருங்கள் என்றுதான் அரசு கேட்கப்போகின்றது. சர்வதேசமும் இந்த விடயத்தில் பக்கச் சார்பாகச் செயற்படுவதற்கான வாய்ப்புக்களே காணப்படுகின்றன என அவர் தெரிவித்தார். (அ-2)

# பயணங்களை தடுக்க உதவிகள் வழங்கப்படும்

## ஆஸி.எதிர்க்கட்சி பேச்சாளர் தெரிவிப்பு

புகலிடக் கோரிக்கையாளர் பயணங்களை தடுக்க உதவிகள் வழங்கப்படும் என அவுஸ்திரேலிய எதிர்க்கட்சி குடிவரவு பேச்சாளர் ஸ்கொட் மொரிசன் தெரிவித்துள்ளார்.

படகுமூலம் இலங்கையிலிருந்து புக லிடக் கோரிக்கையாளர்கள் புறப்படுவ தனை தடுக்க சகல வழிகளிலும் ஒத்து ழைப்பு வழங்கப்படும் என அவர் குறிப் பிட்டுள்ளார்.

அத்துடன் இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்களை நாடு கடத்த வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்காலத்தில் எதிர்க்கட்சி தேர்தலில் வெற்றியீட்டினால் புகலிடக் கோரிக்கையா ளர் விவகாரத்தில் இலங்கை அரசாங்கத் துடன் இணைந்து செயற்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# சவுதிக்கு பணிப்பெண்களை அனுப்புவது இடைநிறுத்தம்

## வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவரகம்

(கொழும்பு)

சவுதி அரேபியாவுக்கு பணிப்பெண்களை அனுப்பும் நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக இலங்கையின் வெளிநாட்டு தொழில்வாய்ப்பு முகவரகம் அறிவித்துள்ளது.

சவுதி அதிகாரிகளால் உத்தரவாதம் வழங்கப்படும் வரை அங்கு பணிப்பெண்களை அனுப்புவது இடைநிறுத்தப்படுவதாக மேற்படி முகவரகம் குறிப்பிட்டுள்ளது.

சவுதியில் தற்போது 5 இலட்சம் இலங்கையர்கள் தொழில் புரிந்து வருகின்றனர்.

இந் நிலையில் சவுதியில் இலங்கையின் பணிப்பெண்கள் தொடர்ந்தும் சித்திர வதைகளுக்கு உட்பட்டு வருவதன் காரணமாகவே அங்கு புதிய பணிப்பெண்களை அனுப்புவதில்லை என்று முடிவெடுக்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டு தொழில் வாய்ப்பு முகவரகம் குறிப்பிட்டுள்ளது. (அ-2)

# மீன், நீரியல் வளங்களை பாதுகாக்க அரசு திட்டம்

## கடற்றொழில் நீரியல்வள பிரதி அமைச்சர்

(கொழும்பு)

மீன்பிடித்துறைக்குப் பயன்படுத்தப்படும் தடை செய்யப்பட்ட சகல உபகரணங்களையும் கைப்பற்றுவதற்காக கடற்படையுடன் இணைந்து விசேட திட்டமொன்று ஆரம்பித்துள்ளதாக கடற்றொழில் நீரியல்வள பிரதி அமைச்சர் சரத்குமார குணரத்ன தெரிவித்துள்ளார். இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடுபூராகவும் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்தத் திட்டத்தினூடாக சட்டவிரோத மீன்பிடி உபகரணங்களை முற்றாக ஒழிக்க திட்டமிடப்பட்டுள்ளது. கற்பிட்டி பத்தாங்குண்டுவ பகுதியில் சட்ட விரோத மீன்பிடி உபகரணங்கள் கொண்டு மீன்பிடித்ததில் பெருமளவு டொல்பின் மீன்கள் இறந்தன. இந்த சம்பவத்தையடுத்து சட்டவிரோத மீன்பிடி உபகரணங்களை ஆறுபடகுகள் மற்றும் ஆறு இயந்திரங்கள் என்பவற்றுடன் 15 மீனவர்கள் கைது செய்யப்பட்டனர். இந்த சம்பவத்தை அடுத்து சட்ட விரோத மீன்பிடி உபகரணங்கள் அனைத்தையும் கைப்பற்றுவதற்கு கடற்றொழில் நீரியல்வள அமைச்சு தீர்மானித்தது. தடை செய்யப்பட்ட மீன்பிடி உபகரணங்களை கைப்பற்றுவதற்கான திட்டத்தை ஒருங்கிணைக்க மூவரடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இந்த திட்டத்தை முன்னெடுப்பது தொடர்பில் கடற்படையுடன் பேச்சு நடத்தப்பட்டுள்ளது. தடைசெய்யப்பட்ட மீன்பிடி உபகரணங்கள் பாவனையினால் டொல்பின்கள் உட்பட பெருமளவு மீன்வளம் அழிந்து வருவதோடு நீரியல்வளமும் சேதமடைவதாக அவர் தெரிவித்தார். (அ-2)

# மீள்திருத்த விண்ணப்பப்படிவங்கள் இன்று வெளியிடப்படவுள்ளன

க.பொ.த.உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மீள் திருத்த விண்ணப்பப்படிவங்கள் இன்று செவ்வாய்க்கிழமை வெளியிடப்படவுள்ளன.

தனியார் பரீட்சார்த்திகள் இதன்படி பரீட்சை விடைத்தாள் மீள்திருத்த விண்ணப்பங்களை மேற்கொள்ள முடியும் என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பாடசாலை மாணவர்களுக்கான விண்ணப்பங்கள் பாடசாலை அதிபர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

எதிர்வரும் 22 ஆம் திகதிவரை க.பொ.த. உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மீள் திருத்த விண்ணப்பங்களை அனுப்ப முடியும் என அத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த ஜனவரி [illegible] உயர்தரப் பரீட்சை [illegible] யிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)


# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
University of Jaffna

## இதழியல் டிப்ளோமா பயிற்சிநெறி
## Diploma in Journalism - 2013/2014


### புதிய கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கோரல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படுகின்ற இதழியல் டிப்ளோமா இரண்டாண்டு பயிற்சி நெறிக்காக (2013/2014) புதிய மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளார்கள். இதற்கான அனுமதிக்காக தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படவுள்ளன.

விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகள் க.பொ.த உயர்தரப் பரீட்சையில் 3 பாடங்களில் சித்தியுடன் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கும் (Yes) தகுதியும் பெற்றிருக்க வேண்டும்.

### பயிற்சி வழங்கப்படும் துறைகள்

1. அச்சு ஊடகம் (Print Media)
2. இலத்திரனியல் ஊடகம் (Electronic Media)
3. இணைய ஊடகம் (New Media)



### பயிற்சிக் காலத்தில் மாணவர்கள் பெற்றுக்கொள்ளும் பயிற்சிகள்

1. செய்தித்தாள் மற்றும் சஞ்சிகை தயாரிப்பு
2. றேடியோ மற்றும் ரீ.வி.நிகழ்ச்சிகள் தயாரிப்பு
3. ஊடக நிறுவனங்களில் செயன்முறைப் பயிற்சி
4. சர்வதேச விரிவுரையாளர்களால் நடத்தப்படும் செயல்முறைப் பயிற்சிகள்
5. ஆவணப்பட தயாரிப்பு
6. சென்னை பல்கலைக்கழகத்துடன் இணைந்ததான பயிற்சிகள்

**கற்கைக் காலம் - 2 ஆண்டுகள் (முழுநேரம்)**
**விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி 15.02.2013**

### கட்டணங்கள்

| | |
|---|---|
| கற்கைநெறிக் கட்டணம் | ரூ. 20,000.00 |
| பதிவுக் கட்டணம் | ரூ. 750.00 |
| நூலக வைப்புப் பணம் (மீளளிக்கத்தக்கது) | ரூ. 750.00 |
| நூலக பயன்பாடு | ரூ. 1000.00 |
| மொத்தம் | ரூ. 22 500.00 |

விண்ணப்பப் படிவங்களை இல.84, ஜும்மா பள்ளி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையத்தில் ரூ.100 செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவங்களை ஊடகவளங்கள் மற்றும் பயிற்சி மையத்துக்கு நேரடியாகவோ மற்றும் பதிவுத் தபாலிலோ அனுப்பி வைக்கப்படல்வேண்டும்.

**மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவேண்டிய:**
**தொ.பே.இல.: 021 222 9873**


(சி-2321)

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# சபாஷ்! சரியான முடிவு!



சிவாவின் தந்தை சோமன் ஓர் எளிய விவசாயி: ஆயினும் தன் உழைப்பால் உயர்ந்து பல நிலங்களுக்கு சொந்தக்காரன் ஆனான். சிவாவைப் பள்ளியில் சேர்த்துப் படிக்க வைத்தான். கிராமத்துப் பள்ளியில் பள்ளியிறுதி வரை சிவா படித்து முடித்தான். சிவாவிடம் ஒருநாள் தனிமையில் பேசிய சோமன் அவனிடம் மகனே நீ மேற்படிப்பு படிக்க விருப்பப்பட்டால் நகரத்துக்குச் சென்று படி! அதற்கான பணச்செலவுக்கு எனக்கு வசதியிருக்கிறது என்று சொன்னான்.

ஆனால் சிவா அப்பா நான் படித்தது போதும். உங்களுடன் வயலில் வேலை செய்யவிரும்புகிறேன். ஒவ்வொருவனும் மேற்படிப்புக்காகவோ வேறு வேலை தேடியோ நகரம் சென்றால் வயலின் வேலை செய்ய யாருமே இருக்கமாட்டார்கள் என்றான். அவனுடைய தீர்மானமும் அதை வெளிப்படுத்திய விதமும் சோமனுக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

சோமன் வீடு ஒன்று வாங்க எண்ணி விற்பனைக்குத் தயாராக இருந்த இரண்டு வீடுகளைப் பார்வையிட்டு வந்தான். வீட்டுக்கு வந்தபின் அவன்



சிவாவிடம் உனக்காக ஒரு சொந்த வீடு வாங்கப்போகிறேன். அதனால் விற்பனைக்காகவுள்ள இரு வீடுகளையும் நீயே பார்த்து விட்டு எதை வாங்குவதென்று முடிவுசெய் என்றான். இரண்டையும் சென்று பார்த்த சிவா பொற் கொல்லனின் வீட்டுக்குப் பக்கத்து வீட்டை வாங்க முடிவு செய்தான்.

அதற்கு சோமன் காரணம் கேட்க அப்பா ஜமீன்தாரர் வீட்டுக்குப் பக்கத்து வீட்டில் இருந்தால் நாம் எப்போதும் அவர்களோடு நம்மை ஒப்பிட்டுப் பார்த்துக்கொண்டே இருப்போம். வாழ்க்கையில் நிம்மதியிருக்காது.

நம்மைப் போன்ற பொருளாதார நிலையிலுள்ளவர்கள் அருகேதான் நாம் வசிக்க வேண்டும் என்று சிவா பதிலளித்ததும் சபாஷ் சரியான முடிவு என்று சோமன் பாராட்டினான்.

சிலநாள் கழித்து சிவாவுக்கு திருமணத்திற்கு பெண் பார்க்கும் படலம் ஆரம்பமாகியது. சோமன் பார்த்த பெண்களில் இருவர் பொருத்தமாக இருந்தனர்.

அவர்களில் வனஜா விவசாயியின் பெண்! விமலா தனராஜு என்ற வியாபாரியின் பெண். வழக்கப்படி சிவாவிடம் இதோ பார்! சிவா! திருமணம் செய்யப் போவது நீ. அதனால் யாரைத் திருமணம் செய்து கொள்ளப் போவது என்று நீயே தீர்மானம் செய் என்றான் சோமன்.

தன் மகனின் குணத்தை நன்கறிந்த சோமன் அவன் தங்கள் அந்தஸ்துக்குத் தக்கவாறு விவசாயியின் பெண்ணைத்தான் திருமணம் செய்ய முடிவு செய்வான் என மனதில் நினைத்திருந்தான்.

ஆனால் மறுநாள் சிவா அப்பா நான் தனராஜுவின் மகளையே திருமணம் செய்து கொள்ள விரும்புகிறேன் என்றதும் சோமனுக்கு ஒரே ஆச்சரியம்.

சோமனின் ஆச்சரியத்தைக் கண்ட சிவா நான் ஏன் பணக்காரர் மகளைத் தேர்வு செய்தேன் என்று ஆச்சரியப் படுகிறீர்களா? விவசாயி மகளான வனஜாவிடம் உரையாடுகையில் அவள் ஏழ்மை எனக்கு அலுத்து விட்டது. உங்களைத் திருமணம் செய்து கொண்டால் வசதியாக வாழலாம் என்றாள்.

அவள் போக்கு பிடிக்கவில்லை. ஆனால் தனராஜு மகளோ என் குடும்பத்தினர் என்மீது காட்டிய அன்பினை மட்டுமே உங்கள் குடும்பத்தில் எதிர்பார்க்கிறேன் என்றாள். அவளை எனக்கு உடனே பிடித்து விட்டது என்றான்.

சபாஷ் மகனே! சரியான முடிவு எடுத்தாய் என்று சோமன் சிவாவைத் தோளில் தட்டிக் கொடுத்தான்.

# யார் பெரியவன்?

## அம்புலிமாமா கதைகள்

இமயமலைச்சாரலில் ஒரு பெரிய ஆலமரம் இருந்தது. அதில் ஒரு குரங்கும் சக்கரவாகப் பட்சியும் அம்மரத்தடியே ஒரு யானையும் வசித்து வந்தன.

ஆனால் மூன்றும் எப்போதும் சண்டையிட்டுக் கொண்டே இருந்தன. கடைசியில் மூன்றும் ஒன்றுகூடி தம்முள் எது வயதில் பெரியதோ அதற்கு மற்றவை கீழ்ப்படிய வேண்டும் என்ற முடிவுக்கு வந்தன. அப்போது அவைகளிடையே யாருக்கு வயது மிகவும் அதிகமென்ற சச்சரவு ஏற்பட்டது.

யானையோ இந்த மரம் மூன்றடி உயரச் செடியாக இருந்தபோதே நான் பார்த்திருக்கின்றேன். எனவே நான்தான் பெரியவன் என்றது. குரங்கோ நான் இதை இரண்டடி உயரச் செடியாக இருக்கும்போதே பார்த்திருக்கின்றேனே என்றது.

அப்போது சக்கரவாகப் பட்சி தம்பிகளே இங்கிருந்து சிறிது தூரத்தில் இன்னொரு பெரிய மரம் இருக்கிறது.

நான் அதன் பழத்தைத் தின்று இங்கு அதன் விதையைத் துப்பினேன். அது தான் இம்மாதிரி மரமாக முளைத்திருக்கிறது என்றது.

யானையும் குரங்கும் சக்கரவாகப் பட்சிதான் வயதில் பெரியதென ஒப்புக் கொண்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றாம் உலகப்போர்

36

## மானுடத்திற்கான திடக்கண்ணீர்!

## உசுரு விட்டுப் போறதுதான் சாவா? 'ஊரு விட்டுப் போறதும் சாவுதானய்யா



"ஏ ஒத்தைவீட்டு மூளி...! நீ ஏன் நிலத்த விக்கப் பாக்குறா?"

"கைம்பொண்ணாட்டியா நான் எத்தன நாளைக்கு ஒத்தக் கொத்துல களையெடுத்து அலைய முடியும்? மம்பட்டி வேலைக்கு ஆள் இருக்கா? மரம் ஏற ஆள் வாரானா? பொம்பள எனக்குத் தென்னைமரம் ஏறத்தெம்பிருக்கா? ஒத்த ரூவா அரிசி வாங்கி உலை வச்சிட்டுச் சாராயக் கடையில நிக்குது சாதிசனமெல்லாம்.

நிமிந்த ஆளுக்குக் கூலி நூத்தம்பது. உழைக்கிறவன் திங்கட்டும் பாவம். ஆனா உழைக்க வாரானா? போன மாசம் சுத்துக்கால் வெட்டப் பணம் குடுத்துட்டு வந்தேன் பதினஞ்சாளுக்கு. விடியப் போயிட்டேன் தோட்டத்துக்கு; வெயிலேறியும் ஆள் வரல. என்னா எவ்விடமின்னு மந்தைக்கு ஓடிப் போயிப் பாத்தா- பொக்கப்பாண்டி வந்து அட்டணம்பட்டியையே ஏத்திக்கிட்டிருக்கான் அரைலாரியில. மதுரைக்கு மந்திரி வாராராம்; கூட்டம் கொறையுதாம். ஆளுக்கொரு பிரியாணிப் பொட்டலமாம்; கையில வேற எரநூறாம். எவன் வருவான் வேலைக்கு? இழுத்துப் பறிச்சு விவசாயம் பாத்தது என்னோட சரி. அடுத்த தலைமுறைக்கு ஆள் இல்லய்யா மண்ணைக் கிண்ட"

கூட்டத்தச் சூறாவளியாச் சுத்தி வருது அவ பேசி முடிக்க ஒரு பெருமூச்சு.

"என்னிய யாரும் கேக்க மாட்டீகளா ஏன் விக்கப் போறேன்னு? நானே சொல்றேன். உச்சிமல தீப்புடிச்சா ஊருக்கா தெரியாமப் போயிரும்? கழுதைக்குக்கூடத் தெரியுமே நான் கரும்பு நட்ட கதை"

கெடாவீரன் பேசறதக் கண்ணைச் சிமிட்டாமக் காதைத் தீட்டிக் கேட்டு நிக்குது கூட்டம்.

"எல்லாருக்கும் இனிக்குது. விவசாயம் பண்ணிப் பாத்தவனுக்கு மட்டும் கரும்பு கசக்குதப்பா. விதைக்கரணையே ஒரு ஏக்கருக்கு ஏழாயிரத்த முழுங்கிடுது. அப்பறம் உழவடிக்க, வரப்புவெட்ட, நடவுநட, பாத்தி போட, ஆட்டுக் கெடைநிறுத்த, உரம்போட இந்தா இந்தான்னு இழுத்து முப்பதாயிரத்துக்குப் போயி நிக்கிது. என்னதான் கரும்பு வெல்லமா விளைஞ்சு செல்லமாப் பொழிஞ்சாலும் ஏக்கருக்கு முப்பதாயிரம் நின்னா மூதாக்கமாரு செஞ்ச புண்ணியம். கரும்புல மட்டும் மொதக் கரும்பு மில்லிக்காரனுக்கு; ரெண்டாம் கரும்புதான் நட்டவனுக்கு. அந்தக் கணக்கப் போட்டுத்தாய்யா அள்ளி எறிஞ்சேன் காசை. ஆறே மாசத்துல செந்தாழ நோயி அடிச்சிருச்சு. கணுப் புழுவு விழுந்துபோயிருச்சு. மயில் தோகை மாதிரி வந்த கரும்பு குக்கு நோவு வந்த கோழியா ஒக்காந்திருச்சு. இது அஞ்சாவது கடனய்யா. இதுக்கு மேல தாங்க நெஞ்சுல வலுவு இல்ல. விக்கிறதத் தவிர வேறவழியில்ல. முத்துமணி கெட்டிக்காரப் பய. மில்லுக்காரன்கிட்ட நல்ல விலை பேசியிருக்கான். விவகாரம் புடிச்ச பயலா இருந்தாலும் வெவரமான ஆளப்பா முத்துமணி!"

நிலத்த விக்கிறதுன்னு முடிவு பண்ணி முன்பணம் வாங்குன ஆளுகளெல்லாம் அவுகவுக நியாயம் பேசி முடிச்சிட்டாக.

ரெண்டு மூணு கேள்வி எழும்புது கூடிநின்ன கூட்டத்துக்கு.

இனிமே சிறு விவசாயி இருப்பானா நாட்டுல? சின்ன மீனுகள வாழ விடுமா திமிர் கொண்டு திரியிற திமிங்கலங்க? விவசாயி அல்லாதவக கையில விவசாயம் போயிருமா?

கோவிந்த நாயக்கரு பின்னாலயே போகுது ஒரு பெருங்கூட்டம் ரோட்டு வரைக்கும் வழியனுப்ப.

"உசுரு விட்டுப் போறதுதான் சாவா? ஊருவிட்டுப் போறும் சாவு தானய்யா"

கசகசன்னு பேசிக்கிட்டே கலைஞ்சு திரும்புது கூட்டம்.

சாதிசனமெல்லாம் ரோட்ட விட்டுத் திரும்பி ஊர் எல்லைக்குள்ள நுழையு முன்ன [illegible] வர்றான் எண்டப்புளியான் பேரன்.

"அய்யா... ரெட்டாலமரத்துக் கீழ பொண்டாட்டிய எத்தி எத்தி இடுப்ப ஒடிக்கிறானய்யா சொள்ளையன். நீங்க போயி விலக்கலேன்னா கொன்டே புடுவானய்யா... அய்யா... அய்யா... வேகமாப் போங்கய்யா"

அப்படியே திரும்புது அட்டணம்பட்டி சமூகம்.

"திருப்பூருக்கில்லய்யா பொழைக்கப் போனான் சொள்ளையன். இப்பத் திரும்பிட்டானா?"

"வீடு வாச வித்துக் கொண்டுபோன காச அங்க ஒரு சீட்டுக் கம்பெனியில கொடுத்து ஏமாந்துட்டானாமில்ல"

"பொம்பளப் புள்ளைகள்ல ஒரு புள்ள வேலைக்குப்போன இடத்துல காங்கேயன்காரன்கூட ஓடிப்போயிட்டாளாம். இன்னொருத்தி நான்டுக்கிட்டுச் செத்துப்போனதா அரசபுரசலாக் காத்துல வந்து காதுல விழுந்துச்சு"

ஊரைப் பிரிஞ்சு போற வலி இருக்கே... அது சம்பவம் பாக்கிற ஆளுகளுக்குத் தெரியாது; சம்பந்தப்பட்ட ஆளுகளுக்குத்தான் தெரியும். குலுங்கி லேசா அழுதாரு கோவிந்த நாயக்கரு. மந்தைய வெறிச்சு வெறிச்சுப் பாக்குறாரு. கெணத்து மேடு, மாட்டுத் தொழுவு, களத்துமேட்டு ஆடு, கன்னுக் குட்டிய நக்குற மாடு, நுங்கு எடுத்த பனையில வண்டி செஞ்சு உருட்டி ஓடற பய. சுருட்டுன பாவாடையில பண்டம் சிந்தக் கூடாதுன்னு தொடைக்கு மேல திரட்டித் தெரியக் காட்டி நடந்து போற சின்னப்பொண்ணுக. பொந்து விழுந்து சந்து விழுந்தாலும் புடிச்சபுடி மாறாத புளிய மரம் எல்லாம் அவரப் பாத்து 'போறீகளே கோவிந்த நாயக்கரே... வருவீகளா?'ன்னு வருத்தமாக் கேக்கிற மாதிரி சாடைமாடையாத் தெரியுது அவருக்கு.

முன்னால போகுது காரு; பின்னாலயே போகுது ஊரு.

திடீர்னு காரைவிட்டு இறங்கி ரோட் டோரமா நின்னு தலைக்கு மேல கையத் தூக்கித் தூரத்துல தெரிஞ்ச முத்தாலம்மன் கோயில் கோபுரத்துக்கு மூணு சுத்துச் சுத்தி ஒரு கும்புடு போட்டா சங்கிலியம்மா.

யாருக்கும் தெரியாம என்னமோ ஒண்ணு எல்லார் நெஞ்சையும் அழுத்துது. கடந்து போயிருச்சு காரு. தூரத்துக்குள்ள கரைஞ்சு காணாமப் போயிருச்சு சங்கிலியம்மா கட்டியிருந்த சிவீர்ங்கற சேல நெறமும்.



"கோழிக்கறி போட்டு, இட்டிலி வித்து ஒண்ணும் உருப்படியாகல. போன இடத்துல பொழைக்க வழி இல்லாம, 'போன மச்சான் திரும்பி வந்தான் பூ மணத்தோட'ங்கற மாதிரி திரும்பி வந்துட்டான் போலயிருக்கு"

பொண்டாட்டியக் குடுமியோட தூக்கி ஆலமரத்து ஆணியில அறையப் போறப்ப ஓடிப்போயி அவன் கையப் புடிச்சுட்டாரு கருத்தமாயி.

"ஏலே! நீ சொள்ளையன்! உனக்குக் கிறுக்குப் புடிச்சிருக்காடா. இந்த மிதிமிதிக்கிற"

ஆளுக தடுக்கவும் வெறி நாய் மாதிரி குலைக்க ஆரம்பிச்சுட்டான் சொள்ளையன்.

"இவளக் கொன்டு குலைய அத்தாத்தான் என் ஆத்திரம் அடங்கும். புள்ள செத்துப் போச்சு. பொழப்பு அத்துப் போச்சு. இனிமே திருப்பூர்ல பொழைக்க முடியாதுடி. சொந்த மண்ணுல போய்ச் சாவோம்டின்னா வாராளா? ஊருக்குள்ள வரமாட்டேன்னு ஆலமரத்த உடும்பாப் புடிச்சு நிக்கிறாளே. விடுங்கய்யா இவள மந்தையில வெட்டி மஞ்சளாறு அணையில் வீசிட்டு வந்துர்றேன்"

மிரண்டுபோன பிள்ளைக ரெண்டும் ஆத்தா மேல விழுந்து அழுது புரளுதுக.

சீல கட்டுன கருவாடு மாதிரி நொந்து நூலாப் போன பொம்பள. பிள்ளைக ரெண்டையும் தனக்குப் பாதுகாப்பா நெஞ்சுல கட்டிக்கிட்டுக் கருத்தமாயி காலைப் புடிச்சுக் கதறி அழுகுறா:

"இந்த ஊருல எப்பிடிப் பொழைப்பேன் மாமா? ஆறு பேராப் போயி நாலுபேராத் திரும்பி வந்திருக்கமே... சாதிசனத்து மூஞ்சியில நான் எப்பிடி முழிப்பேன்? பொழைக்க விதியிருக்கா? உழுக மாடு இல்ல; ஒண்ட வீடில்ல; கிண்ட நிலமில்ல. நான் இங்கேயே சாகிறேன். என்ன அட்டணம்பட்டிச் சுடுகாட்டுல அடக்கம் பண்ணிரு மாமா"

நெஞ்சு ரெண்டா வகுந்து போச்சு கருத்தமாயிக்கு. கண்ணு ரெண்டும் பொங்கி நிறைதண்ணி நிக்குது.

குனிஞ்சாரு. நீண்ட நெடுங்கையில ஒரு பிள்ளயத் தூக்கித் தோள்ல வச்சாரு; இன்னொரு பிள்ளய இடுப்புல வச்சாரு.

"யம்மா ரோசாமணி! எந்திரிம்மா! நெலம்தான இல்ல. என் நெலத்துல நீயும் பாடுபடு; கஞ்சிகுடி. குடியிருக்க வீடுதான இல்ல. அங்கேயே ஒரு குடுசு கட்டித்தாரேன்- இரு. சாகிறவழி ஒண்ணு தான்தாயி; பொழைக்கிற வழி நூறு இருக்கு. எந்திரி தாயி எந்திரி!"

வெள்ளாட்டுக்குப் பின்னாலயே குட்டிகபோற மாதிரி கருத்தமாயிக்குப் பின்னாலயே நடந்து போகுதுக அந்த நாலு உசுரும். ஊரே வேடிக்கை பாத்து வேர்த்து நிக்குது.

கெடாவீரன் கேக்குறாரு-

"ஏப்பா... பரமனாண்டி நீயும் நானும் நெழல் கொடுக்க முடிஞ்சதா சாகப் போறவளுக்கு? கருத்தமாயி குடுக்குறாரு. ஏன்? நீயும் நானும் நெலத்த விக்கப்போறோம்; கருத்தமாயி விக்கல. நெலம் உள்ளவன் தானப்பா தானும் கஞ்சி குடிப்பான்; ஊருக்கும் கஞ்சி ஊத்துவான்."

நிசந்தான...? புதைச்சாலும் நெலம் வேணும்; விதைச்சாலும் நெலம் வேணும்- மனுசப் பொறப்புக்கு.

(தொடரும்)



வாழ்வோடு ஏன் விவாகரத்து?

உடைந்த மேகம் [illegible]
ஓடுங்கள் ஓடுங்கள்
எங்கே மழையின் [illegible]யோ
அங்கே நில்லுங்கள்
மழைக்கு வெளியே நின்று
மழையை ரசியுங்கள்
மழைபெய்த களிமண் நிலமாய்
மனம் எப்போதும் நெகிழ்ந்திருக்கட்டும்
பணம் கிடந்தால் மட்டுமல்ல—
ஓடும் பேருந்தில் ஏறும் பெண்ணின்
கூந்தல் பூ உதிர்ந்தாலும்
காவல் நிலையம் ஒப்படையுங்கள்
மரணம் கூட வித்தியாசமாயிருக்கட்டும்
அழாதிருக்கும் ஒவ்வொருவருக்கும்
ஆளுக்கொரு கோப்பை தேநீர்

-வைரமுத்து-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலிபான், அல்கொய்தா மீதான இலங்கையின் தடையை ஏற்றுக்கொள்ள முடியாது

## முஸ்லிம் கவுன்சில் தெரிவிப்பு

(கொழும்பு)

தலிபான் மற்றும் அல்கொய்தா அமைப்புக்களை தடைசெய்வது குறித்து இலங்கை அரசாங்கம் எடுத்துள்ள தீர்மானத்தை ஏற்றுக்கொள்ள முடியாது. இவ்வாறான தடைச் சட்டங்கள், சிறுபான்மையினரான முஸ்லிம்கள் மீது துஷ்பிரயோகத்தை மேற்கொள்ள வாய்ப்பு ஏற்படுத்தும் என்று இலங்கை முஸ்லிம் கவுன்சில் வலியுறுத்தியுள்ளது.

முஸ்லிம்களுக்கு எதிராக அண்மைக் காலமாக பௌத்த தீவிரப் போக்குடைய அமைப்புகளால் முன்னெடுக்கப்பட்டு வரும் பிரசாரங்கள் தொடர்பில் விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்றது.

இதன்போதே மேற்கண்ட்வாறு வலியுறுத்தப்பட்டது. இதன்போது உரையாற்றிய இலங்கை முஸ்லிம் கவுன்சிலின் தலைவர் என்.எம்.அமீன் கூறுகையில், முஸ்லிம் சமூகத்தின் கலாசார அம்சங்கள் குறித்து தவறான கருத்துக்களை வெளியிடுவதை அனைவரும் தவிர்த்துக்கொள்ள வேண்டும். இவ்வாறாக தவறான கருத்துக்கள் பரப்பப்படுவதன் மூலம் முஸ்லிம்களுக்கும் ஏனைய சமூகங்களுக்கும் இடையிலான உறவு பாதிக்கப்படும் அபாயம் இருக்கின்றது.

குறிப்பாக ஹலால் சான்றிதழ்கள் வழங்கும் நடைமுறைகள் குறித்து சில அமைப்புகளால் அண்மைக்காலமாக சில தவறான கருத்துக்கள் பரப்பப்பட்டு வருகின்றன என்றார்.

இதேவேளை, ஜனாதிபதியின் சட்டத்தரணியான எம்.எம்.சுஹைர் உரையாற்றுகையில், தலிபான்கள் மற்றும் அல்கொய்தாவுக்கு எதிரான இலங்கை அரசாங்கத்தின் உத்தேச தடையை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது. இவ்வாறான தடைச் சட்டங்கள் சிறுபான்மையினரான முஸ்லிம்கள் மீது துஷ்பிரயோகத்தை மேற்கொள்ள வாய்ப்பை ஏற்படுத்தும்.

சிறுபான்மைச் சமூகங்களைச் சேர்ந்த பலர் வெளிநாடுகளுடன் குறிப்பாக மத்திய கிழக்கு நாடுகளுடன் வணிகத் தொடர்புகளை வைத்திருக்கின்றனர். இந்தச் சட்டங்கள் துஷ்பிரயோகம் செய்யப்படும் பட்சத்தில் அது இவர்களுக்கு பாதகமாக அமையலாம். இவை குறித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் கலந்துரையாடவுள்ளோம் என்றார். (அ-2)

## கூகுள் தேடல் முகப்பில் வாள் ஏந்திய சிங்கம்

(கொழும்பு)

கூகுள் தேடல் முகப்பு பக்கம் இலங்கையின் சுதந்திர தினத்தை குறிக்கும் வகையில் மாற்றப்பட்டுள்ளது.

இதன்படி google.lk மற்றும் google.com முகப்பு பக்கத்தில் இந்த மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இலங்கை தேசியக் கொடியில் இருக்கும் வாள் ஏந்திய சிங்கத்தை கூகுள் தேடல் பக்கத்தில் அவதானிக்க கூடியதாக உள்ளது.

இதேவேளை தேசியக் கொடியிலுள்ள மூன்று நிறங்களும்கூகுள் எழுத்துக்களில் காணப்படுகிறது.

இதற்கு முன்னதாக இந்தியா மற்றும் பாகிஸ்தான் நாட்டு தேசிய தினங்களின் போதும் கூகுள் தேடல் முகப்பு பக்கத்தில் அந்நாட்டு தேசிய தினங்களிற்கு ஏற்றாற் போல் மாற்றங்கள் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# போக்குவரத்து பேருந்துகளுக்கு ஞாயிற்றுகிழமையில் ஹாவ் டேயா?

## பயணிகள் கேள்வி

(முல்லைத்தீவு)

கொக்கிளாயில் இருந்து முல்லைத்தீவுற்கு செல்லும் அரச,தனியார் பேருந்துகள் ஞாயிற்றுக்கிழமைகளில் நண்பகல் 12.30 மணிக்கு பின்னர் சேவையில் ஈடுபடுத்தப்படுவதில்லை என பயணிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு நண்பகல் 12.30 மணிக்கு பின்னர் அரச மற்றும் தனியார் பேருந்துகள் சேவையில் ஈடுபடுத்தப்படாமையால் முல்லைத்தீவில் உள்ள தனியார் கல்வி நிலையங்களுக்கு செல்வோர் மற்றும் ஏனைய தேவைகளுக்காக முல்லைத்தீவிற்கு பயணிக்க முடியாத நிலை காணப்படுகின்றது.

முல்லைத்தீவில் இருந்து தேவை கருதி கொக்கிளாய்க்குச் செல்வோர் திரும்பிவர முடியாத நிலை காணப்படுகின்றது.

இவ்வாறு பேருந்து சேவைகள் எவையும் இன்மையால் தொழிலாளர்களும் பாதிக்கப்படுகின்றனர்.

பேருந்து சேவைகள் இன்மையால் அதிக பணத்தை கொடுத்து முச்சக்கரவண்டிகளில் பயணிக்க வேண்டிய நிலை உள்ளது.

எனவே பி.ப 3 மணிக்கு அல்லது பி.ப 4 மணிக்கு ஒரு அரச மற்றும் தனியார் பேருந்து சேவையையாவது ஏற்படுத்தி போக்குவரத்திற்கு உதவ வேண்டுமென பயணிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-3-267)

# ஒற்றுமையுடன் கைகோர்த்து செயற்படுவதற்கு உறுதி பூணுவோம்



தேசிய சுதந்திர தினத்தில் நாம் அனைவரும் தாய் நாட்டின் சமூக, பொருளாதார, கல்வி, கலாசார, முன்னேற்றத்திற்காக ஒன்றுபட்டு ஒற்றுமையுடன் கைகோர்த்துச் செயற்படுவதற்கு உறுதி பூணுவோம்.

இவ்வாறு பிரதமர் தி.மு. ஜயரட்ன விடுத்துள்ள சுதந்திர தின வாழ்த்து செய்தியில் தெரிவித்துள்ளார்.

பிரதமரின் வாழ்த்துச் செய்தியில் கூறப்பட்டுள்ளவை வருமாறு, இலங்கைக்கு அரசியல் சுதந்திரம் கிடைக்கப் பெற்று 65 ஆண்டுகள் பூர்த்தியாகியுள்ளது. இலங்கையர்களான எம் அனைவரினதும் உள்ளங்களைப் பூரிப்படையச் செய்யும் அதிஷ்டம் மிக்க தினமாகும். வெளிநாட்டு ஏகாதிபத்திய ஆட்சியில் இருந்து மீண்டும் இறையாண்மை மிக்க நாடாகத் தோற்றம் பெற்றது முதல் இன்றுவரை கடந்த 6 1/2 தசாப்த காலத்தினுள் இலங்கையானது பாராட்டத்தக்க வகையில் சமூக, பொருளாதார, கல்வி, கலாசார ரீதியாக முன்னேறியுள்ளதைக் காணலாம்.

இந்த காலத்தினுள் பொருளாதார மற்றும் சமூக ரீதியாக ஏற்பட்ட பின்னடைவுகளுக்கு மத்தியிலும்கூட வெற்றிப் பாதையினுள் பிரவேசிப்பதற்கு எம்மால் முடிந்துள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் வழிகாட்டலின் கீழ் மூன்று தசாப்தங்களாக எம்மை ஆட்கொண்டிருந்த பயங்கரவாதத்திடம் இருந்து இந்த நாடு மீட்டெடுக்கப்பட்டுள்ளது. பயங்கரவாதத்தினால் அதிகம் பாதிக்கப்பட்டிருந்த வடக்கு கிழக்குப் பிரதேச மக்களின் வாழ்க்கையினை முன்பிருந்தவாறு இயல்பு நிலைக்குக் கொண்டு வருவதற்கு தற்போதைய அரசாங்கமானது பல்வேறு வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது.

யுத்தத்தினால் இடம்பெயர்ந்த மக்களின் வீட்டுவசதிகள் பூரணப்படுத்தப்பட்டுள்ளன. அவர்களை மீள்குடியேற்றி அழிவுக்குட்பட்ட பாதைகள், மின்சாரவசதிகள், பாடசாலை வசதிகள் என்பன மறுசீரமைக்கப்பட்டுள்ளன.பயங்கரவாதம் ஒழிக்கப்பட்ட மூன்று ஆண்டுகளுக்குள் வடக்கு கிழக்குப் பிரதேசங்கள் பெற்றுக் கொண்டுள்ள சமூக, பொருளாதார, கல்வி, கலாசார ரீதியான முன்னேற்றத்தினை அப்பிரதேசங்களில் சுற்றுப் பயணம் மேற்கொண்ட வெளிநாட்டுத் தூதுவர்கள் உலகவங்கி மற்றும் ஆசிய வங்கிப் பிரதிநிதிகள் பாராட்டியுள்ளனர் என்றார். (அ-2)

# 30 வீத சிறார்களுக்கு போசாக்கின்மை

## இ.போ.நி.சங்கம்

நாட்டின் 30 வீதமான சிறார்கள் போசாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளதாக இலங்கை போசாக்கு நிபுணர் சங்கத்தின் தலைவர் கலாநிதி ரேணுக டி சில்வா தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

போசாக்கு நிபுணர்கள் சங்கத்தின் கூட்டத்தில் கலந்து கொண்ட போது அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தாய்மார்களில் மூன்றில் ஒரு பகுதியினர் இரத்தச் சோகையினால் பாதிக்கப்பட்டுள்ளனர்


மக்களின் போசாக்கு நிலைமையை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். குறிப்பாக சிறுவர் சிறுமியரின் போசாக்கு நிலைமை குறித்து கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டும். (அ-2)

# திவிநெகும திணைக்களம் மூன்று மாதங்களில்

திவிநெகும அபிவிருத்தித் திணைக்களம் மூன்று மாதங்களில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக சமுர்த்தி பணிப்பாளர் நாயகம் ஜீ.பி. திலகசிறி தெரிவித்துள்ளார்.

திவிநெகும திணைக்களத்தை ஆரம்பிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார். சமுர்த்தி வங்கிகள் திவிநெகும வங்கிகளாக மாற்றம் செய்யப்படவுள்ளன. சமுர்த்தி நிறுவனத்தில் கடமையாற்றியவர்கள் திவிநெகும திணைக்களத்தின் கீழ் உள்வாங்கப்படவுள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)





இலங்கையின் 65 ஆவது சுதந்திரதின நிகழ்வுகள் யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்றன. இந்நிகழ்வில் யாழ். அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தேசியக் கொடியினை ஏற்றுவதையும் சுதந்திரதின நிகழ்வில் கலந்து கொண்ட ஏனைய அரச அதிகாரிகளையும் படங்களில் காணலாம். (படங்கள்:- எஸ். ஆர். கரன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முறையறிந்து உட்கொள்ளும் உணவு மருந்தாகி உடலுக்கு நலம் சேர்க்கும்

நீண்ட காலம் நோய் நொடியில்லாமல் வாழ்வதற்கும் நமக்குப் போதுமான சக்தியை ஊட்டவும் அறுசுவைகள் துணை புரிகிறது. இனிப்புச் சுவை நமக்கு வளத்தையும் கைப்புச் சுவை நமக்கு மென்மையையும் புளிப்புச் சுவை நமக்கு இனிமையையும் கார்ப்புச்சுவை நமக்கு வீர உணர்வையும் துவர்ப்புச் சுவை நமக்கு ஆற்றலையும் உவர்ப்புச் சுவை நமக்கு தெளிவையும் உண்டாக்குகின்றன என்று சொன்னால் அது மிகையாகாது.

உணவை பசிப்பிணி மருந்து என்றும் உணவளிப்போரை பசிப்பிணி மருத்துவர் என்றும் தமிழ் இலக்கியம் போற்றுகிறது. பசியை அடக்காவிட்டால் உடம்பு மிகுந்த சோர்வை அடையும். பலம், மன உற்சாகம், ஆசை முதலிய குணங்கள் குன்றும்.

நாக்கு ருசியை உணராது. எந்த பேச்சும் வாயிலிருந்து எழும்பாது. இரண்டு காதுக்ளும் கேளாதவைகள் ஆகிவிடும். கண்களில் இருள்மூடும். மேலும் பல துன்பங்களும் உண்டாகும். இன்று நாம் உண்ணும் உணவு சமிபாடடைந்து சப்த தாதுக்களையும் நிரம்பச் செய்து ஏழாவது நாள் அன்று நமது உடம்புக்கு வலிமையைத் தரும் என்று சித்தரும் புலவருமான தேரையர் கூறியிருக்கிறார்.

திருவள்ளுவர் மூவகை மாறுபாடுகள் இல்லாமல் உணவு இருப்பது அவசியம் என்கிறார்.

### சுவை வீரியங்களால் மாறுபாடு கொள்ளாமை

ஒரு உணவுப் பொருள் மற்றொரு உணவுப் பொருளோடு சேரும்போது சுவைகளின் தன்மையால் மாறுபாடு கொண்டு நச்சுத் தன்மை அடையும். உதாரணமாக பாலும் மீனும், பாலும் கீரையும் சேர்ந்தால் நச்சுத் தன்மையைப் பெறும். மீன் உணவு உண்ட பின் பால் அருந்தக்கூடாது. அதேபோல் கீரை வகைகள் சாப்பிட்ட பின்னரும் பால் பருகக் கூடாது. மாறாக பலாப்பழத்துடன் தேன் அல்லது நெய் சேர்த்தும் வேர்க்கடலையோடு வெல்லம் சேர்த்தும் உண்ண வேண்டும்.

வாதம், பித்தம், கபம் ஆகிய மூன்றும் ஒன்றை ஒன்று மிகாத படி இருக்க மிளகு, சீரகம், பூண்டு, மஞ்சள், பெருங்காயம், ஏலம், வெந்தயம் ஆகியவற்றை தேவைக்கும் ருசிக்கும் ஏற்ப சமையலில் சேர்த்துச் சமைத்து உண்ண வேண்டும். இவ்வாறு உண்டால் சுவை வீரியங்களால் மாறுபாடு இருக்காது.

### உண்பதன் பகுதியோடு மாறுபாடு கொள்ளாமை

உணவானது உண்பவர்களுடைய இயல்புக்கு மாறுபாடு இல்லாமல் பொருந்தியிருக்க வேண்டும். அதாவது ஆண்களின் இயல்புக்கும் பெண்களின் இயல்புக்கும் ஏற்றவாறு உணவு அமைய வேண்டும். ஆண்களின் உழைப்பு, வலிமைக்கு ஏற்ப உணவு அதிகமாகவும் மந்தமும் வன்மையும் உடையதாக அமைய வேண்டும்.

ஆனால், உண்டி சுருங்குதலே பெண்டிற்கழகு. அடுத்தபடியாக வயதிற்கு ஏற்ற இயல்பான உணவு அமைய வேண்டும். சிறு குழந்தைகளுக்கு செரிமானம் எளிதில் ஆகக்கூடிய உணவு வகைகளே ஏற்றவை. அங்கங்கள் முதிர்ந்து வளர்ச்சி பெற்ற வாலிப பருவத்தினருக்கு சத்து மிக்க திடமான அனைத்து வகை உணவு வகைகளையும் தாராளமாகக் கொடுக்க வேண்டும்.

உழைக்கும் உழைப்புக்கேற்றவாறு உணவை உண்ண வேண்டும். உடல் உழைப்பு மிகுந்தோருக்குப் பசியும் தாகமும் ஏற்படும். அவர்களுக்கு எந்தக்கடின உணவாக இருந்தாலும் சீரணம் ஆகிவிடும். எனவே, அவர்கள் மந்தம், கனம், வன்மை, எண்ணெய்ப்பதம், குளிர்ச்சி ஆகிய குணமுள்ள உணவுகளையும் உட்கொள்ளலாம்.

முதுமை அடைந்தபோது அங்கமெல்லாம் தளர்ச்சி அடைந்து வாதம் மேலிட்டிருக்கும். அப்போது மந்தப் பொருட்களும் எண்ணெய் பதார்த்தங்களும் சமிபாடடையாது. எனவே, அவர்களுக்கு மென்மை, வெம்மை, நுண்மை ஆகிய குணங்களையுடைய பொருட்களையே கொடுக்க வேண்டும். அதிக சத்துள்ள பொருட்கள் தேவையில்லை.

தேக உழைப்பில்லாதவர்கள் நீரில் ஊறிய கொண்டைக் கடலை, உளுந்து, மந்தமான எருமைப்பால் ஆகியவைகளை உட்கொண்டால் வயிற்றுஉளைச்சல், பேதி முதலியன உண்டாகின்றன. தேக உழைப்புச் சிறிதும் இல்லாமல் புத்தியை உபயோகித்துப் பணிபுரிகின்றவர்கள் இலகு, சுவர்மை, நொய்மை, வன்மை, பிசுபிசுப்பு ஆகிய குணங்களை உடைய உணவுப் பொருட்களை எடுத்துக் கொள்ள வேண்டும். பால், பழங்கள் ஆகியவைகளை அதிகமாக உண்ண வேண்டும். மூவகையான தேக அமைப்பை மனிதனுக்கு இயற்கை கொடுத்திருக்கிறது. அவை,

- ❖ வாத தேகம்
- ❖ பித்த தேகம்
- ❖ கப தேகம் என்பனவாகும். இவை ஒவ்வொன்றுக்கும் தகுந்தவாறு உண்ணும் பொருட்கள் மாறுபட வேண்டும்.

தேகத்தின் இயல்பு அறிந்து உண்ணும் போது எந்தப் பிணியும் அணுகுவதற்கு வாய்ப்பில்லை. இளநீர் குளிர்ச்சியானது. எனவே, சளி பிடித்திருக்கும் போது இளநீர் குடிக்கக் கூடாது என்பார்கள். இது பரவலான கருத்து. ஆனால், சளி பிடித்திருக்கும் போது இளநீரைப் பருகினால் பரவலாகப் பெருகியுள்ள சளியை கொஞ்சம் கொஞ்சமாகக் கொண்டு வந்து வெளியே தள்ளும்.

### கால தேச இயல்புக்கு மாறுபாடு கொள்ளாமை

முக்கியமாகவும் இறுதியாகவும் நாம் நினைவில் கொள்ள வேண்டியது. கால தேச இயல்புக்கு மாறாமல் உணவு அமைய வேண்டும் என்பதைத்தான். ஒரு ஆண்டுக்கு ஆறு பருவ காலங்கள் உண்டு. ஒரு நாளைக்கு மூன்று பொழுது உண்டு. ஆக பருவ காலங்களுக்கு ஏற்றவாறும் காலை, பகல், இரவு என மூன்று வேளைக்கும் தகுந்தவாறு உணவு அமைய வேண்டும்.

நாம் வசிக்கும் இடத்துக்கும் நாட்டிற்கும் ஏற்ப உணவு அமைய வேண்டும். குளிர்ப் பிரதேசங்கள், வெப்ப நாடுகள் என தேசங்களின் மாறுபாட்டுக்கு ஏற்ற உணவை நம் உடல் நலத்துக்கு ஏற்றவாறு சேர்த்து உண்ணுதல் வேண்டும். தனக்கு ஏற்புடைய ஒத்துக் கொள்ளக்கூடிய உணவை முறையறிந்து உட்கொண்டால் அவ்வுணவு உடலில் மருந்தாகி நலம் சேர்க்கும். நற்பயன்களை விளைவிக்கும். உணவே மருந்து எனக்கூறுவதன் இரகசியம் இதுதான்!

# கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவில் 12 கிராம சேவையாளர் வெற்றிடங்கள்

(சிவநகர்)

கரைச்சி பிரதேச செயலகத்திற்குட்பட்ட 42 கிராம சேவகர் பிரிவுகளில் 30 கிராம சேவகர்களே பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர். இதனால் மக்களின் பல்வேறு தேவைகளை பூர்த்தி செய்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியிருப்பதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

குறித்த பிரதேச செயலகத்திற்குட்பட்டு 42 கிராமசேவகர் பிரிவுகள் உள்ள நிலையில் 30 கிராம சேவகர்களே பணியில் அமர்த்தப்பட்டிருப்பதால் சில கிராம சேவகர் பிரிவுகளை இணைத்து ஒரு கிராம சேவகரின் கீழ் செயற்படுத்தப்படும் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் சாதாரணமாக கிராம சேவகரின் உறுதிப்படுத்தல் தேவைப்படுகின்ற விண்ணப்பப்படிவங்கள், ஆவணங்கள் மற்றும் அன்றாட பல்வேறு தேவைகளுக்கும் கிராம சேவகரை நாடுவதற்கான பயணத்திற்கே பல மைல் தூரம் பயணிக்க வேண்டியுள்ளதோடு பல மணிநேரத்தை இதற்கென ஒதுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அதிலும் கிராம சேவகர்களை அவர்களின் கிராம சேவகர் அலுவலகத்தில் சந்திப்பதாயின் ஒருசில நாட்களில் சில நேரங்களிலே சந்திக்க முடிகிறது. இதனால் தூர பிரதேசத்திலிருந்து வருபவர்கள் நிச்சயமாக கிராம சேவகர் சேவையினை பெற்றுக்கொள்ள முடியாது பல்வேறுபட்ட அளெகரியங்களுக்கும் முகங்கொடுத்து வருகின்றனர்.

இந்நிலையில் இவ்விடயம் குறித்து கரைச்சி பிரதேச செயலகத்தில் மக்கள் தங்கள் குறைகளை கூறியதாகவும் எத்தரப்பினராலும் இது வரையிலும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதையடுத்து கிளிநொச்சி மாவட்ட செயலகத்துடன் தொடர்பு கொண்டு குறித்த பிரதேச செயலகத்திற்குட்பட்ட கிராம சேவகர் பற்றாக்குறை குறித்து வினவியபோது, கிராம சேவகர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதோடு விரைவில் குறித்த பிரதேசத்தில் உள்ள கிராம சேவகர் பற்றாக்குறை நிவர்த்தி செய்யப்படும் என உறுதியளித்துள்ளார்.

எனினும், இவ்விடயம் தொடர்பாக பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சினாலேயே முடிவுகள் மேற்கொள்ளப்படும் எனவும் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தெரிவித்திருந்தார். (அ-5-254)



யா/அளவெட்டி அருணாசலம் வித்தியாலயத்தின் தரம் ஒன்று மாணவர்களின் கால்கோள் விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விழா நாயகர்களுடன் வகுப்பாசிரியர் திருமதி அ.இராமச்சந்திரன் நிற்பதைப் படத்தில் காணலாம்.

# குரங்கு படைகள் அட்டகாசம்; கச்சான் செய்கை அழிவு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட கரைதுறைப் பற்று பிரதேச செயலர் பிரிவில் உள்ள கொக்கிளாய் கிராம விவசாயிகள் விதைத்த கச்சான் அழிவடைந்துள்ளதாக கவலை தெரிவித்துள்ளனர்.

கொக்கிளாய் கிழக்கு, கொக்கிளாய் மேற்கு ஆகிய கிராமங்களின் 100 இற்கு மேற்பட்ட விவசாயிகள் விதைத்த கச்சானே பெய்த மழையினாலும் பூச்சித் தாக்கம் மற்றும் பன்றி, குரங்குகளின் அட்டகாசம் என்பவற்றாலும் அழிவடைந்துள்ளது.

ஒரு ஏக்கர் நிலத்தில் விதைத்த கச்சான் 15 மூடைகளில் பெறப்படுவதாகவும் இம்முறை ஒரு ஏக்கர் நிலத்தில் ஒரு மூடை கச்சான் கூட பெறப்படவில்லை என கவலை தெரிவித்துள்ளனர். (அ-3-267)

# படையினரின் கட்டுப்பாட்டிலுள்ள காணிகள் குறித்து கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்கில் படையினரின் கட்டுப்பாட்டின் கீழுள்ள பொதுமக்களின் காணிகள் மற்றும் வீடுகள் தொடர்பில் நாளை வட மாகாண ஆளுநர் அலுவலகத்தில் இடம்பெறவுள்ள விசேட கலந் துரையாடலில் விரிவாக ஆராயப் படவுள்ளது என யாழ்.அரச அதிபர் சுந்தரம் அருமை நாயகம் தெரிவித்தார்.

வலி.வடக்கில் உயர் பாதுகாப்பு வலயத்தினுள் பொதுமக்களின் காணிகளில் படையினர் விவசாய நடவடிக்கையில் ஈடுபடுதல் ம்ற்றும் பொதுமக்களின் வீடுகளை இடித்து அகற்றுவது தொடர்பிலும் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதேவேளை, அரச காணிகள் தொடர்பில் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறியினால் விசேட சுற்று நிருபம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அரச ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருந் தன. அவ்வாறான சுற்றுநிருபம் மாவட்ட செயலகத்திற்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதா என வினவியபோது சுற்றுநிருபக் கடிதம் இதுவரை எனக்கு கிடைக்கவில்லை.

ஆனால், தொலைபேசி ஊடாக அறிவிக்கப்பட்டது. அத்தோடு அரச காணிகள் தொடர்பான புதிய நடைமுறை தொடர்பில் ஆளுநர் அலுவலகத்தில் விசேட கலந்துரையாடலும் இடம்பெறவுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித உரிமை பாதுகாப்பு, தேச எல்லைகளைக் கடந்தது

நவநீதம்பிள்ளைக்கு வாய் அதிகம்– ரிஷானா கொல்லப்பட்டதில் தவறில்லை–இலங்கையில் வெளிநாட்டுச் சூழ்ச்சி, அரசாங்கம் கட்டுப்படுத்தும் ஊடகத்தின் ஆசிரியர் தலையங்கங்கள் இவை.


இலங்கையின் இன்றைய ஆட்சியாளர்களின் சிங்களப் பத்திரிகையான தினமின கடந்த மாதம் 23 ஆம் திகதி தனது ஆசிரியர் தலையங்கத்தில் இலங்கையை சேர்ந்த ரிஷானா என்ற வீட்டுப் பணிப்பெண்ணின் தலை துண்டிக்கப்பட்டு மரணதண்டனை விதிக்கப்பட்டமை தொடர்பில்: "....பல நாடுகள் எதர்ப்புகளை வெளியிட்டிருந்தன. இலங்கையும் இதனை கண்டித்திருந்தது. கனடாவும் அதனை எதிர்த்திருந்தது. ஐக்கிய நாடுகள் பொதுச் செயலாளரும் இதனை கண்டித்திருந்தார்.

ஐக்கிய நாடுகள் பொதுச் செயலாளரும் இதனை கண்டித்திருந்தார்.

எனினும் சவூதி அரேபிய அரசாங்கம் இதனை ஒரு சதத்திற்கேனும் மதிக்கவில்லை. அவர்கள் நாட்டின் சட்டத்தை செயற்படுத்தியுள்ளனர்.... சவூதிஅரேபியா, ஆசியா அல்லது ஆபிரிக்க சக்திகளுக்கு அடிபணியாது. இதில் ஒரு நியாயமான நடைமுறையானது நாடு, நாட்டின் அரசியல் அமைப்புச் சட்டத்தை கடைப்பிடிக்க வேண்டும் என்பதாகும்.

சவூதி அரேபியாவின் அரசியல் அமைப்பு தொடர்பாக பல்வேறு கருத்துக்களும், நிலைப்பாடுகளும் இருக்கக்கூடும். எனினும் அவர்கள் அடிப்படையாக தமது அரசியல் அமைப்புச் சட்டத்தையும் பாதுகாக்க கடமைப்பட்டுள்ளனர். இதனடிப்படையில் ரிஷானாவை சிரச்சேதம் செய்யப்பட்டமை சம்பந்தமாக அரசியல் ரீதியான எதிர்ப்பை எம்மால் வெளியிட முடியாது.

இதனடிப்படையில் ரிஷானாவுக்கு மரணதண்டனை கொடுக்கப்பட்டது தொடர்பாக சவூதி அரேபிய அரசாங்கத்திற்கு எதிராக தேசிய மற்றும் சர்வதேசிய ரீதியில் எழுந்த அரசியல் எதிர்ப்புகள் தவறானது. சவூதி அரேபியா இந்த விமர்சனங்களைபுறந்தள்ளியமைநியாயமானது.



ஒரு நாட்டின் அரசியல் அமைப்புச் சட்டமானது சர்வாதிகாரம் அல்லது மனித விரோதமானதாக இருந்தாலும் அதன் அடிப்படையில் செயற்பட அந்த நாட்டுக்கு உரிமை உள்ளது. அதனை விமர்சிக்க எவருக்கும் இடமில்லை..." என்றவாறாகத் தெரிவித்திருந்தது.

நாட்டின் இறையாண்மை மற்றும் சர்வதேச இணைப்புகள் தொடர்பில் இலங்கை அரசியலில் உள்ள குறைகூறும் நிலைப்பாடு இந்த ஆசிரியர் தலையங்கத்தில் வெளிப் பட் டுள்ளது.

உலகில் உள்ள அனைத்து நாடுகளும் மனித உரிமை தொடர்பில் பொதுச் சட்டத்திட்ட கோர்வையின் கீழ் பிணையப்பட்டுள்ளன. மனித உரிமை என்பது ஒரு நாட்டிற்கு வரையறுக்க முடியாது. எந்த நாடும் சட்டத்திற்கு அமைவானது எனக் கூறி நியாயமான வழக்கு விசாரணைகள் இன்றி எவருக்கும் மரண தண்ட னையை வழங்கும் உரிமை கிடையாது. அத்துடன் சிறிய வயதுடையவர்களுக்கு மரண தண்டனை விதிப்பது சர்வதேச சட்டங்களை மீறும் செயற்பாடாகும்.

ரிஷானாவுக்குநியாயமானவழக்கு விசாரணைகள் கிடைக்காதது மாத்திரமல்ல, அவர் சிறுமியாக இருந்த போது செய்ததாக கூறப்படும் தவறுக்காகவே அவருக்கு மரண தண்டனை வழங்கப்பட்டது. இந்த இரண்டு காரணங்களில் அடிப்படையில் சவூதி அரசாங்கத்திற்கு எதிராக எதிர்ப்புகளை தெரிவிக்க உலகில் உள்ள எவருக்குழ் உரிமை உள்ளது. நியாயமான தீர்ப்பைப் பெற்றுக்கொள்ளும் உரிமை உலகில் உள்ள அனைத்து பிரஜைகளுக்கும் உள்ளது. எனினும் இலங்கை அரச ஊடகம் அவ்வாறான சட்டம் சவூதி அரேபிய அரசியல் அமைப்பில் இல்லை என்பதால், அது ரிஷானாவுக்கும் இல்லை எனக்கூறயுள்ளது. ரிஷானா கொலை செய்யப்பட்டமை தொடர்பாக சவூதி அரசுக்கு எதிர்ப்புகளை வெளியிடக்கூடாது என்ற இலங்கை அரசாங்கத்தின் நிலைப்பாட்டை இலங்கை மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்பது உறுதியானது.

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்காவுக்கு எதிராக இலங்கை ஆட்சியாளர்கள் கொண்டுவந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் தொடர்பான விவாதத்தில் இவ்வாறான நடைமுறையையே காண முடிந்தது. நம்பிக்கையில்லா தீர்மானம் அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு உட்பட்டது எனவும் காட்டப்பட்ட எதிர்ப்புகள் வெளிநாட்டு சூழ்ச்சிகள் எனவும் வெளிநாட்டவர்களுக்கு அப்படியான உரிமை கிடையாது என்பதே அதுவாகும். அலரி மாளிகையில் இருந்து கட்டுக்கடுத்தப்படும் இந்த ஆசிரியர் தலையங்கத்தை எழுதியவர், எழுதிய மற்றொரு தலையங்கம் இதனை தெளிவுபடுத்தியுள்ளது. ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளருக்கு வாய் அதிகம் எனக் கூறி அவர் இதனை எழுதியிருந்தார். அவர் அளவுக்கு மிஞ்சி செயற்படுவதாகவும் அவருக்கு பாடம் கற்பிக்கவேண்டும் எனவும் அவர் போன்றவர்களுக்கு சமூகத்தில் சுதந்திரத்தை வழங்கக்கூடாது எனவும் அந்த ஆசிரியர் தலையங்கம் நிலைப்பாட்டைக் கொண்டிருந்தது. இலங்கையின் பிரதம நீதியரசர் சர்வதேச சட்டத்தரத்திற்கு அமைய அன்றி வேறு வழிமுறைகள் மூலம் நீக்கப்பட்டமையை கண்டித்து ஆணையாளர் வெளியிட்டிருந்த கருத்தே, நினைத்துப்பார்க்க முடியாதளவிலான இந்த பாரதூரமான தாக்குதலுக்கு காரணம்.

நம்பிக்கையில்லா தீர்மானம் என்ற போர்வையில் இலங்கை தற்போது மீண்டும் சர்வதேச சூழ்ச்சிகளை எதிர்நோக்கி வருவதாக ஆட்சியாளர்கள் கூறுகின்றனர். இலங்கை பிரச்சினை தொடர்பாக சர்வதேச ரீதியில் மேற்கொள்ளப்படும் எந்த விமர்சனங்களுடனும் கூடிய தலையீடுகள் இருக்குமாயின் அது துரோகத்தனமானது என அவர்கள் கூறுகின்றனர்.

உண்மையில் இந்த நிலைப்பாடானது போரை முன்னெடுத்துச் செல்வதற்காக மகிந்த ராஜபக்ச ஆட்சியாளர்கள் சமூகமயப்படுத்தியதாகும். தற்போது அது முழு சமூகத்தின் அரசியற் செயற்பாடுகளில் பொது சட்டமாக அமுல் படுத்தப்பட்டுள்ளது.

எனினும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவும் நீதிபதிகளின் பட்டயங்களை கழற்றி நீதிமன்றத்தை நரகத்திற்கு அனுப்ப அச்சுறுத்தல் விடுக்கும் வாசுதேவ நாணயக்காரவுடன் இணைந்து ஐக்கிய நாடுகள் அமைப்பின் முன் இலங்கைக்கு எதிரான பாரதூரமான குற்றச்சாட்டுகளை முன்பு முன்வைத்தவர் என்பது அனைவரும் அறிந்த பகிரங்கமான விடயமாகும். தான் பேயுடன் இணைந்தாலும் எந்த தூத்துக்குடிக்காவது சென்று இலங்கை அரசாங்கத்தின் மனித உரிமை மீறல்களுக்கு எதிராக செயற்படப்போவதாக மகிந்த ராஜபக்ச அன்று கூறியிருந்தார். அது இலங்கை அரசாங்கம் விடுதலைப்புலிகளுடன் மோதலில் ஈடுபட்டு வந்த 1990 ஆம் ஆண்டு காலப்பகுதியாகும்.

அத்துடன் தற்போது ராஜபக்ச அரசாங்கத்தின் முன்னிலை பிரதிநிதிகளாக இருக்கும் ஜீ.எல். பீரிஸ் உள்ளிட்ட ஐக்கிய தேசியக்கட்சியில் இருந்து கட்சி தாவிய பலர் இலங்கையின் மனித உரிமை் தொடர்பில் சர்வதேச தலையீடுகளை கோரியவர்களாவர். இவ்வாறு ஞாபகத்திற்கு வரும் மற்றுமொரு அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க.

அன்றைய பிரதம நீதியரசர் என் சில்வா, அப்போது ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளராக இருந்த எஸ்.பி. திஸநர்யக்க நீதிமன்றத்தை அவமதித்ததிற்காக 2005 ஆம் ஆண்டில் இரண்டு வருட [illegible] தண்டனை விதித்தார். இதற்கு எதிராக எஸ்.பி. திஸாநாயக்க சர்வதேச சிவில் மற்றும் அரசியல் இணக்கப்பாட்டின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டுள்ள ஐக்கிய நாடுகளின் மனித உரிமைபேரவையில் முறைப்பாடு செய்தார். இலங்கையின் அரசியல் அமைப்புச் சட்டம் குறைபாடுகளுடன் கூடியது எனவும் அதன் கீழ் தமக்கு வழங்கப்பட் டுள்ள தண்டனை சர்வதேச தரங்களுக்கு முரணானது என அவர் அந்த முறைப்பாட்டில் கூறியிருந்தார். அத்துடன் இலங்கைப் பிரதம நீதியரசர் அரசியல் சார்பானவர் எனவும் தனக்கு எதிரான வழக்கின்போது சாட்சியாளர்கள் அழைக்கப்படவில்லை எனவும் இவர்களின் தவறான தீர்ப்பின் மூலம் தனது பேச்சுரிமை சுதந்திரமில்லாமல் செய்யப்பட்டுள்ளதாகவும் திஸாநாயக்க தனது முறைப்பாட்டில் தெரிவித்திருந்தார். அவரது முறைப்பாட்டை விசாரித்த ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை, இலங்கை அசாங்கம் சர்வதேச சிவில் மற்றும் அரசியல் இணக்கப்பாட்டின் பலஷரத்துக்களைகவனத்தில் கொள்ளவில்லை என தீர்மானித்து, இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக தீர்ப்பு வழங்கியது.



சுனந்த தேசப்பிரிய

மகிந்த ராஜபக்ச ஆட்சியாளர்களின் தற்போதைய நிலைப்பாடுகளின் அடிப்படையில் இப்படியான முறைப்பாட்டை செய்வது தேசத்துரோகமான செயற்பாடு என்பதுடன் மனித உரிமை பேரவையின் இலங்கைக்கு எதிரான தீர்ப்பானது நாட்டிற்கு எதிரான சர்வதேச சூழ்ச்சியின் மற்றொரு நடவடிக்கையாகும். அப்படியானால் எஸ்.பி திசாநாயக்க தேசத்துரோகி. அது மாத்திரமல்ல அன்று மகிந்த ராஜபக்ச, வாசுதேவ நாணயக்கார ஜெனிவா சென்றது போல் இன்று யாராவது சென்றால் அவர்களும் தேசத்துரோகிகள் என்று முத்திரை குத்தப்பட்டிருப்பார்கள்.

இலங்கயைின் பிரதான சிங்கள முன்னிலைவாத நிலைப்பாடுகளில் இருந்து தமது இடத்தை பிடிப்பதற்காக ஐக்கிய தேசியக்கட்சியைப் போன்று ஜே.வி.பி யினரும் நம்பிக்கையில்லாத் தீர்மானம் தொடர்பான விவாதத்தின்போது, இந்த நிலைப்பாட்டுக்கு உரம்போட்டனர். சர்வதேச தலையீடுகளை அதிகரிக்கும் என்ற காரணத்தையே இந்த இரண்டு கட்சிகளும் நம்பிக்கையில்லா தீரமனத்திற்கான தமது எதிர்ப்புக்கு ஒரு காரணம் எனக் கூறியிருந்தன.

கடந்த 16ஆம் திகதி கொழும்பில் நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றில் பங்கு கொண்ட ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க, நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டதன் மூலம் மகிந்த ராஜபக்ச அரசாங்கம் சர்வதேச தலையீடுககளுக்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்துள்ளதாக கூறினார். நம்பிக்கையில்லாத் தீர்மானம் தொடர்பான விடயத்தில் தலையிடுமாறு பொதுநலவாய அமைப்பிடம் கோரிக்கை விடுத்த ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடக பேச்சாளரான மங்கள சமரவீரவுக்கு, அரசாங்கத்தின எதிர்க்கட்சி தலைவரான ரணில் விக்ரமசிங்க, வாய்ப் பூட்டுப்போட நடவடிக்கை எடுத்தார்.

எனினும் மகிந்தராஜ பக்சவை போலவே ரணில் விக்கிரமசிங்கவும் கடந்தகாலங்களில் பல சந்தர்ப்பங்களில் இலங்கை சம்பந்தமாக சர்வதேசத்திற்கு விமர்சனங்களை கொண்டு சென்றவர்.

கடந்த 14 ஆம்திகதி கட்சியின் தொழிற்சங்க கூட்டத்தில் உரையாற்றிய ஜே.வி.பி. யின் தொழிற் சங்க தலைவரான லால் காந்த, இலங்கைக்கு எதிரான சர்வதேச சூழ்ச்சிகள்இருப்பதை தான் அறிந்துள்ளதாகவும் ராஜபக்ச அரசாங்கத்தின் நம்பிக்கையில்லாத் தீர்மானம் காரணமாக இந்த நிலைமை அதிகரித்துள்ளதாகவும் கூறியிருந்தார். நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு எதிராக சர்வதேசத்தில் எழுந்துள்ள எதிர்ப்புகளை இலங்கைக்கு எதிரான சூழ்ச்சியின் பகுதி என்ற அர்த்தத்திலேயே அவர் இதனை குறிப்பிட்டுள்ளர்.

எனினும் தாம் அரசாங்கத்தின் அடக்குமுறைக்கு ஆளாக்கப்பட்ட பல சந்தர்ப்பங்களில் ஜே.வி.பி. சர்வதேச மனித உரிமை அமைப்புகளில் உதவிகளை நாடியிருந்தமை இரகசியமான விடயமல்ல. இரண்டு வருடங்களுக்கு முன்னர், ஜே.வி.பியின் கீழ் இயங்கிய அனத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் பான் கீ மூனுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தது. மாணவர் அமைப்பை அடக்கதற்போதைய அரசாங்கம் எடுக்கும் முயற்சிகள் மட்டுமல்லாது கடந்த காலத்தில் எடுக்கப்பட்ட முயற்சிகள் குறித்து குறிப்பிட்டிருந்ததுடன் நடவடிக்கை எடுக்குமாறும் கோரியிருந்தது. இன்றைய காலகட்டத்தில் மனித உரிமைகள் என்பது தேச எல்லைகளைக் கடந்து செல்லும்உரிமைகளாகும் மனித உரிமைகளை பாதுகாத்துக் கொள்வதற்காக தேசிய, சர்வதேசிய மட்டத்தில் செயற்பட இலங்கை மக்களுக்கு உரிமை உள்ளது. இதனை ஏற்றுக்கொள்வது மற்றும் அந்த நிலைப்பாட்டின் அடிப்படையில் செயற்படுவது, இலங்கை இன்று எதிர்நோக்கி இருக்கும், நாடாளுமன்ற ஒருதலைப்பட்சத்துடன் வெற்றிகரமான போராட்டத்திற்கான அத்தியாவசியமான நிபந்தனையாகும்.

-சுனந்த தேசப்பிரிய-
குளோபல் நெற் நியூஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய மத்திய அரசுடனேயே தொடர்புகளை பேணுகிறோம்

## மாநில அரசுகளின் கருத்தை கவனத்தில் எடுக்கோம்

இந்திய மத்திய அரசாங்கத்துடனேயே இலங்கை அரசாங்கம் இருதரப்பு செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது. நாம் மத்திய அரசுடனேயே இராஜதந்திர நகர்வுகளில் ஈடுபடுகின்றோம். எனவே, தமிழ் நாடு மாநிலம் இலங்கை தொடர்பில் கூறுகின்ற விடயங்கள் குறித்து நாங்கள் அலட்டிக் கொள்ளவில்லை. இவ்வாறு இலங்கையின் ஊடகத் துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

இலங்கை மீது பொருளாதார தடைகள் விதிக்க வேண்டும் என்று தமிழக ஆளுநர் ரோசையா தெரிவித்துள்ளமை குறித்து விபரிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் இது குறித்து கூறியவை வருமாறு,

இலங்கை மீது பொருளாதார தடைகள் விதிக்க வேண்டும் என தமிழக ஆளுநர் கூறியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இதனை ஒரு விடயமாக கருதி நாங்கள் பதிலளிக்க வேண்டிய அவசியமில்லை.

மாநில மட்டத்தில் உள்ளவர்கள் அவ்வப்போது அவர்களின் தேவையைக் கருதி இவ்வாறான கூற்றுக்களை வெளியிடுவார்கள். அவை குறித்து நாங்கள் அலட்டிக் கொள்ள வேண்டிய அவசியமில்லை.

காரணம் இந்தியாவின் மாநில அரசாங்கம் ஒன்றுடன் எமக்கு எந்த விதமான இராஜதந்திர தொடர்புகளும் கிடையாது. அவ்வாறு இந்தியாவின் மாநிலம் ஒன்றுடன் இலங்கை தொடர்புகளைப் பேணாது.

இலங்கையின் தொடர்புகள் அனைத்தும் இந்திய மத்திய அரசாங்கத்துடனேயே இருக்கின்றது. எமது இராஜதந்திர உறவுகள், இருதரப்பு உறவுகள் என அனைத்தையும் மத்திய அரசாங்கத்துடனேயே மேற்கொண்டு வருகின்றோம்.

இந்திய மத்திய அரசாங்கம் இலங்கையுடன் எப்போது மில்லாதவாறு நெருக்கமான உறவைக் கொண்டுள்ளது.

இந்தியப் பிரதிநிதிகள் இலங்கை வருகின்றனர். இலங்கைப் பிரதிநிதிகள் இந்தியா செல்கின்றனர்.

அந்த வகையில் எமது இருதரப்பு உறவானது பாரியளவில் வலுவடைந்து வருகின்றது.

இவ்வாறு இந்திய மத்திய அரசாங்கத்துடன் எமது உறவு வலுப்பட்டு இருக்கும் போது மாநில அரசாங்கம் கூறுகின்ற விடயங்களை நாங்கள் கவனத்தில் கொள்ள வேண்டிய அவசியமில்லை என்றார். (அ-2)

# தமிழக மீனவர்கள் விரட்டப்பட்டனர்

(கொழும்பு)

கோடியக்கரைக்கு அருகே கடல் பரப்பில் மீன்பிடித்துவிட்டு திரும்பிய தமிழக மீனவர்கள் 7 பேரை வழிமறித்த இலங்கை கடற்படையினர் மீனவர்களின் உடைமைகளை பறித்துக் கொண்டு விரட்டியடித்துள்ளனர்.

நாகை மாவட்டம் கோடியக்கரை படகுத்துறையில் பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த நூற்றுக்கும் மேலான மீனவர்கள் தங்கி மீன்பிடித்தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.

அந்த வகையில் இங்கு தங்கி மீன் பிடிக்கும் பாம்பன் பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் 7 பேர் படகு ஒன்றில் கடந்த வெள்ளிக்கிழமை கடலுக்குள் சென்றுள்ளனர்.

கோடியக்கரைக்கு தென்கிழக்கே கடல் பரப்பில் மீன்பிடித்த மீனவர்கள் ஞாயிற்றுக்கிழமை அதிகாலையில் கரைக்கு திரும்ப ஆயத்தமான வேளையில்,

அங்கு ஒரு படகில் வந்த இலங்கை கடற்படையினர் மீனவர்களை வழிமறித்து அவர்கள் வைத்திருந்த 3 கையடக்கத் தொலைபேசிகள், ஜி.பி.எஸ்.கருவி ஆகிய உடைமைகளை பறித்துக் கொண்டு எச்சரிக்கை செய்து விரட்டியடித்துள்ளனர். (அ-2)

# ஆயுதக் கொள்வனவு கடனை செலுத்த நான்கு தலைமுறைகள் தேவை

## சரத் பொன்சேகா தெரிவிப்பு

(கொழும்பு).

போரைக்காட்டி நாடு சுரண்டப்படுவதாக ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

காலியில் நடைபெற்ற மக்கள் சந்திப்பொன்றின் போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

போர் காரணமாக நாட்டை அபிவிருத்தி செய்ய முடியாது என்றார்கள். போர் இடம்பெற்ற காலத்தில் சீனாவிடமிருந்தே ஆயுதங்கள் கொள்வனவு செய்யப்பட்டன.

இந்த அனைத்து ஆயுதங்களும் கடன் அடிப்படையிலேயே பெற்றுக் கொள்ளப்பட்டன. இந்தச் கடன்களை நான்கு தலைமுறைகள் வரையில் செலுத்த நேரிடும்.

2012 ஆம் ஆண்டு தொடக்கம் 2020 ஆம் ஆண்டு வரையில் கடன் செலுத்த வேண்டியுள்ளது. போரைக் காட்டி நாடு சுரண்டப்பட்டது. தற்போது உலக சமூகத்திடம் கடன் பெற்றுக் கொள்ளப்படுகின்றது.

போர் இடம்பெற்ற காலத்தில் ஒரு பீரங்கி தோட்டாவின் விலை 250 டொலர்களாகும். எனினும் இந்த அரசாங்கம் ஒரு தோட்டாவிற்காக 650 டொலர் செலுத்துகின்றது.

போர் இடம்பெற்ற இருபத்தைந்து ஆண்டுகளாகவே பீரங்கி தோட்டாவின் விலை 50 டொலர்களினால் மட்டுமே உயர்வடைந்தது. கடந்த ஆண்டில் மட்டும் குறித்த பீரங்கித் தோட்டாவின் விலையை 400 டொலர்களினால் அதிகரித்துள்ளனர்.

இந்த அத்துனைச் சுமைகளும் நாட்டுபொதுமக்களே சுமக்க நேரிடும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# நாலாபுறமும் திரும்பும் ஆந்தையின் கழுத்தின் இரகசியம் கண்டறிவு

ஆந்தை தன் கழுத்தை நாலாபுறமும் திருப்ப முடிவது எப்படி என்ற கேள்விக்கு அமெரிக்க விஞ்ஞானிகள் விடை கண்டுள்ளனர்.

இரவில் வேட்டையாடும் பறவையான ஆந்தை தன் கழுத்தை 270 டிகிரி வரை திருப்பும் அபூர்வமான திறமை கொண்டது. இதே அளவுக்கு மனிதன் தன் கழுத்தை திருப்பினால் இரத்த நாளங்களில் பாதிப்பு ஏற்பட்டு ஆபத்தான நிலை ஏற்படும்.

இது தொடர்பாக ஆராய்ச்சி செய்த அமெரிக்காவின் ஜான்ஸ் ஹாப்கின் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் ஆந்தையின் அபூர்வ சக்தி பற்றிய இரகசியத்தை கண்டறிந்து உள்ளனர்.

இறந்த ஆந்தைகளை பரிசோதனைக்கு எடுத்துக் கொண்ட ஆராய்ச்சியாளர்கள் ஆந்தையின் தலையை கைகளால் நன்கு திருப்பி சோதனை செய்த போது அதன் தலையின் அடியில் தாடை எலும்புக்கு சற்று கீழே உள்ள இரத்த நாளங்கள் விரிவடைவது தெரியவந்தது.

இதன் மூலம் ஆந்தையின் கழுத்து அதிகபட்சம் திரும்புவதால் அவற்றின் இரத்த நாளங்களில் பாதிப்பு ஏற்படுவதில்லை என்பதுடன் அதிக அளவில் நாளங்களில் தேங்கும் இரத்தம், அளவில் பெரிதான அவற்றின் மூளை மற்றும் கண்களின் செயற்பாட்டுக்கு பெரிய அளவில் உதவுவது தெரியவந்துள்ளது.

இந்த கண்டுபிடிப்பு மூலம் விபத்துகளில் சிக்கி கழுத்து முறிவு போன்ற பாதிப்புகளை எதிர்கொள்ளும் மனிதர்களுக்கு சிகிச்சை அளிப்பதில் முன்னேற்றம் ஏற்படும் என ஆராய்ச்சியாளர்கள் நம்பிக்கை தெரித்துள்ளனர்.

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

2013.02 05

★ 62- இத்தாலியின் பொம்பெய் நகரில் நிலநடுக்கம் இடம்பெற்றது.

★ 1597 - ஜப்பானின் ஆரம்பகால கிறிஸ்தவர்கள் பலர் ஜப்பானின் புதிய அரசால் ஜப்பானிய சமூகத்திற்குக் கெடுதலாக இருப்பதாகக் குற்றஞ் சாட்டப்பட்டுக் கொல்லப்பட்டனர்.

★ 1649 - ஸ்கொட்லாந்து இரண்டாம் சார்ல்சை அந்நாட்டின் மன்னனாக நாட்டில் இல்லாத நிலையில் அங்கீகரித்தது.

★ 1878- தென் கரொலைனா அமெரிக்க கூட்டமைப்பு அரசியலமைப்பை ஏற்றுக் கொண்ட முதலாவது மாநிலமானது.

★ 1782 - ஸ்பானியர் பிரித்தானியப் படைகளைத் தோற்கடித்து மினோர்க்கா தீவைக் கைப்பற்றினர்.

★ 1782 - ஒகைய்யோவில் பெண்கள், குழந்தைகள் உட்பட 90 அமெரிக்கப் பழங்குடிகள் வெள்ளை இனத்தவரால் படுகொலை செய்யப்பட்டனர்.

★ 1852- உருசியாவின் சென் பீற்றர்ஸ் பேர்க் நகரில் ஏர்மிட்டேச் அருங்காட்சியகம் பொதுமக்களுக்கு திறந்து விடப்பட்டது.

★ 1885 - பெல்ஜிய மன்னன் இரண்டாம் லியோபோல்ட் கொங்கோவைத் தனது தனிப்பட்ட பிரதேசமாக ஆக்கினான்.

★ 1900 - பனாமா கால்வாய் தொடர்பாக ஐக்கிய அமெரிக்காவுக்கும் ஐக்கிய இராச்சியத்துக்கும் இடையில் உடன்பாடு எட்டப்பட்டது.

★ 1917- மெக்சிக்கோவின் தற்போதைய கூட்டாட்சி அரசியல் அமைப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

★ 1922 - ரீடர்ஸ் டைஜஸ்ட் மாதிகை முதலாவது இதழ் வெளியிடப்பட்டது.

★ 1958 - ஐக்கிய அமெரிக்காவின் ஜோர்ஜியாவில் சவான்னா கரைகளில் அமெரிக்க வான் படையினரால் ஐதரசன் குண்டு ஒன்று காணாமல் போனது. இதுவரையில் இது கண்டுபிடிக்கப்படவில்லை.

★ 1958- ஐக்கிய அரபு குடியரசின் முதலாவது அரசுத் தலைவராக கமல் அப்துல் நாசர் நியமிக்கப்பட்டார்.

★ 1960 - ரஷ்ய மக்கள் நட்புறவுப் பல்கலைக்கழகம் மொஸ்கோவில் ஆரம்பிக்கப்பட்டது.

★ 1971- அப்பலோ 14 விண்கலம் அலன் ஷெப்பர்ட், எட்கார் மிட்செல் ஆகியோருடன் சந்திரனில் தரையிறங்கியது.

### பிறப்புகள்

★ 1914 - அலன் ஹொட்ஜ்கின், நோபல் பரிசு பெற்றவர் (இ.1998)

★ 1915 - ரொபர்ட் ஹொஃப்ஸ்டாட்டர், நோபல் பரிசு பெற்றவர் (இ. 1990)

★ 1976 - அபிஷேக் பச்சன், இந்தி நடிகர்

### இறப்புகள்


★ 1898- எம்.சி.சித்திலெப்பை, ஈழத்துத் தமிழ் அறிஞர் (பி.1838)

★ 1999 - வசீலி லியோன்டியெஃப், நோபல் பரிசு பெற்ற ரஷ்யப் பொருளியலாளர் (பி.1906)

★ 2008 - மகேஷ்யோகி, இந்திய ஆன்மீகக் குரு (பி.1917)

### சிறப்பு நாள்

★ பாகிஸ்தான்- காஷ்மீர் தினம்



**மு.கா.சித்திலெப்பை**

முகம்மது காசிம் சித்திலெப்பை மரைக்காயர் நவீன உரைநடை இலக்கியத்தில் முன்னோடிப் படைப்பாளிகளில் முக்கியமானவர். அவரது இயற்பெயர் முகம்மது காசிம். மறுமலர்ச்சித் தந்தை என அழைக்கப்படுபவர். பாடசாலைகளை நிறுவியும் பாடநூல்களை எழுதியும் செயலாற்றினார். ஈழத்தின் முதலாவது தமிழ் நாவலான அசன்பே சரித்திரம் என்ற நாவலை எழுதியவர்.

அறிஞர் சித்திலெப்பை கண்டியில் 1838 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 11 ஆம் திகதி பிறந்தவர்.

**இளமைக் காலம்**

திண்ணைப் பள்ளிக் கூடத்தில் கல்வி பயின்ற காலகட்டத்தில் குர்ஆன் ஓதல், மார்க்க சட்ட திட்டங்கள் பற்றிய அறிவு பெற்று அரபு, தமிழ், ஆங்கிலம் எனும் மும்மொழிகளிலும் அதிதிறமையாக விளங்கிய இவர் தந்தையைப் போன்றே சட்டக் கல்வியிலும் சிறந்து விளங்கினார்.

**சமூகப் பணி**

1884 ஆம் ஆண்டில் கொழும்பு புதிய சோனகத் தெருவிலே முதலாவது ஆங்கில முகமதிய பாடசாலையை அவர் தோற்றுவித்தார். இப்பாடசாலை நெடுங்காலம் நிலைக்காவிட்டாலும் ஏழு வருடங்களுக்கு பின்னர் அவருடைய அயரா உழைப்பின் பயனாக அல் மதரசதுல் கைரியா என்னும் பெயரில் புத்துயிர் பெற்றது. இதுவே பின்னர் கொழும்பு சாஹிரா கல்லூரியாக மலர்ந்தது.

**இறப்பு**

பதினைந்துக்கும் மேற்பட்ட நூல்களை எழுதி முஸ்லிம் பத்திரிகைத்துறை முன்னோடியான இவர் 1898 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 5 ஆம் திகதி உயிர்நீத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக முன்னெடுத்தல் கழகத்தின் கிரிக்கெட் இறுதிச்சுற்றுப்போட்டி





(கரவெட்டி)

பொன்னாலை சமூக முன்னெடுத்தல் கழகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற கிரிக்கெட் போட்டியின் இறுதிப்போட்டியும் பரிசளிப்பு நிகழ்வும் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பொன்னாலை விளையாட்டுக்கழக மைதானத்தில் தலைவர் வ.கோமநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக ஹெயார் நிறுவனத்தின் தலைவர் செவ்வேள் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக வலி.மேற்கு பிரதேசசபையின் தவிசாளர் திருமதி என். ஐங்கரன், வலி.மேற்கு பிரதேசசபையின் எதிர்க்கட்சித் தலைவர் சிவகுரு பாலகிருஷ்ணன் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

இவ் இறுதிப்போட்டியில் சுழிபுரம் விக்டோரியன்ஸ் அணியை எதிர்த்து மாலுசந்தி மைக்கல் அணி மோதவுள்ளது.

மூன்றாவது இடத்துக்கான போட்டியில் சங்கானை ஞானவைரவர் அணியை எதிர்த்து பொன்னாலை விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. (அ-3-24)

## 11 ஆவது புனருத்தாரண ஆண்டு நிறைவில் விளையாட்டுப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

இணுவில் பொது நூலகம் சனசமூக நிலையம் 11 ஆவது புனருத்தாரண ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு துடுப்பாட்டப் போட்டி, சதுரங்கச் சுற்றுப் போட்டி, கரம்சுற்றுப் போட்டி ஆகியன நடைபெறவுள்ளதாக அறிவித்துள்ளது.

துடுப்பாட்டப் போட்டியானது 7 பேர் பங்கு கொள்ளும் 6 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்டதாகவும் குறைந்தது 5 பேர் பந்துப் பரிமாற்றம் மேற்கொள்ளல் வேண்டும். (ஒருவர் மாத்திரம் இரு பந்து பரிமாற்றம் மேற்கொள்ள முடியும்.)

விண்ணப்பப்படிவத்தில் பெயர் குறிப்பிடப்பட்ட வீரர்கள் மாத்திரம் பங்கு கொள்ள முடியுமான இப்போட்டிக்கான விண்ணப்ப கட்டணமாக 400 ரூபாவை செலுத்தி விண்ணப்பப்படிவங்களை பெற்று அதனை எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைத்தல் வேண்டும். பங்கு கொள்ளும் அணித்தலைவர்கள் எதிர்வரும் 16 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 9 மணிவரை நூலகத்தில் தமது நிரலை (Raw) பெற்றுக் கொள்ள முடியும். சதுரங்கச் சுற்றுப் போட்டியானது திறந்த போட்டியாகவும் இரு நாட்களை கொண்டதாகவும் அமையும்.

இப்போட்டிக்கான விண்ணப்பக் கட்டணமாக 150 ரூபாவை செலுத்தி விண்ணப்பப்படிவத்தை பெற்று அதனை எதிர்வரும் மார்ச் மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் அனுப்ப வேண்டும். இப்போட்டிகள் எதிர்வரும் மார்ச் மாதம் 2,3 ஆம் திகதிகளில் காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன. இப்போட்டியாளர்கள் சதுரங்கப்பலகையினையும் எடுத்து வருதல் வேண்டும்.

கரம் சுற்றுப் போட்டியானது திறந்த போட்டியாகவும் ஒற்றையர், இரட்டையர், கலப்பு இரட்டையர் பிரிவு என நடைபெறவுள்ளது. இப்போட்டிக்கான விண்ணப்ப முடிவுத் திகதி எதிர்வரும் மார்ச் மாதம் முதலாம் திகதியாகவும் ஒற்றையர் பிரிவுக்கான கட்டணம் 100 ரூபாவாகவும் இரட்டையர் , கலப்பு இரட்டையர் பிரிவுகளுக்கான கட்டணம் 150 ரூபாவும் ஆகும்.

இப்போட்டிகள் மார்ச் மாதம் 16,17 ஆம் திகதிகளில் காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகும். மேலும் சதுரங்க, கரம் சுற்றுப் போட்டிகள் நூலக கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது. மேற்படி மூன்று போட்டிகளுக்கான விண்ணப்பப்படிவங்களை நூலகத்தில் பெற்று உரிய காலங்களில் அனுப்பி வைக்குமாறும் கேட்டுள்ளனர். (அ-9)

## வாகன விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

அநுராதபுரம், அம்பொல பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தொன்றில் ஒருவர் உயிரிழந்துள்ளார். இவ்விபத்து சம்பவம் நேற்று அதிககாலை 4.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது. முச்சக்கரவண்டி ஒன்றும் லொறி ஒன்றும் மோதுண்டதில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்விபத்தின் போது காயமடைந்த இருவர் குருநாகல் பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். உயிரிழந்தவர் மற்றும் காயமடைந்த இரு வர் முச்சக்கரவண்டியில் பயணித்தவர்கள் என தெரிவிக்கப்படுகிறது.

முச்சக்கரவண்டியில் பயணித்தவர்கள் மங்கள உற்சவம் ஒன்றில் கலந்து கொண்டதன் பின்னர் வீடு திரும்பிக்கொண்டிருந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர். (அ-2)

## இல்லமெய்வல்லுநர் போட்டி

(வட்டக்கச்சி)

கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க. பாட சாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர்.சி.திரவியம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கரைச்சிக்கோட்டக் கல்விப் பணிப்பாளர் அ.அமிர்தலிங்கம் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக கரைச்சி பிர தச செயலக கணக்காளர் பத்மநாதன் லுரேந்திரன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.(அ-3-86)

## மரதன் ஓட்டமுடிவு

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை மகாஜனா கல்லூரியின் வருடாந்த இல்லமெய்வல்லுநர் போட்டியை முன்னிட்டு நடத்தப்பட்ட மரதன் ஓட்டப்போட்டி நேற்று முன்தினம் காலை 6 மணிக்கு ஆரம்பமாகி நடைபெற்றது.

இம் மரதன் ஓட்டப்போட்டியின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. இதன்படி ஆண்களுக்கான பிரிவில் ம.தர்ஜன் முதலாம் இடத்தையும் ம.ஜனனன் இரண்டாம் இடத்தையும் சோ.நிறோஜன் மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

பெண்கள் பிரிவில் பா.சானு முதலாம் இடத்தையும் ம.ஜன்சிகா இரண்டாம் இடத்தையும் ச.சரண்யா ஆகியோர் மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டனர் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-5)

## மானிப்பாய் ஒக்ஸ்போர்ட் வி.கழகம் சம்பியனானது

(மானிப்பாய்)

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்திற்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் ஆரம்பமாகியுள்ளன. இதன் அடிப்படையில் பெண்களுக்கான கிரிக்கெட் போட்டியின் இறுதிப் போட்டி பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

இவ் இறுதிப் போட்டியில் மானிப்பாய் ஒக்ஸ்போர்ட் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து கலைஒளி விளையாட்டுக்கழகம் மோதியது. நாணயற் சுழற்சியில் வெற்றி பெற்ற மானிப்பாய் ஒக்ஸ்போர்ட் விளையாட்டுக்கழகத்தினர் முதலில் களத்தடுப்பாட்டத்தை தேர்வு செய்தனர்.


இதன் அடிப்படையில் முதலில் துடுப்பாடிய கலைஒளி விளையாட்டுக்கழகம் நிர்ணயிக்கப்பட்ட 5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 29 ஓட்டங்களைப் பெற்றனர்.

துடுப்பாட்டத்தில் கலைஒளி விளையாட்டுக்கழகம் சார்பில் ரம்யா 8 ஓட்டங்களையும் சுவன்யா 5 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் மானிப்பாய் ஒக்ஸ்போர்ட் விளையாட்டுக்கழகம் சார்பில் ஷோபா 3 இலக்குகளைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு 30 என்னும் வெற்றி இலக்கோடு துடுப்பாடிய மானிப்பாய் ஒக்ஸ்போர்ட் விளையாட்டுக்கழகம் ஷர்மிளாவின் அதிரடி கைகொடுக்க 1.5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் எந்தவித இலக்குகளும் இழப்பின்றி போட்டியில் வெற்றியீட்டினர்.

துடுப்பாட்டத்தில் மானிப்பாய் ஒக்ஸ்போர்ட் விளையாட்டுக்கழகம் சார்பில் ஷர்மிளா இரண்டு ஆறுகள், இரண்டு நான்குகள் அடங்கலாக ஆட்டமிழக்காமல் 23 ஓட்டங்களையும் ஷோபா ஆட்டமிழக்காமல் 4 ஓட்டங்களை பெற்றனர்.

இதன் மூலம் 2013 ஆம் ஆண்டுக்கான சண்டிலிப்பாய் பிரதேச செயலக பெண்கள் கிரிக்கெட்டில் மானிப்பாய் ஒக்ஸ்போர்ட் வி.க. சம்பியனானது. (அ-23)








பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் கல்லூரி மைதானத்தில் அதிபர் திருமதி செல்வமலர் சுந்தரேசன் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் உட்பட விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் மாணவிகளின் அணிவகுப்பு இடம்பெறுவதையும் வெற்றி பெற்ற மாணவி ஒருவருக்கு பிரதம விருந்தினரின் பாரியார் திருமதி இ.சத்தியசீலன் பரிசில் வழங்கி கௌரவிப்பதனையும் படங்களில் காணலாம். (படங்கள்:- எஸ்.செல்வதீபன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணு உலை பிரச்சினைக்கு தீர்வு ஏற்பட ஈரானுடன் நேரடி பேச்சு நடத்த தயார்

## அமெரிக்க துணை ஜனாதிபதி அறிவிப்பு



(முனிச்)

ஈரான் பாதாள அறைகளில் அணு உலை அமைத்து அணு குண்டு தாயாரிப்பதில் தீவிரமாக ஈடுபட்டு வருவதாக குற்றம் சாட்டப்படுகிறது.

ஆனால், இதை மறுக்கும் ஈரான் மின்சார உற்பத்தி போன்ற ஆக்கபூர்வ பணிகளிலேயே ஈடுபட்டு வருகிறோம் என்கிறது. எனினும் அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் ஐரோப்பிய நாடுகள் இதைநம்பதயாராக இல்லை. இதனால் ஈரானுக்கு பொருளாதார தடை விதித்துள்ளது.

இதன் விளைவாக அங்கிருந்து கச்சா எண்ணெய் வாங்குவதை பல்வேறு நாடுகள் குறைத்து வருகின்றன. மேலும் ஈரானின் அணு உலைகள் மீது தாக்குதல் நடத்துவோம் என இஸ்ரேல் மிரட்டுகிறது. இந்த விவகாரத்தில் உண்மை நிலையை கண்டறிய ஐ.நாவின் தேசிய அணு சக்தி நிபுணர் குழுவினர் ஈரான் அதிகாரிகளுடன் பேச்சு நடத்துவதாக தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்கா, ரஷ்யா, பிரான்ஸ், இங்கிலாந்து, ஜேர்மனி, சீனா ஆகிய 6 நாடுகளின் சார்பில் ஐரோப்பிய ஒன்றியம் வெளிநாட்டு கொள்கை தலைவர் அஷ்டோன் பேச்சுவார்த்தை நடத்துகின்றபோதும் இதில் தொடர்ந்து இழுபறி நீடிக்கிறது.

இதன் அடுத்த கட்ட பேச்சு வருகிற வெள்ளிக்கிழமை நடக்கவுள்ள நிலையில் அமெரிக்காவுடன் நேரடி பேச்சு நடத்த ஈரானுக்கு அமெரிக்க துணை ஜனாதிபதி ஜோ பிடேன் அழைப்பு விடுத்துள்ளார்.

இவ்விடயம் குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், யுரேனியம் எரியூட்டுவதை ஆக்கபூர்வ பணிக்கு மட்டுமே பயன்படுத்துவதாக ஈரான் கூறுகிறது. அதற்கு தகுந்த உத்தரவாதம் அளிக்க முடியாததால் கடுமையான பொருளாதார தடையை சந்திக்கிறது.

மக்கள் பொருளாதார நெருக்கடியின் பிடியில் சிக்குவதையும் உலக அரங்கிலிருந்து விலக்கப்படுவதையும் ஈரான் தலைவர்கள் தடுக்க தயாராக இல்லை. இப்போது கூட பிரச்சினைக்கு தீர்வு காண வாய்ப்பு இருக்கிறது. ஈரானுடன் அமெரிக்கா நேரடியாக பேச்சு நடத்த தயாராக இருக்கின்றோம் என தெரிவித்துள்ளார்.

ஈரான் நாட்டில் ஜூன் மாதம் ஜனாதிபதி தேர்தல் நடக்க உள்ளது. இதனால் இப்பிரச்சினையில் முடிவு எடுக்க தயங்கலாம் என கூறப்படுகிறது. ஆகவே, அமெரிக்க துணை ஜனாதிபதியின் இந்த அழைப்புக்கு ஈரான் தரப்பில் பதில் ஏதும் இல்லை. என்றாலும் இந்த மாநாட்டில் ஈரான் வெளியுறவு மந்திரி பேச இருக்கிறார். அப்போது அவர் கருத்து தெரிவிக்கலாம் என எதிர் பார்க்கப்படுகிறது. (அ-5)

## அத்துமீறுகிறது வடகொரியா; அச்சுறுத்துகிறது அமெரிக்கா

வடகொரியா அணு ஆயுத சோதனைக்கு தயாராகி வருகிறது. இதை நிரூபிக்கும் செயற்கைக்கோள் புகைப்படங்கள் கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த டிசெம்பர் மாதமே வடகொரியா அணு ஆயுத சோதனையை மேற்கொள்ளப் போவதாக அறிவித்திருந்தது. இதற்கு அமெரிக்கா, தென்கொரியா உள்ளிட்ட பல உலக நாடுகள் எதிர்ப்பு தெரிவித்திருந்தன.

வடகொரியா தனது அணு ஆயுத நடவடிக்கைகளை நிறுத்தாவிட்டால் கடுமையான பின் விளைவுகளை எதிர்கொள்ளும் என்று அந்த நாடுகள் அறிவித்திருந்தன. இதற்கிடையே நேச நாடுகளான அமெரிக்காவும் தென்கொரியாவும் இணைந்து தங்களுடைய பலத்தைக் காட்டும் விதமாக கடல் படை சோதனையை நேற்று நடத்தியுள்ளன. அமெரிக்காவின் எதிர்ப்பும் அதன் துருப்புகள் தென்கொரியாவில் நிறுத்தப்பட்டு இருப்பதுமே தனது அணு ஆயுத நடவடிக்கைகளுக்கு காரணம் என்று வடகொரியா விளக்கம் அளித்துள்ளது. (அ-5)


## உள்ளங்கையளவில் விமானம் தயாரித்தது இங்கிலாந்து

ஆப்கானிஸ்தானில் நடந்து வரும் தலிபான்களுக்கு எதிரான போரில் உள்ளங்கைக்குள் அடங்கி விடும் உளவு விமானத்தை ஈடுபடுத்த இங்கிலாந்து திட்டமிட்டுள்ளது. 8 அங்குல நீளம் கொண்ட இந்த உளவு விமானத்தின் எடை வெறும் 15 கிராம் என தெரிவிக்கப்படுகிறது.

விமானத்தின் மூக்கு பகுதியில் உள்ள சக்தி வாய்ந்த 3 ஒளிப்படக் கருவிகள் எதிரியின் இலக்கை வெகு துல்லியமாக படம் பிடித்து கட்டுப்பாட்டு அறைக்கு அனுப்பி வைக்கும். ஜி.பி.எஸ். கருவி மற்றும் ஜாய் ஸ்டிக் உதவியுடன் இயங்கும் இந்த உளவு விமானத்துக்கு பிளாக் ஹார் னட் என பெயரிடப்பட்டுள்ளது.

இந்த விமானம் எதிரி இலக்கின் மீது பறக்கும் போது யாராலும் கண்டுபிடிக்க முடியாததுடன் ஓசையை கூட கேட்க முடியாது என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-5)

## மாலி போராளி முகாம்கள் மீது பிரான்ஸ் விமானத் தாக்குதல்



(பமாகோ)

மாலியில் அமைக்கப்பட்டுள்ள போராளிக்குழுக்களின் முகாம்கள் மீது பிரான்ஸ் போர் வீமானங்கள் தாக்குதல் நடத்தி அழித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.


மேற்கு ஆபிரிக்காவில் உள்ள மாலி நாட்டில் உள்ள வட மாவட்டங்களை இஸ்லாமிய போராளிகள் கைப்பற்றி தங்களின் கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ளனர். முன்னர் பிரான்ஸ் நாட்டின் ஆளுமைக்குக் கீழ் காலனி நாடாக இருந்த மாலியில் ஆதிக்கம் செலுத்தி வரும் இஸ்லாமிய போராளிகளை ஒடுக்கி ஆக்கிரமிக்கப்பட்டுள்ள பகுதிகளை கைப்பற்ற மாலி அரசுடன் பிரான்ஸ் கை கோர்த்துள்ளது.

பிரான்சின் போக்குக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் மாலியில் வசித்து வரும் பிரான்ஸ் நாட்டு குடிமக்களில் சிலரை இஸ்லாமிய போராளிகள் கடத்திச் சென்று கைதிகளாக சிறை வைத்துள்ளனர். இந் நிலையில் பிரான்ஸ் இராணுவ வீரர்கள் 3 ஆயிரத்து 500 பேர் மாலியில் குவிக்கப் பட்டுள்ளனர்.

கடந்த சனிக்கிழமை மாலி தலைநகர் பமாகோவிற்கு சென்ற பிரான்ஸ் ஜனாதிபதி பிராக்கோயிஸ் ஹாலண்டே மாலியின் இழந்த பகுதிகளை விரைவில் மீட்போம் என்று சபதம் செய்தார்.

இந்நிலையில் இஸ்லாமிய போராளிகளின் ஆதிக்கம் நிறைந்த மாலி நாட்டின் வட பகுதிகளான கிடால், டெசலிட் உள்ளிட்ட 20 இடங்களில் உள்ள பதுங்கு முகாம்களின் மீது பிரான்ஸ் போர் விமானங்கள் நேற்று குண்டு வீசி தாக்குதல் நடத்தின.

இந்த தாக்குதலில் பிரான்ஸ் விமானப் படைக்கு சொந்தமான சுமார் 30 போர் விமானங்கள் ஈடுபட்டன என பிரான்ஸ் விமானப்படை செய்தி தொடர்பாளர் ஒருவர் கூறியுள்ளார். போராளிகளில் பலர் அல்ஜீரியா எல்லைப் பகுதியான மலைப்பிரதேசங்கள், பாலைவணங்களை நோக்கி தப்பிச் செல்லக்கூடும் என உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (அ-5)




சிரியா நாட்டில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள ஈரான் நாட்டின் அணுசக்தி தலைவர் சையத் ஜலிலி (இடது) தலைநகர் சானாவில் ஜனாதிபதி பஷர் ஆசாத்தை சந்தித்ததை படத்தில் காணலாம்.

## உலக தரிசனம்

## ஆப்கானிஸ்தான் அமைதி குறித்து முத்தரப்பு பேச்சுவார்த்தை

### பாகிஸ்தான்- ஆப்கானிஸ்தான்- இங்கிலாந்து



(லண்டன்)

ஆப்கானிஸ்தானில் நடந்த போர்களுக்கு பின்னர் நேட்டோ அமைதிப் படைகள் அங்கு பாதுகாப்பிற்காக நிறுத்தப்பட்டுள்ளன. கடந்த வருடங்களில் அந்த படைகள் படிப்படியாக திரும்பப் பெறப்பட்டு வருவதோடு ஆப்கானிஸ்தானிலிருந்து இந்த படைகள் அடுத்த ஆண்டு முழுவதுமாக வெளியேற உள்ளன.

இந்நிலையில் தலிபான்களுக்கு பாகிஸ்தான் உதவி வருவதாக இங்கிலாந்தும் ஆப்கானிஸ்தானும் குற்றம் சாட்டியுள்ளன. நேட்டோ படைகள் வெளியேற்றப்பட்டால் பாகிஸ்தானுக்கும் ஆப்கானிஸ்தானுக்கும் இடையே போர் மூள வாய்ப்புகள் இருப்பதாகவும் அஞ்சப்படுகிறது.

இதையடுத்து ஆப்கானிஸ்தான் பிரதமர் ஹமித் கர்சாய், இங்கிலாந்து பிரதமர் டேவிட் கமரூன், பாகிஸ்தான் பிரதமர் ஆசிப் அலி சர்தாரி ஆகியோர் பங்கேற்கும் முத்தரப்பு பேச்சுவார்த்தையை நடத்த முடிவு செய்யப்பட்டது.

ஆப்கானிஸ்தானில் அமைதியை நிலைநாட்டும் முயற்சியாக இந்த பேச்சுவார்த்தைகள் லண்டனில் இன்று நடைபெறுகின்றன. இரு நாடுகளுக்கும் இடையே நட்புறவை மேம்படுத்தி ஒற்றுமையை ஏற்படுத்துவதே இந்த முத்தரப்புப் பேச்சுவார்த்தையின் முக்கிய நோக்கமாகும். ஜுலை மாதம் காபூலில் முதன் முறையும் செப்டெம்பர் மாதத்தில் நியூயோர்க்கில் இரண்டாவது முறையும் இந்த முத்தரப்பு பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டன. தற்போது மூன்றாவது முறையாக லண்டனில் நடைபெறும் இந்த பேச்சுவார்த்தை மூலம் முக்கிய முடிவு எட்டப்படும் என்று நம்பப்படுகிறது. (அ-5)

## பூமியை நெருங்குகிறது இராட்சத விண்கல்



(வோஷிங்டன்)

அமெரிக்காவின் நாசா விஞ்ஞானிகள் கடந்த 1990 ஆம் ஆண்டில் இருந்து விண்வெளியை ரேடர்களின் மூலம் கண்காணித்து வருகின்றனர். இந்த நிலையில் ஒரு இராட்சத விண்கல் பூமியை நோக்கி பறந்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுமார் 50 மீற்றர் அகலம் கொண்ட அந்த இராட்சத விண்கல்லுக்கு 2012 டி 14 என பெயரிட்டுள்ளனர். அக்கல் தற்போது பூமியில் இருந்து 27 ஆயிரத்து 680 கி. மீற்றர் தூரத்தில் உள்ளது. இந்த தூரம் பூமிக்கும் இராட்சத விண்கல்லுக்கும் இடையே மிக குறைவானது என கணிக்கப்பட்டுள்ளது.


எனினும்இந்த விண்கல் பூமியைத் தாக்காது. எதிர்வரும் 15 ஆம் திகதி பூமியை கடந்து செல்கிறது. இந்த தகவலை நாசா விஞ்ஞானி டான்யியோ மான்ஸ் தெரிவித்துள்ளார். இதுபோன்ற ஒரு இராட்சத விண்கல் கடந்த 1908 ஆம் ஆண்டு பூமியை தாக்கியது. அப்போது அது ரஷ்யாவின் சைபீரியாவில் வனப்பகுதியில் விழுந்தது. இதனால் பல நூறு சதுர கிலோ மீற்றர் தூரத்துக்கு பெரிய பள்ளங்கள் ஏற்பட்டன. (அ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதுரை மரக்கடைகளில் தீவிபத்து; 200 கடைகள் எரிந்து நாசமாகின

(மதுரை)

மதுரையில் நேற்று முன்தினம் அதிகாலை மரக்கடைகளில் ஏற்பட்ட பயங்கர தீ விபத்தில் 200 இற்கும் அதிகமான கடைகள் எரிந்து சாம்பலாகின. இதன் சேதமதிப்பு 1.50 கோடி என பொலிஸார் கருதுகின்றனர்.



இங்கு 200 மரக்கடைகளுடன் பழைய கார் உதிரிப்பாகங்கள், இரும்புக்கடைகள் உள்ளிட்ட 400 இற்கும் அதிகமான கடைகள் உள்ளன. இங்கு கட்டடங்களுக்கு தேவையான நிலை, கதவு, ஜன்னல்கள், சட்டங்கள் மற்றும் உடைந்த கார்களின் உதிரிப்பாகங்கள் உள்ளிட்ட பலவித மரத்தளபாடங்கள் விற்பனை செய்யப்படுகின்றன.

நேற்று முன்தினமிரவு கடைகள் அனைத்தும் மூடப்பட்ட நிலையில் அதிகாலை இங்குள்ள ஒரு கடையில் பற்றிய தீ ஏனைய கடைகளுக்கும் பரவியது. அருகிலேயே மத்திய தீயணைப்பு நிலையம் இருந்ததால் 3 தீயணைப்பு வாகனங்களில் வீரர்கள் விரைந்தனர்.

தீயின் வேகம் கடுமையாக இருந்ததால் அணைப்பதில் சிரமம் ஏற்பட்டது. தொடர்ந்து அடுத்தடுத்த கடைகளுக்கும் தீ வேகமாக பரவியது. இதையடுத்து தூல்லாகுளம் அனுப்பானடி பகுதிகளில் இருந்து மேலும் 3 வாகனங்கள் வரவழைக்கப்பட்டன. எனினும் தீ கட்டுங்கடங்காமல் போனது.

சோழவந்தான், மேலூர், திருமங்கலம் என புறநகர் பகுதிகளில் இருந்தும் தீயணைப்பு வாகனங்கள் வரவழைக்கப்பட்டு மொத்தம் 9 வாகனங்கள் தீயணைப்பில் ஈடுபட்டன. மரப் பொருட்கள் என்பதால் வேகமாக பற்றிய தீ புகைந்தபடியே இருந்தது.

அருகில் மாநகராட்சி பிரசவ மருத்துவமனையில் இருந்த கர்ப்பிணிகள், நோயாளிகள் பாதுகாப்பு கருதி வெளியேற்றப்பட்டனர். போக்குவரத்து முழுமையாக நிறுத்தப்பட்டது. பத்துக்கும் அதிகமான மாநகராட்சி குடிநீர் கொள்கலன் வாகனங்கள் வரவழைக்கப்பட்டு 80 இற்கும் மேலான தீயணைப்பு வீரர்கள் சுமார் 5 நிமிடம் போராடி தீயை அணைத்தனர். (அ-5)

# மீண்டும் தீவிரமடைகிறது தெலுங்கானா விவகாரம்

## சோனியா–கிரண்குமார் சந்திப்பு

(ஐதராபாத்)

தெலுங்கானா பிரச்சினை குறித்து காங்கிரஸ் தலைவர் சோனியாவுடன் ஆலோசனை நடத்துவதற்காக ஆந்திர முதல்வர் கிரண்குமார் ரெட்டி நேற்று காலை டில்லி புறப்பட்டு சென்றார்.

தெலுங்கானா பிரச்சினைக்கு ஜனவரி இறுதிக்குள் தீர்வு காணப்படும், என மத்திய உள்துறை அமைச்சர் சுஷில்குமார் ஷிண்டே கடந்த டிசெம்பர் 28 ஆம் திகதி அறிவித்தார். எனினும் அறிவித்தபடி தீர்வு காணப்படவில்லை. மேலும் சிறிது கால அவகாசம் தேவை என்ற அறிவிப்பு மட்டுமே வெளியானது.

இதை தொடர்ந்து தெலுங்கானா மீண்டும் தீவிரமடைய தொடங்கியது. கடந்த வாரத்தில் இரண்டு மாணவர்கள் தீக்குளித்தனர்.

காங்கிரஸ் எம்.பிக்கள் 5 பேர் இராஜினாமா கடிதத்தை சோனியாவுக்கு அனுப்பினர். மேலும் தெலுங்கானா பகுதியை சேர்ந்த காங்கிரஸ் சட்ட உறுப்பினர்கள் பலரும் இராஜினாமா செய்ய திட்டமிட்டிருப்பதாக தகவல் கிடைத்தது.

இதை தொடர்ந்து தெலுங்கானா பிரச்சினை குறித்து விவாதிப்பதற்காக டில்லி வருமாறு ஆந்திர முதல்வர் கிரண்குமார் ரெட்டிக்கு காங்கிரஸ் மேலிடம் உத்தரவிட்டது. அதன்படி நேற்று காலை கிரண்குமார் ரெட்டி டில்லி புறப்பட்டுச் சென்றார்.

காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி, உள்துறை அமைச்சர் சுஷில்குமார் ஷிண்டே, ஆந்திர மாநில காங்கிரஸ் பொறுப்பாளர் குலாம் நபி ஆசாத் ஆகியோருடன் கிரண்குமார் ஆலோசனை நடத்தியுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (அ-5)




# கூடங்குளம் அணு உலை விவகாரம்; வெள்ளை அறிக்கை கோரி போராட்டம்

## பழ.நெடுமாறன், சீமான் ஆதரவு

கூடங்குளம் அணு ஆலை தொடர்பாக வெள்ளை அறிக்கை வெளியிடக் கோரி நடைபெறவுள்ள முற்றுகைப் போராட்டத்துக்கு ஆதரவு அளிப்பதாக தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன், நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் தலைவர் சீமான் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

கூடங்குளம் முதல் அணு உலையைச் செயற்படுத்துவதில் காலதாமதம் ஏற்படுவது தொடர்பான உண்மை நிலவரங்களை வெளியிட வேண்டும். இது தொடர்பாக மத்திய அரசும் அணுசக்தி துறையும் வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும். தவறினால் அணு உலை முற்றுகைப் போராட்டம் நடத்தப்படும் என அணு சக்திக்கு எதிரான மக்கள் இயக்க ஒருங்கிணைப்பாளர் எஸ்.பி.உதயகுமார் அறிவித்திருந்தார்.

இந்நிலையில் தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன், நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான், தமிழ் தேச பொதுவுடைமைக்கட்சி பொதுச்செயலர் பெ.மணியரசன் ஆகியோர் இடிந்தகரைக்கு சென்று போராட்டக் குழுவினரோடு ஆலோசனை நடத்தியுள்ளனர்.

இச்சந்திப்பின் பின் பழ.நெடுமாறன் கருத்து தெரிவிக்கையில்,

கூடங்குளம் அணுமின் நிலையத்தில் முதல் அணு உலை, 2 ஆம் அணு உலை செயற்படுமா என்ற நிலைக்கு வந்துள்ளது. இந்நிலையில் பிரதமர் 3,4 ஆம் அணு உலைகளைப் பற்றி பேசி வருகிறார்.

அணு உலைக்கு எதிரான மிகப் பெரிய போராட்டம் ஓராண்டைக் கடந்து நடந்து வருகிறது. பிற நாடுகளில் இதுபோன்ற போராட்டம் நடந்து வந்தால் அந்த நாட்டு பிரதமர், குடியரசுத் தலைவர் நேரில் வந்து போராட்ட மக்களோடு பேசி தீர்வு கண்டிருப்பார்கள்.

இந்த போராட்டம் வெற்றி பெற்றுவிட்டது. எங்களது ஆதரவு எப்போதும் உண்டு என்று தெரிவித்தார்.

தொடர்ந்து பேசிய சீமான், மணியரசன் ஆகியோரும் உதயகுமார் எடுக்கின்ற முடிவுக்கு நாங்கள் ஆதரவு அளிப்போம் என்றனர். முன்னதாக கூடங்குளம் அணுஉலை விழிப்புணர்வு பாடல்கள் அடங்கிய குறுந்தகட்டை உதயகுமார் வெளியிட பழ.நெடுமாறன் பெற்றுக் கொண்டார். (அ-5)



அண்ணாவின் 44 ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு சென்னை மெரினா கடற்கரையில் உள்ள அவரது நினைவிடத்தில் மலர்கள் தூவி தி.மு.க தலைவர் கருணாநிதி அஞ்சலி செலுத்துவதையும் அருகில் தி.மு.க பொதுச்செயலர் அன்பழகன், பொருளாளர் ஸ்டாலின் மற்றும் தி.மு.க முக்கிய பிரமுகர்கள் நிற்பதையும் படத்தில் காணலாம்.

# இந்தியாவில் புதிய அவசர சட்டத்திற்கு சில மகளிர் அமைப்புக்கள் எதிர்ப்பு

(புதுடில்லி)

பாலியல் பலாத்கார குற்றத்துக்கு தூக்கு தண்டனை விதிக்க வகை செய்யும் அவசர சட்டத்துக்கு சில மகளிர் அமைப்பினர் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

நீதிபதி வர்மா குழு அளித்த பெரும்பாலான பரிந்துரைகள் அவசர சட்டத்தில் இடம்பெறவில்லை என்பதே மகளிர் அமைப்பின் காரணம் என்று கூறப்படுகிறது.

அவசர சட்டத்தை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்ய சட்டமாக மாற்ற அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதை வலியுறுத்தி கையெழுத்து இயக்கம் நடத்தவும் நாடாளுமன்றத்தை முற்றுகையிடவும் அவர்கள் தீர்மானித்துள்ளனர்.

இதனிடையே சில அமைப்புகள் அவசர சட்டத்துக்கு வரவேற்பு அளித்துள்ளனர். அவசர சட்டத்தின் காரணமாக பெண்களுக்கு எதிரான குற்றங்கள் குறையும் என சில அமைப்புகள் கருத்து தெரிவித்துள்ளன.

எனினும் அவசர சட்டத்தில் வர்மா குழுவின் பரிந்துரைகளை அரசு முழுமையாகஏற்றுக்கொள்ளவில்லை. குறிப்பாக இராணுவத்தினர் மீதான பலாத்கார முறைப்பாடுகளை விசாரிக்க முன் அனுமதி தேவையில்லை என்று வர்மா குழு பரிந்துரைத்திருந்தது. ஆனால், அந்த பரிந்துரையை அரசு நிராகரித்துவிட்டது.

மேலும் பெண்கள் பாதுகாப்பில் அரசு அரைகுறையாக எடுத்துள்ள நடவடிக்கை ஜனநாயகத்தை பலவீனமாக்கும் என்று அம் மகளிர் அமைப்புகள் கண்டனம் தெரிவித்துள்ளன.

இந்த அவசர சட்டத்துக்கு ஜனாதிபதி ஒப்புதல் அளிக்க கூடாது என்று அந்த அமைப்புகள் கோரிக்கை விடுத்தன.

இந்நிலையில் இந்த எதிர்ப்பை மீறி அவசர சட்டத்துக்கு ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி நேற்று முன்தினம் ஒப்புதல் அளித்தார். இந்த அவசர சட்டத்தின்படி பெண்களுக்கு எதிரான பல்வேறு குற்றங்களுக்கு தண்டனை கடுமையாக்கப்பட்டுள்ளது.

பாலியல் பலாத்காரம் என்ற வார்த்தைக்கு பதிலாக பாலியல் தாக்குதல் என்று அவசர சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி கையெழுத்திட்டதை தொடர்ந்து அவசர சட்டம் உடனடியாக அமுலுக்கு வந்துள்ளதாக மத்திய உள்துறை அமைச்சக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (அ-5)

# இந்தியர்கள் தங்கத்தை சேமிக்க சுவிஸ் வங்கிகளில் புதிய கணக்கு

இந்தியா உள்ளிட்ட வெளிநாடுகளைச் சேர்ந்த கோடீஸ்வரர்களுக்காக தங்கக் கட்டிகள் சேமிப்பதற்கான பெட்டக வசதி உட்பட சிறப்பு கணக்கு சேவையை சுவிஸ் வங்கிகள் தொடங்கியுள்ளன.

சுவிட்சர்லாந்தின் டாவோஸ் நகரில் சமீபத்தில் நடைபெற்ற உலக பொருளாதார பேரவையின் வருடாந்த கூட்டத்தில் கலந்து கொண்டபோதே சுவிஸ் வங்கிகள் இந்தத் தகவலை தெரிவித்துள்ளன.

தங்கக் கணக்கு மற்றும் வைரம், ஆயிரம் சுவிஸ் பிராங்க் கரன்சி, ஓவியங்கள் மற்றும் கலை படைப்புகள் உள்ளிட்ட விலை உயர்ந்த பொருட்களை சேமிப்பதற்கான பாதுகாப்புப் பெட்டக வசதிக்கான தேவை அதிகரித்து வருவதால் அதற்கான கட்டணங்களை இவ் வங்கிகள் கணிசமாக உயர்த்தியுள்ளன.

ஆயிரம் சுவிஸ் பிராங்க் கரன்சி ஒன்றின் மதிப்பு 60 ஆயிரம். எனவே, ஏராளமான தொகையை சுலபமாக, இரகசியமாக, சேமிக்க முடியும் என்பதால் இதற்கான தேவையும் அதிகரித்துள்ளது.

இதன் மூலம் அதிக மதிப்புடைய கரன்சிகளைக் கொண்ட சில நாடுகளின் பட்டியலில் ஒன்றாக சுவிஸ் திகழ்கிறது.

இதேவேளை, இந்தியா உள்ளிட்ட வெளிநாட்டினரின் கறுப்புப் பணத்துக்கு சுவிட்சர்லாந்தில் உள்ள வங்கிகள் அடைக்கலம் கொடுத்து வருவதாக குற்றச்சாட்டு இருந்து வருகிறது.

இவ்வங்கிகளில் இந்தியர்கள் மட்டும் பல இலட்சம் கோடியை மறைத்து வைத்திருப்பதாகவும் அவற்றை மீட்க வேண்டும் என்றும் கோரிக்கை எழுந்துள்ளது.

இதன் தொடர்ச்சியாக சுவிஸ் வங்கிகளிலுள்ள இந்தியர்களின் இரகசியக் கணக்கு விபரங்களைக் கேட்டுப் பெறுவதற்கான ஒப்பந்தங்கள் போடப்பட்டுள்ளன.

இதன்படி இந்தியர்கள் 12 ஆயிரத்து 800 கோடி முதலீடு செய்திருப்பதாக சுவிட்சர்லாந்து தேசிய வங்கி தெரிவித்துள்ளது.

சேமிப்புக் கணக்கிலுள்ள முதலீடு தொடர்பான விபரங்களை மட்டுமே கேட்டுப் பெறுவதற்கு இந்த ஒப்பந்தங்கள் வகை செய்கின்றன.

இந்த ஒப்பந்தங்களின்படி பாதுகாப்புப் பெட்டக விபரங்களை கேட்க முடியாது என்பதால் இத்தகைய புதிய சேவையைத் தொடங்கியிருப்பதாகக் கூறப்படுகிறது. (அ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுக்கம் உள்ளவர்கள் உலகுக்கு ஒளியாவர்.

-யேசு கிறிஸ்து

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## ஒருவருக்குச் செய்யும் உதவி இன்னொருவருக்கு உபத்திரமாகலாகாது

தமிழில் நேர்மை என்பது மிகவும் உயர்ந்த சொல். நேர்மை என்றால் அங்கு பக்கம் சார்தல் என்பதற்கு அறவே இடமிருக்க முடியாது.

நேர்மையான மனிதர் என்று கூறுவதற்குள் இருக்கக்கூடிய பெருமைப்பாடுகள் வேறு எதனாலும் கிடைக்கமாட்டாது.

எனினும் சமகாலத்தில் நேர்மை என்ற சொல்லுக்கு சமாதி கட்டிவிட்டு அதில் இஃது ஸ்ரீமான் நேர்மை அவர்களின் சமாதி என்று எழுதிவிடும் அளவிற்கு நிலைமை மாறிவிட்டது.

நேர்மைக்குச் சமாதி கட்டும் அளவிற்கு என்ன நடந்தது என்று கேட்டால்,

செல்வாக்குக் கலாசாரமும் பணம் உழைக்கும் படத்தனங்களும் சேர்ந்து நேர்மையின் கழுத்தை நெரித்துக் கொன்றுவிட்டன என்று கூறலாம்.

நேர்மையீனங்கள் எங்கெங்கு நடந்துள்ள என்று கூறுவதற்குப் பலவற்றைச் சுட்டிக்காட்டலாம்.

யாழ்ப்பாணத்தில் நடக்கும் வீதி அகலிப்பில் பலரது வீடுகள் உடைக்கப்படும்போது சிலரது மதில்கள் காப்பாற்றப்பட்டுள்ளன.

இந்த அசிங்கத்தனங்கள் நேர்மையீனங்களுக்கான அடையாளங்கள் தான்.

இதுபோன்றவற்றைக் கூறுகின்றவேளை,

யாழ்ப்பாண மாநகர சபை தொடர்பிலும் சிலவற்றைச் சுட்டிக்காட்டவேண்டிய தேவையுள்ளது.

யாழ்ப்பாண மாநகர சபையின் முதல்வரின் கடும் முயற்சியால் யாழ்ப்பாண நகரம் தூய்மையாக உள்ளது என்பதை எவரும் மறுக்க முடியாது.

இரவு பகலாக மாநகர சபைத் தொழிலாளர்கள் யாழ்.நகரைச் சுத்தப்படுத்துவது என்பது பாராட்டப்பட வேண்டும்.

அதேநேரம்,யாழ்ப்பாண நகரில் தற்போது கூடுகின்ற மக்கள் தொகை, குடியிருப்பாளர்கள் நாளாந்தம் கொட்டுகின்ற குப்பைகூழங்களை எல்லாம் அகற்றுவது என்பது சாதாரண விடயமல்ல.

இதையெல்லாம் சிறப்பாக செய்விக்கின்ற யாழ். மாநகர முதல்வர்,

அண்மையில் யாழ். நகரை அண்மித்த இடமொன்றில் அடிப்படை வசதிகள் இல்லாமலே சுப்பர் மாக்கட் அமைப்பதற்கு அனுமதி கொடுத்துள்ளமை பலரை ஆச்சரியப்படுத்தி உள்ளது.

வாகனத் தரிப்பிடத்திற்கான இடவசதிகள் இல்லாமல் ஒரு சுப்பர் மாக்கட் அமைப்பதற்கு அனுமதி கொடுக்க வேண்டிய தேவை ஏற்பட்டது ஏன்?

வாகனங்களின் நெருக்கடியால் யாழ்ப்பாண நகரம் அல்லோலகல்லோலப்படும்போது,

இன்னொரு வீதியில் வாகனங்களை நிறுத்தும் வகையில் சுப்பர் மாக்கெட்டுக்கு அனுமதி அளித்தமைக்குள் நேர்மைத்தனம் இருப்பதாகத் தெரியவில்லை.

ஒருவருக்கு உதவுவது என்பது இன்னொருவருக்கு இடைஞ்சல் செய்வதாக இருக்கக் கூடாது அல்லவா?

எனவே இதுவிடயத்தில் யாழ். மாநகர முதல்வர் நேர்மையுடன் செயற்படுவார் என்ற நம்பிக்கை உண்டு.

# நல்லிணக்க கதவுகள் அடைப்பு இதுவே நாட்டின் யதார்த்தம்

## மனோ கணேசன் தெரிவிப்பு

இந்த அரசாங்கத்தினரல் உருவாக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகள்கூட இன்னமும் அமுல் செய்யப்படவில்லை. நல்லிணக்கத்திற்கான எல்லாக்கதவுகளும் அடைத்து வைக்கப்பட்டுள்ளன. இதுதான் இன்றைய சுதந்திர நாட்டின் யதார்த்தம்.

இந்நிலையில் நல்லிணக்கம் எங்கிருந்து வரும்? என ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் கேள்வி எழுப்பியுள்ளார்.

அதிகாரத்தைப் பகிர்ந்து ஐக்கியப்படும் இயக்கம் தொடர்பாக கட்சியின் கண்டி மாவட்ட செயற்குழு உறுப்பினர்களுக்காக செயலமர்வு நேற்று நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறியதாவது,

இன்றைய சுதந்திர தினத்தில் நாம் நமது நாட்டின் ஐக்கியம் தொடர்பாகவும் இனங்கள் மத்தியில் நிலவவேண்டிய சமத்துவம் தொடர்பாகவும் நமது ஜனநாயக நெறிமுறைகள் தொடர்பாகவும் திடசங்கற்பம் பூணுகிறோம்.

ஆண்டாண்டு காலமாக நாம் பாடசாலையில் படித்து நமது தாய் மொழியில் பாடி வந்த ஸ்ரீலங்கா தாயே என்ற நமது தமிழ்மொழியிலான தேசிய கீதத்தைக்கூட சுதந்திரமாகப் பாடயோசிக்கும் நிலைமை இன்று இந்நாட்டில் தமிழ் பேசும் தமிழ், முஸ்லிம் மக்களுக்கு ஏற்பட்டுள்ளது. அதைத் தடைசெய்யவிரும்புவோர் இன்று இந்த அரசாங்கத்துக்குள் இருக்கின்றார்கள்.

சொந்த உழைப்பு மற்றும் முயற்சியினால்கூட தமது வர்த்தக தொழில் நிறுவனங்களைச் சுதந்திரமாகக் கொண்டு நடத்தமுடியாத நிலைமை இன்று இந்நாட்டில் தமிழ், முஸ்லிம் தொழில் அதிபர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

சிறுபான்மையினரின் வர்த்தக முயற்சிகளை கைப்பற்றி அழிக்க நினைக்கும் இனவாதிகளைத் தட்டிக்கொடுத்து வளர்க்க நினைப்போர் இன்று இந்த அரசாங்கத்துக்குள் இருக்கின்றார்கள். நாட்டில் இனப்பிரச்சினையை தீர்க்கிறோம் என்றுகூறி இந்த அரசாங்கமே கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை நிறுவியது.

இந்த ஆணைக்குழு நாடு முழுவதும் சென்று சாட்சியங்களை பதிவு செய்து பல்வேறு சிபாரிசுகளை வெளியிட்டது. இந்தச் சாட்சியங்களை அமுல் செய்கிறோம் என்று இந்த அரசாங்கம் ஐ.நா மனித உரிமை ஆணைக்குழுவுக்கு உறுதியளித்தது.

ஆனால் இந்த நல்லிணக்க சிபாரிசுகளில் ஏ-9 வீதியை திறக்க வேண்டும் என்ற ஒரேயொரு சிபாரிசு மாத்திரமே இன்றுவரையில் முழுமையாக அமுலாகியுள்ளது. ஏனைய எந்த ஒரு நல்லிணக்க சிபாரிசும் அமுல் செய்யப்படக் கூடாது என்று கலகம் செய்வோரும் உள்ளனர்.

இவர்களால்தான் இன நல்லிணக்கத்துக்கான எல்லாக் கதவுகளும் அடைத்துவைக்கப்பட்டுள்ளது. இது எதிர்க்கட்சிகளின் பிரச்சினை அல்ல. இது ஆளும் அரசாங்க ஆட்சியின் ஒட்டு மொத்த பிரச்சினை என்பது எந்த ஒரு முட்டாள்களுக்கும்கூட விளங்கும். எனவே இந்த நல்லிணக்கத்துக்கு எதிரான இனவாதிகளை வைத்துக்கொண்டு எப்படி இந்த நாட்டிலே இன நல்லிணக்கத்தை ஏற்படுத்தமுடியும்? இதுதான் இன்றைய சுதந்திர தினத்திலே நாம் எழுப்பும் கேள்வியாகும் என்றார். (அ-2)

# அரசு 2014 ஆம் ஆண்டுவரைகூட ஆட்சியிலிருக்க முடியாது- ரணில்

(கொழும்பு)

நாடாளுமன்றத்தின் பதவிக்காலத்தை நீடிக்க சர்வஜன வாக்கெடுப்பை நடத்த வேண் டும் என்ற புதிய பாடலை அரசாங்கம் பாட ஆரம்பித்துள்ளதாகவும் முடிந்தால் இந்த வருடத்திற்குள் சர்வஜன வாக்கெடுப்பை நடத்துமாறும் தான் அரசாங்கத்திற்கு சவால் விடுப்பதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

காலியில் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறியு ள்ளார்.

இந்த அரசாங்கம் வாழ்நாள் முழுவதும் ஆட்சியில் இருக்கும் எனக் கூறுகின்றனர். எனினும் 2014 ஆம் ஆண்டு வரைகூட அரசாங்கத்தினால் தொடர்ந்தும் ஆட்சியில் இருக்க முடியாது. இது நாம் மாத்திரமல்ல அரசாங்கத்தில் உள்ளவர்களும் உணர்ந்துள்ளனர்.

இலங்கையில் மூன்று விதமான தேர்தல்கள் இருக்கின்றது.ஜனாதிபதி தேர்தல், நாடாளுமன்ற தேர்தல், சர்வஜன வாக்கெடுப்பு ஆகியவையே அந்த தேர்தல்களாகும். பல்வேறு கட்சிகள் பங்கு கொள்ளும் வகையில் ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்ற தேர்தல்கள் நடத்தப்படுகின்றன.

எனினும் சர்வஜன வாக்கெடுப்பு இரண்டு அணிகளுக்கும் இடையில் நடத்தப்படும் ராஜப க்ஷ அரசாங்கத்தை விரட்ட வேண்டும் என நினைப்பவர்கள் குடத்திற்கு வாக்களிப்பர்.

சர்வஜன் வாக்கெடுப்பில் மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் தோல்வியடையும். அதன் பின்னர் ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்ற தேர்தல் நடத்தப்படும். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி துண்டுகளாக பிளவுபட்டு தேர்தலில் போட்டியிடும். இதனால் ஐக்கிய தேசியக் கட்சிக்கு உறுப்பினர்களை சேர்க்கும் பணிகளை துரிதப்படுத்த வேண்டும் எனவும் ரணில் விக்ரமசிங்க கூறியுள்ளார். (அ-2)

# பாடசாலைக்கு முன்பாக வியாபார நடவடிக்கை

## மாணவர்கள் அசௌகரியம்

(புளியம்பொக்கணை)

முரசுமோட்டை பகுதியில் பாடசாலை களுக்கு முன்பாக மீன், மரக்கறி வியாபாரம் நடைபெறுவதால் பாடசாலை மாணவர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்ளவேண்டியுள்ளது. முரசுமோட்டை பிரதான வீதியில் அமைந்துள்ள முருகானந்தா ஆரம்ப பாடசாலை, முருகானந்தா கல்லூரி ஆகிய பாடசாலைகளுக்கு முன்பாகவே மீன், மரக்கறி வியாபாரம் இடம்பெறுகின்றது.

வியாபாரத்தின் போது எழுப்பப்படும் சத்தம் பாடசாலைக்குள் கேட்கின்றது. இதனால் மாணவர்கள் கற்பிக்கப்படுகின்ற கல்வியை சரியான முறையில் கிரகிக்க முடியாத நிலையும் உள்ளது. இவ்வாறு பாடசாலைக்கு முன்பாக வியாபாரம் இடம்பெறுவதால் அப்பகுதியில் துர்நாற்றம் வீசுகின்றது

முரசுமோட்டை பகுதியில் பொதுச் சந்தை அமைக்கப்பட்டு மீன் மற்றும் மரக்கறி வியாபாரங்களுக்கு இடம் ஒதுக்கப்பட்ட போதிலும் அங்கு வியாபாரத்தை மேற்கொள்ளாது பாடசாலைக்கு முன்பாக வியாபாரத்தை மேற்கொள்வதற்கான காரணம் என்ன என அப்பகுதி மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

எனவே, உரிய தரப்பினர் இதனைக் கருத்திற் கொண்டு உடன் நடவடிக்கை எடு க்க வேண்டுமென அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-3-263)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## மனம் தளராதே! மதி மயங்காதே!



✧நமது கைகளில் ஏற்கனவே உள்ள மாபெரும் ஆற்றலை அடக்கி ஆள கற்றுக்கொள்ள வேண்டும். அதை ஆன்மீக சக்தியாக மாற்றவேண்டும்.

✧நம்பிக்கையை இழந்துவிடாதே. பாதை, கத்தி முனையில் நடப்பதைப்போல மிகவும் கடினமானதுதான். எனினும் விழித்துக்கொள். மனம் தளராதே. நீ அடைய வேண்டிய உனது இலட்சியமாகிய குறிக்கோளைக் கண்டுபிடி.

✧மக்கள் என்ன வேண்டுமானாலும் சொல்லட்டும். நீ எனது சொந்த உறுதியான முடிவில் பிடிப்புடன் இரு. பின்பு நிச்சயமாக மற்றவை நடந்தேறி உலகம் எனது காலடியில் பணிந்து கிடக்கும்.

✧பிறரை முதலில் நம்புவதைவிட்டு உன்னை நீ முதலில் நம்பு. அனைத்து ஆற்றல்களும் உனக்குள்ளேயே இருப்பதால் அதை உணர்ந்து அந்த ஆற்றலை வெளிப்படுத்து. நான் எதையும் சாதிக்கவல்லவன் என்று சொல். நீ உறுதியுடன் எதையும் பொருட்படுத்தாமல் இருந்தால் பாம்பின் விஷம்கூட சக்தியற்றதாகிவிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகளிர் உலகக் கிண்ணம் - 2013

# பாகிஸ்தானை சூறையாடியது நியூசிலாந்து



வெற்றிக் களிப்பில் நியூசிலாந்து மகளிர் அணி

இந்தியாவின் கட்டக்கில் நடைபெற்ற உலகக்கிண்ண மகளிர் ஆட்டத்தில் 7 விக்கெட் வித்தியாசத்தில் பாகிஸ்தானை சூறையாடியது நியூசிலாந்து. இதன்மூலம் நியூஸிலாந்து அணி 'சூப்பர் சிக்ஸ்' சுற்றை உறுதி செய்துள்ளது.

இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் 41.2 ஓவர்களில் 104 ஓட்டங்களுக்கு சுருண்டது. தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து 29.4 ஓவர்களில் 3 விக்கெட் இழப்புக்கு 108 ஓட்டங்களைப் பெற்று வெற்றி கண்டது. 5 விக்கெட்டுகளை வீழ்த்திய நியூசிலாந்தின் ரசேல் சான்டி ஆட்டநாயகியாகத் தேர்வு செய்யப்பட்டார்.

# இங்கிலாந்திடம் இந்தியா சரணடைந்தது

இந்தியாவில் இடம்பெற்றுவரும் மகளிர் உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் 32 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இங்கிலாந்திடம் தோல்வி கண்டது இந்தியா.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணி முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து 50 ஓவர்களில் 8 விக்கெட் இழப்புக்கு 272 ஓட்டங்களைக் குவித்தது.

இங்கிலாந்து அணிசார்பாக வியாட் 2, டெய்லர் 35, கிரீன்வே 29, அணித் தலைவி சார்லோட்டே எட்வர்ட்ஸ் 109, பிரின்ட்லே ஆட்டமிழக்காமல் 37 ஓட்டங்களைப் பெற்றனர். இந்தியத் தரப்பில் கோஸ்வாமி, நிரஞ்சனா ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

273 என்ற வெற்றி இலக்கை நோக்கி ஆடிய இந்திய அணி 9 விக்கெட்டுக்களை இழந்து 240 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது.

இந்திய அணி சார்பாக திருஷ் காமினி 10, மிதாலி ராஜ் 8, பூனம் ரெளத் 4 ஓட்டங்கள் என முன்வரிசை உறுப்பினர்கள் குறுகிய ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். தொடர்ந்து வந்த வீரர்களில் கருணா ஜெயின் 56 ஓட்டங்களும் தனிமரமாக நின்று போராடிய கௌர் 109 பந்துகளில் 2 சிக்ஸர், 8 பவுண்டரிகளுடன் 107 ஓட்டங்களையும் பெற்றார். இந்த ஆட்டத்தில் சதமடித்ததன் மூலம் உலகக் கிண்ணத்தில் சதமடித்த 2ஆவது இந்திய வீராங்கனை என்ற பெருமையைப் பெற்றார் கௌர். இங்கிலாந்து அணி சார்பாக பிரன்ட் 4 விக்கெட்டுகளையும், வியாட் 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர். எட்வர்ட்ஸ் ஆட்டநாயகி விருதைப் பெற்றார். இங்கிலாந்துக்கு இது முதல் வெற்றியாகும்.

இந்த ஆட்டத்தில் சதமடித்த இங்கிலாந்து அணித்தலைவி எட்வர்ட்ஸ் உலகக் கிண்ணத்தில் 1,000 ஓட்டங்களை எடுத்த 4ஆவது வீராங்கனை என்ற பெருமையைப் பெற்றார். அத்துடன் ஒருநாள் போட்டியில் அதிக ஓட்டங்களை எடுத்த வீராங்கனை என்ற சாதனையையும் படைத்துள்ளார். முன்னதாக அவுஸ்திரேலியாவின் பெலின்டா கிளார்க் எடுத்த 4,844 ஓட்டங்களே ஒருநாள் போட்டியில் அதிகபட்ச சாதனையாக இருந்தது. தற்போது அதை எட்வர்ட்ஸ் முறியடித்துள்ளார்.

# தீவுகள் ஓட்ட மழை; இலங்கை வீழ்ந்தது!

மும்பையில் நடைபெற்ற இலங்கைக்கு எதிரான மகளிர் உலகக் கிண்ண ஆட்டத்தில் 209 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி கண்டது மேற்கிந்தியத் தீவுகள். இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் 50 ஓவர்களில் 8 விக்கெட் இழப்புக்கு 368 ஓட்டங்களைக் குவித்ததது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இலங்கை 40 ஓவர்களில் 159 ஓட்டங்களுடன் சுருண்டது. ஒருநாள் போட்டியல் மேற்கிந்தியத் தீவுகள் அணி 300 ஓட்டங்களுக்கு மேல் குவிப்பது இதுவே முதல்முறை.


இந்த ஆட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகள் வீராங்கனை ஸ்டெபானெ டெய்லர் 137 பந்துகளில் 2 சிக்ஸர், 18 பவுண்டரிகளுடன் 171 ஓட்டங்களைக் குவித்தார். இதன்மூலம் உலகக் கிண்ண வரலாற்றில் ஓர் இன்னிங்ஸில் அதிக ஓட்டங்கள் குவித்தவர்கள் வரிசையில் 3ஆவது இடத்தைப் பிடித்தார் டெய்லர். இது அவருடைய 4ஆவது சதமாகும். மேற்கிந்தியத் தீவுகளின் டியேன்ட்ரா டாட்டின் 20 பந்துகளில் 5 சிக்ஸர், 4 பவுண்டரிகளுடன் அரைசதம் கண்டார். இதன்மூலம் மகளிர் கிரிக்கெட்டில் அதிவேக அரைசதம் கண்ட வர் என்ற பெருமையைப் பெற்றார். இந்த வெற்றியின் மூலம் அடுத்த சுற்றை உறுதி செய்தது மேற்கிந்தியத் தீவுகள்.

# ஆஸியிடம் மண்டியிட்டது தெ.ஆபிரிக்கா

கட்டக்கில் நடைபெற்ற மற்றொரு உலகக் கிண்ண மகளிர் ஆட்டத்தில் அவுஸ்திரேலிய மகளிர் அணி 3 விக்கெட் வித்தியாசத்தில் தென்னாபிரிக்க அணியை வீழ்த்தி வெற்றியைச் சுவீகரித்தது.

இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா 50 ஓவர்களில் 9 விக்கெட் இழப்புக்கு 188 ஓட்டங்களைப் பெற்றது. தொடர்ந்து ஆடிய அவுஸ்திரேலியா 45.4 ஓவர் களில் 7 விக்கெட்டுக்களை இழந்து வெற்றிகண்டது. 83 ஓட்டங்களைப் பெற்ற ராஹேல ஹயென்ஸ் ஆட்டநாயகியாகத் தேர்வு செய்யப்பட்டார். இந்த ஆட்டத்தில் வென்றதன் மூலம் 4 புள்ளிகளுடன் அடுத்த சுற்றான 'சுப்பர் சிக்ஸ்' சுற்றை உறுதி செய்துள்ளது அவுஸ்திரேலியா.

# பாகிஸ்தானுடனான டெஸ்ட் தொடரில் முதல் வெற்றியை சுவைத்தது தெ.ஆ


ஏபி.டி.வில்லியர்ஸ் தனது சதத் பூர்த்தி செய்தபின்......

தென்னாபிரிக்காவிற்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் அணிக்கும், தென்னாபிரிக்க அணிக்குமிடையிலான 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது போட்டியில் தென்னாபிரிக்க அணி 211 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றுள்ளது.

ஜோகனஸ்பர்க் நகரில் நடைபெற்ற இந்த முதல் போட்டியில் முதல் இன்னிங்சில் தென்னாபிரிக்கா 253ஓட்டங்களை எடுத்தது. பதிலுக்கு தனது முதலாவது இன்னிசை தொடங்கிய பாகிஸ்தான் 49 ஓட்டங்களை எடுத்து அனைத்து விக்கட்டுக்களையும் இழந்தது.

இந்நிலையில் தனது இரண்டாவது இன்னிங்சை தொடங்கிய தென்னாபிரிக்க அணி 3 விக்கெட்டுகளை இழந்து 275 ஓட்டங்களை எடுத்து தனது ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது.

துடுப்பாட்டத்தில் ஏபி.டி.வில்லியர்ஸ் ஆட்டமிழக்காமல் 103 ஓட்டங்களையும், ஹசிம் அம்லா ஆட்டமிழக்காமல் 75 ஓட்டங்களையும, கிரேம் ஸ்மித் 52 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் பாகிஸ்தான் அணி சார்பாக உமர் குல் 2 விக்கெட்டுக்களையும், சயீட் அஜ்மல் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர.

இதன்படி 480 ஓட்டங்களை வெற்றி இலககாகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 3ஆம் நாள் ஆட்டநேர முடிவில், 4 விக்கெட்டுக்கு 183 ஓட்டங்களை எடுத்திருந்தது.

நேற்று நான்காம் நாள் ஆட்டம் ஆரம்பமானபோது ஷபிக், அணித் தலைவர் மிஸ்பா அணியை மீட்பதற்காக கடினமாக போராடினர். இருவரும் ஆட்டமிழக்க மற்றைய வீரர்கள் ஏமாற்ற பாகிஸ்தான் அணி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 268 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது.

துடுப்பாட்டத்தில் ஆசாத் ஷபிக் 56, அணித தலைவர் மிஸ்பா 64 ஓட்டங்களைம் பெற்றனர். இரண்டாவது இன்னிங்சில் தென்னாபிரிக்கா சார்பில் ஸ்டைன் 5 விக்கெட்டுக்களையும் , பிலாண்டர், மார்னே மார்கல் தலா 2 விக்கெட்டுக்களையும், கலிஸ் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

## மீண்டும் சச்சின் தலைமையில்..

மும்பை இந்தியன்ஸ் அணியின் தலைவராக சச்சின் டெண்டுல்கர் மீண்டும் தேர்வு செய்யப்பட்டுள்ளார். 2008 ஆம் ஆண்டு முதல் 2010 வரை மும்பை இந்தியன்ஸ் அணியின் தலைமைப் பொறுப்பிலிருந்த சச்சின் 2010 இல் தலைமைப் பதவியிலிருந்து விலகினார. பின்னர் ஹர்பஜன்சிங் தலைவராக பதவியேற்றார். 2011, 2012 இல் நடைபெற்ற ஐ.பி.எல். போட்டிகளில் இவருடைய தலைமையில் மும்பை இந்தியன்ஸ் அணி விளையாடியது. இந்நிலையில், மீண்டும் அந்த அணிக்கு டெண்டுல்கர் அணித் தலைவராக பதவியேற்றது கிரிக்கெட் ரசிகர்களிடையே மிகுந்த மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# ஆஸியிடம் மடிந்தது மே.இ.தீவுகள்

அவுஸ்திரேலியா- மேற்கிந்தியத் தீவுகளுக்கிடையே நடைபெற்ற இரண்டாவது ஒருநாள் போட்டியில் அவுஸ்திரேலிய அணி 54 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

பேர்த் மைதானத்தில் இடம்பெற்ற இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய



மே.இ.தீவு பந்துவீச்சாளர் டுவைன் பிராவோவின் பந்துவீச்சில் அவுஸ்திரேலிய அணித் தலைவர் மைக்கல் கிளாக் 'போல்ட்' செய்யப்பட்டு ஆட்டமிழக்கும் காட்சி.

அவுஸ்திரேலிய அணி 50 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 266 ஓட்டங்களைப் பெற்றது. ஒரு கட்டத்தில் 6 விக்கெட்டுக்களை இழந்து 98 ஓட்டங்களைப் பெற்றுத் தடுமாறிய அவுஸ்திரேலிய அணி ஜோர்ஜ் பெய்லி, ஜேம்ஸ் ஃபோள்க்னர் ஆகியோரின் உதவியுடன் ஸ்திரமான நிலையை அடைந்தது. இறுதி விக்கெட்டுக்காக 5.4 ஓவர்களில் 68 ஓட்டங்கள் குவித்து மேற்கிந்தியத் தீவின் வெற்றிக்கு 267 என்ற இலக்கை நிர்ணயித்தது அவுஸ்திரேலிய அணி.

துடுப்பாட்டத்தில் அவுஸ்திரேலிய அணி சார்பாக ஜோர்ஜ் பெய்லி 110 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 125 ஓட்டங்களையும், ஜேம்ஸ் ஃபோள்க்னர் 67 பந்துகளில் 39 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் மேற்கிந்தியத் தீவுகள் அணி சார்பாக டெரன் சமி 48 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், கேமர் ரோச், ஜேஸன ஹோல டர், டுவைன் பிராவோ, சுனில் நரைன ஆகியோர் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

267 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 38.1 ஓவர்களில் 212 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 54 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

துடுப்பாட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணி சார்பாக கெரன் பவல் 90 பந்துகளில் 83 ஓட்டங்களையும், டுவைன் பிராவோ 56 பந்துகளில் 45 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் அவுஸ்திரேலிய அணி சார்பாக மிற்சல் ஸ்ரார்க் 32 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களையும், கிளென் மக்ஸ் வெல 63 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். இப்போட்டியின் நாயகனாக அவுஸ்திரேலியாவின் ஜோர்ஜ் பெய்லி தெரிவானார்.

5போட்டிகள் கொண்ட இந்தத் தொடரில் 2 போட்டிகளில் வெற்றிபெற்று அவுஸ்திரேலியா முன்னிலையில் உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்தவின் இந்திய விஜயத்திற்கு...

தமிழீழ ஆதரவு அமைப்பான டெசோ உறுப்பினர்களின் கலந்துரையாடல் கூட்டம் நேற்று சென்னையில் நடைபெற்றது.

இக் கூட்டத்திற்கு கலைஞர் கருணாநிதி தலைமை தாங்கினார்.

இந்த அமைப்பினர் உறுப்பினர்களாக இருக்கும் மு.க.ஸ்ராலின், அன்பழகன், கி.வீரமணி, சுப வீரபாண்டியன், சுப்புலட்சுமி ஜெகதீசன், திருமாவளவன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கலந்துரையாடலுக்குப் பிறகு கலைஞர், இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷவின் இந்திய வருகையைக் கண்டித்து வரும் 8-ம் திகதி எனது தலைமையில் சென்னையில் போராட்டம் நடைபெறும்.

இந்தப் போராட்டத்தில் டெசோ அமைப்பினர் கறுப்பு உடை அணிந்து கலந்து கொள்வார்கள். இலங்கை வீரர்களுக்கு தமிழகத்தை தவிர இந்தியாவின் வேறு எந்த இடத்திலும் பயிற்சி என்பதை ஏற்க முடியாது.

மீனவர்கள் மீதான இலங்கை கடற்படை தாக்குதலைக் கண்டித்து இராமேஸ்வரத்தில் 18-ந் திகதியும், நாகையில் 19-ந் திகதியும் போராட்டம் நடைபெறும்.

இலங்கைத் தமிழர்கள் குறித்து மார்ச் மாதம் டில்லியில் கருத்தரங்கம் நடைபெறும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

### ம.தி.மு.க

இதேவேளை, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக்குழுவினால் இலங்கைக்கு எதிராக 'சுதந்திர ஈழம் - பொது வாக்கெடுப்பு' மற்றும் 'தமிழக மீனவர்களை காக்கத் தவறும் - மத்திய அரசுக்கு கண்டனம்' ஆகிய இரண்டு தீர்மானங்களும் நேற்றுத் திங்கட்கிழமை நிறைவேற்றப்பட்டன.

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக்குழுக் கூட்டம் நேற்று காலை தொடங்கி மாலைவரை நடைபெற்றது. இதன்போது 17 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அதில் இரண்டு தீர்மானங்கள் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்டதுடன் ஈழத்தமிழ் சிறப்பு அகதிகள் முகாம்களை மூடுக! என்ற தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

அக்கூட்டத்தில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

**சுதந்திரத் தமிழீழம் - பொது வாக்கெடுப்பு**

உலக வரலாற்றில் கொடிய தாக்குதல்களால் நடத்தப்பட்ட மனிதப் பேரழிவுகளுள் ஒன்றுதான் இலங்கைத் தீவில் இந்த அரசாங்கம் நடத்தியது.

சின்னஞ்சிறு பிஞ்சுக்குழந்தைகள், தாய்மார்கள், முதிர்வயதினர் உள்ளிட்ட, போரில் ஆயுதம் ஏந்தாத தமிழ் மக்கள் மிகக் கோரமான முறையில், உலகம் தடைசெய்த நாசகாரக் குண்டுகளை வீசி, இந்திய அரசும், அணு ஆயுத அரசுகளும் வழங்கிய ஆயுதங்களைப் பயன்படுத்தி, விடுதலைப் புலிகள் உள்ளிட்ட மூன்று இலட்சம் தமிழர்கள் கொன்று குவிக்கப்பட்டனர்.

### தரணியில் வாழ் தமிழர்களின் கடமை

இந்தப் படுகொலைக் குற்றத்தைப் புரிந்த அரசாங்கத்தை அனைத்துலக நீதிமன்றக் கூண்டில் நிறுத்த வேண்டிய கடமை, தாயகத் தமிழர்களுக்கும், தரணி வாழ் தமிழர்களுக்கும் மனித உரிமைகளை காக்க வேண்டிய அனைத்து உலக நாடுகளுக்கும் தலையாய கடமை என்பதால், அதற்கு உரிய அனைத்து உலக விசாரணையை நடத்துவதற்கு விரைவுபடுத்தியாக வேண்டும்.

தமிழர்கள் எழுப்பிய மரண ஓலம், இப்பொழுதுதான் மெல்ல மெல்ல உலகத்தின் மனச்சாட்சியைத் தட்டத் தொடங்கியிருக்கின்றது.

### மௌனியை முறித்தன

உலகில் எங்கே இனக்கொலை நடைபெற்றாலும், அதனைத் தடுக்கவும், மேலும் தொடராமல் வழிவகை செய்யவும், குற்றம் புரிந்த.கொடியோரைக் கூண்டில் நிறுத்தவும் கடமையாற்ற வேண்டிய ஐ.நாவின் மனித உரிமை ஆணைக்குழுவில், 2009-ம் ஆண்டில் இந்திய, சீன, கியூப அரசுகள், இலங்கை அரசாங்கத்திற்கு ஆதரவாகச் செயல்பட்டு நீதியின் மௌனியை முறித்தன.

கடந்த 2012-ம் ஆண்டில், மனித உரிமைகள் பேரவை கூடுவதற்கு முன்பாகவே, ஒரு நாட்டுப் பிரச்சினையில் இன்னொரு நாடு தலையிடக்கூடாது என்று, இந்திய அரசின் பிரதிநிதி, ஐ.நா அமைப்பில் அக்கிரமமான கருத்தைப் பதிவு செய்தபோது, மன்மோகன் சிங் அரசின் முகத்திரையைக் கிழித்து, முதல் கண்டன அறிக்கையை பெப்ரவரி 28-ம் திகதி கழகப் பொதுச்செயலாளர் வைகோ கொடுத்தார்.

### ஆட்டுத்தோலைப்போர்த்திக்கொண்டது

ஐ.நா மன்றத்தின் மார்சுகி தருஸ்மன் தலைமையிலான மூவர் குழு அறிக்கை, இலங்கை அரசு நடத்திய இனப்படுகொலையை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்த போதிலும், உலகத்தின் கண்களில் மண்ணைத் தூவ, இலங்கை அரசு 'கற்றுக் கொண்ட பாடங்கள் நல்லிணக்க ஆணையம்' என்ற ஒரு மோசடிக் குழுவை அறிவித்து, உண்மைகளைக் குழிதோண்டிப் புதைத்து, அப்பட்டமான பொய்களை அறிக்கை ஆக்கியது. ஓநாய், ஆட்டுத்தோலைப் போர்த்திக் கொண்டது.

### நீர்த்துப் போகும் துரோகம்

ஆனால், எந்தவிதத்திலும் நீதிக்கு வழி காட்டாத மாய்மால வேலையாக, கடந்த மனித உரிமை பேரவைக்கூட்டத்தில் அமெரிக்கா கொண்டு வந்த கண்துடைப்பு அறிக்கையைக் கூட, மேலும் நீர்த்துப் போகச் செய்கின்ற துரோகத்தை இந்திய அரசு செய்தது.

மனித உரிமை ஆர்வலர்களும், புலம்பெயர் ஈழத்தமிழர்களும், படுகொலை குறித்து பன்னாட்டு விசாரணை நடத்த வேண்டும் என்று மனித உரிமைப் பேரவையின் தற்போதைய உறுப்பு நாடுகளின் அரசுகளிடம் தக்க தகவல்களைத் தந்து ஆதரவு திரட்டி வருகின்றனர்.

### நயவஞ்சமான வேலை

ஆனால், இப்படி நீதியின் வெளிச்சம் ஈழத்தமிழர்களுக்குக் கிடைத்துவிடாமல் தடுக்க, படுகொலைக் கூட்டுக் குற்றவாளியான இந்திய அரசு, நயவஞ்சமான வேலையைத் தற்போது தீவிரப்படுத்தியிருக்கின்றது.

இலங்கை இனப்பிரச்சினைக்கு, இலங்கை அரசு மூலமாக, நாங்களே முன்னின்று தீர்வை ஏற்படுத்திக் கொடுப்போம்; நீங்கள் இதில் தேவைக்கு அதிகமாகத் தலையிட வேண்டாம் என்று இந்திய வெளியுறவுத் துறையின் மூலம், தூதரகங்கள் மூலமும், திரைமறைவுக் காரியங்களில் வேகமாக ஈடுபட்டு வருகின்றது.

இந்தியாவில் ஏழு கோடி தமிழர்கள் உள்ளனர். எனவே, ஈழத்தமிழர் பிரச்சினையில், இந்திய அரசுக்கு அக்கறை இல்லாமல் போகுமா? என்ற எண்ணத்தைப் பரப்பி வருகின்றது.

### மன்னிக்க முடியாத துரோகம்

இந்திய அரசு, ஆயுதங்கள், ராடர்களை அள்ளிக் கொடுத்தது மட்டுமன்றி, இந்திய கடற்படையை நேரடியாகப் போரில் ஈடுபடுத்தியது. மேலும் தமிழர் பகுதிகள் மீது வான்வெளித் தாக்குதல் நடத்த, இந்திய விமானப் படையின் நவீன கருவிகளையும் பயன்படுத்தியது.

இந்தியாவின் முப்படைத் தளபதிகளும் வரிசையாக இலங்கைக்குச் சென்று, இராணுவத் தாக்குதலை இயக்கினர். இவையெல்லாம் மன்னிக்க முடியாத துரோகமாகும்.

### கலாசாரப் படுகொலை நடக்கின்றது

கூட்டுக்குற்றவாளி என்பதால்தான், ஐரோப்பிய ஒன்றியம் இலங்கை மீது பொருளாதாரத் தடை விதித்தபோது, வேண்டும் என்றே அதனை எதிர்க்க, இலங்கையோடு இந்திய அரசு பொருளாதார, வணிக ஒப்பந்தங்களைச் செய்தது.

தற்போது, இலங்கைத் தீவில் உள்ள தமிழர்களின் நிலைமை, கற்பனைக்கு அப்பாற்பட்ட அவலம் ஆகும். தமிழர் பகுதிகளில் சிங்களக் குடியேற்றம் வேகமாக நடக்கின்றது. தமிழர் தாயகமே, இராணுவ முகாம் ஆகிவிட்டது. மாவீரர் துயிலகங்களை இடித்து, இராணுவ முகாம் ஆக்கிவிட்டனர்.

தமிழர்களின் வழிபாட்டுத் தலங்களை ஆக்கிரமித்து, பௌத்த விகாரைகளைக் கட்டுகின்றனர். ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக வாழ்ந்த தமிழர்களின் மொழி, இன அடையாளமே இல்லாமல் அழிக்கின்ற கலாசாரப் படுகொலை நடக்கின்றது.

### இந்திய அரசு வஞ்சகம் செய்கிறது

இத்தனை கொடுமைகளையும் ஏவியுள்ள இலங்கை ஜனாதிபதி மகிந்தவை திரும்பத் திரும்ப இந்தியாவுக்கு வரவழைத்து, அவருக்கு இந்தியாவில் எதிர்ப்பே கிடையாது என்று உலகுக்குச் சொல்ல, இந்திய அரசு வஞ்சகம் செய்கின்றது. அந்த சதித்திட்டத்தின் ஒரு கட்டம்தான், கடந்தாண்டு செப்ரெம்பர் 21-ம் நாள் சாஞ்சிக்கு, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வருவதற்கு ஏற்பாடு செய்தது. மத்திய பிரதேச பாரதிய ஜனதா அரசும், அந்த வஞ்சகத்துக்கு துணை போனது.

தற்போது, மனித உரிமை பேரவையின் கூட்டம், மார்ச் மாதத் தொடக்கத்தில் ஜெனிவாவில் நடக்கவிருப்பதால், இந்திய அரசு துரோகத்தின் அடுத்த கட்டமாக, பீகாரில் உள்ள புத்தகாய விற்கும் , ஆந்திர மாநிலத்தின் திருப்பதிக்கும், பெப்பவரி 8ஆம் திகதி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வருவதற்கான ஏற்பாட்டைச் செய்திருக்கின்றது.

அன்பையும், கருணையையும் மனித குலத்துக்குப் போதித்த புத்தர் பெருமான் ஞானம் பெற்ற புத்தகாயாவின் போதிமரத்தைத் தரிசிக்கக் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வருகின்றாராம். அவருக்கு கயா மண்ணை மிதிப்பதற்கே அருகதை இல்லை .

### பிரதமரின் இல்லத்தை முற்றுகையிடுவோம்

செப்டெம்பர் 21 ஆம் திகதி அன்று , மத்திய பிரதேசத்தில் நடத்திய அறப்போரின்போது, இனிமேல் இந்தியாவின் எந்தப் பகுதிக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வந்தாலும், டில்லியில் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் இல்லத்தை, மறுமலர்ச்சி தி.மு.கழகம் முற்றுகை இடும் அறப்போராட்டத்தை நடத்தும் என்று கழகம் அறிவித்தது.

### கள்ள மௌனம் சாதிக்கிறது

தமிழகத்தின் தன்மான உணர்ச்சிக்குச் சவால் விடும் திமிரோடு, தமிழ் மக்களின் இருதயங்களில் சூட்டுக் கோலைத் திணிப்பது போல, இலங்கையில் இந்துக் கோவில்களை உடைத்து தமிழ்நாட்டின் தலைவாயில் உள்ள, இந்துக்கள் வழிபடும் திருத்தலமான திருப் பதிக்கு அழைத்து வந்து வரவேற்கும் அக்கிரமத்தையும் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு செய்கிறது. இந்தியாவிற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வர ஏற்பாடு செய்துள்ள இந்திய அரசு , இது குறித்த செய்திகள் எதுவும் வெளிவரவிடாமல் கள்ளமௌனம் சாதிக்கிறது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பீகாருக்கும் சென்றார். ஏன்? தமிழ்நாட்டின் தலைவாயிலில் உள்ள திருப்பதி கோவிலுக்கும் சென்று வழிபட்டார் என்று உலகத்திற்கு சொல்லுவதற்காகவே, மத்திய காங்கிரஸ் அரசு திட்டமிட்டு, இந்தத் துரோத்திலும், அராஜகத்திலும் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றது.

### திருப்பதியில் கறுப்புக்கொடிப் போராட்டம்

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வருகையை எதிர்க்கவும், தமிழ் இனத்துக்குத் துரோகம் இழைக்கும் இந்திய அரசுக்குக் கண்டனம் தெரிவிக்கவும், பெப்ரவரி 8ஆம் திகதி , டில்லியில் பிரதமர் இல்ல முற்றுகைப் போராட்டத்தையும், திருப்பதியில் கறுப்புக்கொடி அறப்போரையும் கழகம் அறிவித்துள்ளது.

### குற்றவாளிக்கூண்டில் நிறுத்த வேண்டும்

ஜெனிவாவில், மார்ச் முதல் வாரத்தில் நடைபெற இருக்கின்ற ஐக்கிய நாடுகள் அவையின் மனித உரிமை பேரவையின் 22 ஆவது கூட்டத்தில் தமிழ் படுகொலை செய்த இலங்கை அரசாங்கம் மீது பன்னாட்டு நீதி விசாரணை நடத்துவதற்கு, உலகெங்கும் உள்ள மனிதவுரிமை உணர்வாளர்களும், புலம்பெயர் ஈழத்தமிழ் மக்களும் மேற் கொள்ளும் முயற்சிகள் வெற்றி பெற்று ,குற்றவாளிக்கூண்டில் இலங்கை அரசு நிறுத்தப் படவேண்டும் என்றும்,

இனக்கொலையைக் கூட்டுக் குற்றவாளியான இந்திய அரசு, இதற்கு எதிராக, மனித உரிமை கவுன்சிலில் இலங்கை அரசுக்கு ஆதரவாகச் செயற்படக்கூடாது என்றும், இதுகாறும் செய்து வந்த துரோகத்தைத் தொடரக் கூடாது என்றும் வலியுறுத்த வேண்டும்.

### பொது வாக்கெடுப்பு

இலங்கைத் தீவில் உள்ள தமிழர்களும், உலகெங்கிலும் உள்ள புலம்பெயர் தமிழர்களும் வாக்கு அளிக்கும் விதத்தில் ,சுதந்திரத் தமிழ் ஈழத்திற்கான பொது வாக்கெடுப்பு நடத்துவதற்கு உரிய ஆதரவை, இந்தியத் துணைக்கண்டத்தில் வாழுகின்ற பல்வேறு தேசிய இன மக்களிடமும், உலகநாடுகளிலும் உருவாக்கும் பணியை முன்னெடுத் துச் செல்வது என்றும், இப்பொதுக் குழு தீர் மானிக்கின்றது என அறிவிக்கப்பட்டுள்ளது. (செ-11)

## பிரம்படி வி.கழகத்தின் கிரிக்கெட் முடிபுகள்

கொக்குவில் பிரம்படி விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 9 பேர் 10 பந்துப் பரிமாற்றத்தினை கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் முதலாவது கால் இறுதிப்போட்டியில் மல்லாகம் ஸ்ரீமுருகன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கார்னல் போம்ஸ் விளையாட்டுக்கழகம் மோதியது.

இதில் மல்லாகம் ஸ்ரீமுருகன் விளையாட்டுக்கழகம் 13 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இரண்டாவது கால் இறுதிப் போட்டியில் பொற்பதி இந்து விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து காமாட்சி விளையாட்டுக் கழகம் மோதியது.

இதில் காமாட்சி விளையாட்டுக் கழகம் 5 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது.

முதலாவது அரையிறுதிப்போட்டியில் மல்லாகம் ஸ்ரீமுருகன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து காமாட்சி விளையாட்டுக் கழகம் மோதியது. இதில் மல்லாகம் ஸ்ரீ முருகன் விளையாட்டுக் கழகம் 3 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.



தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் 2013க்கான இல்ல விளையாட்டுப் போட்டியின் ஆரம்ப நிகழ்வான வீதி ஓட்டப்போட்டி அண்மையில் பாடசாலை அதிபர் கு.வேல்சிவானந்தம் அவர்களினால் கொடி அசைத்து ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ஆண்களுக்கான போட்டியில் ம.தர்ஜன், ம.ஜனனன், சோ.நிறோஜன் முறையே 1-ம், 2-ம், 3-ம், இடங்களைப் பெற்றுக்கொண்டனர். இதேபோல் பெண்களுக்கான போட்டியில் பா.சானு, ம.ஜன்சிகா, ச.சரண்யா ஆகியோர் 1-ம், 2-ம்,3-ம் இடங்களைப் பெற்றுக்கொண்டனர்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வெளிநாட்டுக்கு அனுப்புவ...

சேர்ந்த 10 தொடக்கம் 15 வரையானவர்களிடம் 20தொடக்கம் 30லட்சம்ரூபாய்வரையில் பணம் வாங்கியுள்ளார்.

இத்தொகை அதிகமாக இருக்கலாம் என யாழ்.பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு பணம் வாங்கியவர்களில் பெரும்பாலானவர்களிடம் கனடா நாட்டிற்கு அனுப்புவதாகக் கூறியே பணத்தினைப்பெற்றுள்ளார்.

பணத்தினைவழங்கியவர்கள் எப்போது நாம்வெளிநாடுசெல்வோம் என கேட்டு வந்த நிலையில் அவரும் சிறிது காலத்தில் போகலாம் என சாக்குப் போக்கான காரணங்களினை கூறி வந்துள்ளார்.

காலம் செல்லச் செல்ல தாம் ஏமாற்றப்படுவதனை உணர்ந்த இளைஞர்கள் ஏமாற்றுக்காரரிடம் தம்மால் வழங்கப்பட்டபணத்தினைமீளத் தருமாறு கோரியுள்ளனர்.

எனினும்அதனை அவர் வழங்க மறுத்ததோடு சிலரினை அச்சுறுத்தியும் உள்ளார்.

சம்பவம் தொடர்பில் யாழ்.விசேட குற்றத்தடுப்புப் பொலிஸாரிடம் முறையிட்டதனையடுத்து செயலில் இறங்கிய விசேட பொலிஸார் அவர் இருபாலையில் தனது வீட்டிலிருந்த வேளை நேற்று முன்தினம் மதியம் கைது செய்யப்பட்டார்.

மேலும் இச்சம்பவம் தொடர்பில் தாம் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் கைது செய்யப்பட்ட மோசடிக்காரரிடம் நல்லூர், கொழும்புத்துறை, கோப்பாய், திருநெல்வேலி, புத்தூர்போன்ற இடங்களில் உள்ளவர்கள்பணம்கொடுத்துள்ளமை தெரிய வந்துள்ளதாகவும் யாழ்.பொலிஸார் தெரிவித்தனர்.

இவர் கைது செய்யப்படுவதற்கு முன்னர் வெளிநாடு ஒன்றுக்கு தப்பிச் செல்ல முயற்சித்தார் எனவும் கூறப்படுகிறது.

யாழில் இவ்வாறான பண மோசடிகள்தீவிரமாகக்காணப்படுவதனால் இவ்வாறான முகவர்களிடம் பெருந்தொகைப் பணங்களினை வழங்க வேண்டாம் என பொலிஸார்பொது மக்களை எச்சரித்துள்ளனர். (செ-4)


## Deutsch, Dutch, French, English

**2013 புதிய வகுப்புகள் விபரம்**

ஜேர்மன் - டொச், நெதர்லாந்து - டச்

தூதரக பரீட்சைகளுக்கான புதிய வகுப்புக்கள் அனைத்தும் ஆரம்பமாகி நடைபெறுகின்றன. மேலும் London செல்பவர்களுக்கான ஆங்கிலம் AI, French, Italian வகுப்புக்களும் ஆரம்பமாகின்றன.

குறிப்பு: திங்கள் முதல் புதிய வகுப்புகளுக்கான பதிவுகள் நடைபெறும்.

**தொடர்பு: விவேகானந்தா அக்கடமி**

221/1 மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

Tel: Hotline, 0774842464

(சி-2252)



## A/L பரீட்சை முடிவின் பின்னர்...

வெளிநாட்டில் கல்வி பயில விரும்பினால் பகுதிநேரமாக உழைத்துக்கொண்டே கல்வி கற்கலாம். நியூசிலாந்து, ஆஸ்திரேலியா, மலேசியா, போலந்து, சைப்பிரஸ் நாடுகளுக்குரிய விசா ஆலோசனை

திசைகாட்டி (பிறைவேற்) லிமிட் (PV82703)

175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 021 221 9016



எல்லா நாள்களும் காலை 8.30 - பி.ப 6.30 வரை திறந்திருக்கும்.

(சி-23342)


# 15 நாடுகளின் தூது...

ரெய்ன் ஆகிய நாடுகளின் தூதுவர்களும் ருவாண்டா, பப்புவா நியுகினியா, உகண்டா ஆகியநாடுகளின்உயர் ஆணையர்களும் லெசோதோ நாட்டின் இராஜதந்திர விவகாரங்களுக்கு பொறுப்பான அதிகாரியுமே திருகோணமலைக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

இலங்கையில் சுமார் 40 நாடுகளின் தூதரங்கள் மட்டுமே அமைந்துள்ளன.

புதுடில்லியில் உள்ள சுமார் 80 நாடுகளின் தூதரங்களே இலங்கைக்கான ராஜதந்திர பணிகளையும் ஆற்றிவருகின்றன. இத்தகைய நாடுகளின் தூதரகங்களில்15பேரேகொழும்புக்கு வரவழைக்கப்பட்டனர்.

இவற்றில் கசகஸ்தான், வெனிசுவேலா, புர்கினோ பாசோ, உகண்டா, பெரு ஆகியநாடுகள் ஐ.நா. மனிதவுரிமைகள் பேரவையில் அங்கம் வகிப்பவை என்பது குறிப்பிடத்தக்கது. (எ-11)

# சுதந்திரதினத்...

65-வது சுதந்திர தினத்தை முன்னிட்டு ஆயிரத்து 270 கைதிகளுக்குபொதுமன்னிப்பு வழங்கும் வைபவம் நேற்று கொழும்பு வெலிக்கடை சிறைச்சாலையில் இடம் பெற்றது.

ஜனாதிபதியின் அனுமதிக்கு அமைய சிறு குற்றங்கள் செய்து அபராதம் செலுத்த முடியாமல் இருந்த கைதிகளே இவ்வாறு விடுதலை செய்யப்பட்டுள்ள

# இலங்கைக்...

உருவாக்கும். பேதங்கள் உருவாகினால் அது நாட்டை அழிவுக்கே இட்டுச்செல்லும். பெற்றுக் கொள்ளப்பட்ட சுதந்திரத்தை பாதுகாப்பதற்கான கடப்பாடு அரசாங்கத்திற்கு மட்டுமல்ல எதிரணிக்கும் இருக்கின்றது என்றார். (செ-11)


## கிறிஸ்ரல் சென்ரர்
நெல்லியடி

**A/L DAY CLASS**

வர்த்தகப் பிரிவு

**ஆரம்பம்: 06.02.2013 மு.ப. 9.00 (புதன்)**

ஆசிரியர் குழு:
Eco - S. வரதராஜன்
Com - B.S. பசில்
Acc - B. புஸ்பாகரன்

ஒவ்வொரு பாடமும் வாரத்தில் 5 மணித்தியாலங்கள் நடைபெறும்.

- நிர்வாகி

(சி-2341)



நாளை

**DAY CLASS**

(கலை, வணிகப் பிரிவுகள்)

காலை 8 மணி

**DMI**
JAFFNA



## ALLIANCE FRANÇAISE DE JAFFNA

French மொழி கற்பதற்கு French Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட வடமாகாணத்திலுள்ள ஒரேயொரு நிறுவனம் Alliance Française de Jaffna மட்டுமே. இவ்அரிய சந்தர்ப்பத்தினை தவறவிடாதீர்கள். மேலும் தரமான CERTIFICATEஐ பெறுங்கள்.

புதிய வகுப்புக்கள் விரைவில்.. T.P.021.222.8093

61, Kachcheri-Nallur Road, Jaffna

(ரக்கா வீதியும் கச்சேரி-நல்லூர் வீதியும் இணையும் சந்தியில்)


## 769, சிற்றூர்தி சேவைச் சங்கம்
## காங்கேசன்துறை, யாழ்ப்பாணம்.

(1996 - 2002 வரை எமது சங்கத்தின் தலைவராகவும் இன்று வரை எமது சங்கத்தின் முக்கிய உறுப்பினராகவும் சிறப்புற பணியாற்றி வருகிறார்)

### பாராட்டி வாழ்த்துகின்றோம்



கடந்த பத்து ஆண்டுகளாக யாழ்.பிராந்திய கூட்டிணைக்கப்பெற்ற பஸ் கம்பனிகளின் இணையத் தலைவராகவும் இலங்கை தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் நிர்வாக உறுப்பினராகவும் கடந்த மூன்று ஆண்டுகளாக வட இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர் சங்க தலைவராகவும் சேவையாற்றி தற்போது இலங்கை தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் உபதலைவராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள

### திரு.பொன்னுத்துரை கெங்காதரன்

அவர்கள் திக்கெட்டும் புகழ்பரப்பி சேவை தனில் துல்லியமாய்ப் பிரகாசித்து நலத்துடனும் சிறப்புடனும் மேன்மை பெற மனமகிழ்வுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்


உரிமையாளர்கள், பணியாளர்கள், சாரதி நடத்துநர்கள்
சிற்றூர்திச்சேவை சங்கம், காங்கேசன்துறை (769).

Valampurii Graphics

(1656)

# மரண அறிவித்தல்

## ஆழ்வார் நல்லையா



பறாளாய் வீதி சுழிபுரத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆழ்வார் நல்லையா 04.02.2013 அன்று காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற ஆழ்வார் இரத்தினத்தின் புதல்வனும், சின்னக்கிளி (ராசம்மா) யின் அன்புக் கணவரும் , சதீஸ்குமார், இலக்கணகுமார் (டோகா) , ஜெயக்குமாரியின் அன்புத் தந்தையும், மகேஸ்வரி, அன்னபாக்கியம் (அமரர்) பவளராணி, திருச்செல்வம் (அமரர்), புஸ்பராணியின் அன்புச் சகோதரனும், ராஜேஸ்வரி, நளினா (டோகா), ராஜ்குமாரின் மாமனாரும், சிந்துஜன் (டோகா), சுதர்சன், நிதர்சன், ஜிந்துஜா, லக்ஷனா (டோகா), பிரியந்தனின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 05.02.2013 செவ்வாய்க்கிழமை (இன்று) மு.ப 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்திற்காக திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
குடும்பத்தினர்
தொ.பே:- 0217904496

பறாளாய் வீதி,
சுழிபுரம்.

(1660)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.02.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org